# அத்தியாயம் - 1

# விஞ்ஞான முறையில் புலன் (பொது) (அ) விசாரணை

குற்றங்களை விசாரணை செய்யும்போது விஞ்ஞான ரீதியில் தரப்படும் சாட்சியங்கள் அனேகமாக அனைத்து வழக்குகளிலும் குறிப்பாக கொலை, கூட்டுக்கொள்ளை, கொள்ளை, கன்னக்களவு, சாலை விபத்து வழக்குகள், கற்பழிப்பு, பொய் தாஸ்தாவேஜு வழக்குகள் மற்றும் விஷம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் மிகவும் உயர்ந்ததாக கருதப்படுகின்றன. ஆகையால் விஞ்ஞான முறையில் குற்றங்களை கண்டுபிடிக்கும் நிபுணர்களின் உதவியை பெறுவது மிகவும் உபயோகமாக இருக்கும். மேலும் குற்றவாளிகளையும் அவர்கள் செய்த குற்றங்களையும் இணைத்து கூறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். விஞ்ஞானம் என்பது மேற்கொண்டு புலன் விசாரிப்பதற்கும் வழக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களை சேகரிப்பதற்கும் உதவும் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். ஆகையால் விசாரணை செய்யும் அதிகாரிகள் வெளிப்படையான சாட்சியங்களை சேகரித்து அவைகளைப் பற்றி நிபுணர்களின் கருத்தைக் கேட்டு அறிவது மிகவும் அத்தியாவசியமாகும்.

**வெளிப்படையான சாட்சியங்கள்:**

எந்த ஒரு நபரும் ஒரு குற்றம் செய்யும்போது குற்றம் நடந்த இடத்தில் ஏதாவது தடயங்களை விட்டுச் செல்வதும், அல்லது ஏதாவது ஒன்றினை எடுத்துச் செல்வதும் வழக்கமாகும். (Locard's Exchange Principle).

ஆகையால் வெளிப்படையான சாட்சியங்களையும் விசாரிப்பது இவைகளுக்கு மிகவும் அவசியம். (1) குற்றத்திற்கு தொடர்புள்ள ஒன்றுக்கும் மேற்பட்ட சாட்சியங்கள் (2) போதுமான சாட்சியங்கள் இல்லாமல் இருக்கும்போது அதை தொடர்புடையதாக்கவும் அதை உறுதிப்படுத்தவும் (3) சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சந்தேகப்பட்டவர்கள் கொடுத்த வாக்குமூலத்தை பரிசோதிக்கவும், உறுதிப்படுத்தவும் (4) சில சாட்சியங்களை குற்றவாளிக்கும் குற்றத்திற்கும் சம்பந்தபடுத்த சாதாரண முறை விசாரணைகளால் உறுதிப்படுத்த முடியாமல் போகும் தறுவாயிலும் பலவகையான வெளிப்படையான துப்புகள் குற்றம் நடந்த இடத்தில் இருக்கின்றன.

(அ) கைரேகைகள், காலடி அல்லது காலணி பதிவுகள், ஆயுதங்களை உபயோகப்படுத்திய அடையாளங்கள் - சக்கரத்தின் அடையாளங்கள், பற்களின் அடையாளங்கள்

(ஆ) கையெழுத்து போன்ற பதிவேடுகள், தட்டெழுத்துகளை, கையெழுத்துகள், எழுதுவதற்கு உபயோகப்படுத்திய பொருட்கள்.

(இ) துப்பாக்கி போன்ற கருவிகள் வெடித்த தோட்டாக்கள் வெடித்த குண்டுகளின் தோட்டாக்கள், குண்டுகளில் இருக்கும் மற்ற பொருட்கள், வெடித்த குண்டுகளில் இருந்த ரவைகள் மற்றும் வெடிமருந்து பொருட்கள்.

(ஈ) மண், தூசி, மற்றும் சேதமடைந்த உடைந்துபோன பொருட்கள்.

(உ) தலைமுடி, நூல், துணி முதலியன.

(ஊ) இரத்தக்கறைகள், விந்துகள், உமிழ்நீர், இதர திரவப்பொருட்கள்.

(எ) வர்ணம் போன்ற பொருட்கள் கண்ணாடிகள், மரங்கள், எலும்புகள் முதலியன.

**குற்றம் நடந்த இடத்தைப் பார்வையிடுதல்**

குற்றம் நடந்த இடத்தை உடனடியாக பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதே விசாரணை செய்யும் அதிகாரியின் முக்கிய கடமையாகும். அதை விசாரணை செய்யும் அதிகாரியே செய்யலாம் அல்லது அருகிலிருக்கும் நிபுணர்களை உடனடியாக குற்றம் நடந்த இடத்திற்கு வரும்படி அழைக்கவேண்டும்.

விசாரணை செய்யும் அதிகாரி குற்றம் நடந்த இடத்திற்கு வந்தவுடன் குற்றம் நடந்த இடத்தைப்பற்றி ஒரு விரிவான குறிப்பு தயாரிக்கவேண்டும். வரைபடம் ஒன்று வரைந்து பொருட்கள் எங்கு எந்த நிலையில் இருந்தன என்று குறிப்பிட வேண்டும். பொருட்களை கலைக்காமல் அப்படியே புகைப்படமும் எடுக்கவேண்டும். மேலும் விசாரணை செய்யும் அதிகாரி குற்றம் நடந்த இடத்தில் ஒரு முறையான வரைபடமும் தயாரிப்பதோடு அங்குள்ள சாட்சிகளை விசாரித்து குற்றம் நடந்த இடம் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்தல் வேண்டும்.

**நிபுணர்கள் தேவைப்படும் நேரங்கள்:**

பின்கண்ட இடங்களில் நிபுணர்கள் இருக்கிறார்கள்:-

(அ) இயக்குனர் - விஞ்ஞான ஆய்வுகூடம் ஹைதராபாத்

(ஆ) மருத்துவ நிபுணர் - நோயை மற்றும் அதற்குண்டான காரணத்தையும் தெரிவிப்பவர் - ஹைதராபாத்.

(இ) இரத்த பரிசோதனை நிபுணர் - கல்கத்தா

(ஈ) தாவர இயல் நிபுணர் - ஹைதராபாத்

(உ) பௌதிக இயல் மருத்துவ நிபுணர் - ஹைதராபாத்

(ஊ) துப்பாக்கி மற்றும் துப்பாக்கி குண்டுகள் பற்றி பரிசோதனை செய்யும் நிபுணர், ஹைதராபாத்.

(எ) பதிவேடுகளின் நிபுணர் - ஹைதராபாத்

(ஏ) கைரேகை, காலடி நிபுணர்கள் - புதுச்சேரி, சென்னை மற்றும் கல்கத்தா

(ஐ) வெடிமருந்து ஆய்வாளர் - சென்னை

(ஒ) தங்கம் மற்றும் கள்ள நாணயங்கள் பரிசோதனை நிபுணர்- ஹைதராபாத்

(ஓ) பொதுமேலாளர் பாதுகாப்பு அச்சகம் டிபிரஸ், நாஸிக் (மகாராஷ்டிரா மாநிலம்) போலி ரூபாய் நோட்டுகளையும் பத்திரத்தாள் மற்றும் தபால்தலைகளையும் பற்றியும் ஆராய்ந்தறிவிக்கும் பிரிவு.

(ஔ) மண்டல பொறியியல் நிபுணர் - தொலைபேசி மற்றும் மின்சார கம்பிகளைப்பற்றி ஆராய்ந்து அறிவிக்கும் பிரிவு.

## இந்த நிபுணர்கள் பின்கண்ட முறையில் புலன் விசாரணை செய்து அறிவிப்பார்கள்

### மருத்துவ நிபுணர் செய்யும் உதவி:

1. (அ) பாதிக்கப்பட்டவரைப் பற்றிய அடையாளங்கள்.

(ஆ) கொலை, தற்கொலை அல்லது தற்செயலாய் ஏற்பட்ட விபத்து

(இ) இறந்து போன நேரம்/ காயங்கள் - மரணமடையும் முன்பா அல்லது பின்பா என்பது.

(ஈ) இறப்பதற்குண்டான காரணம்.

(உ) எந்த வகையான ஆயுதம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது – கூர்மையான ஆயுதமா? கூர்மையற்ற ஆயுதமா? துளைத்துக்கொண்டு போயுள்ளதா அல்லது வெட்டப்பட்டுள்ளதா?

(ஊ) பாதிக்கப்பட்டவரை எதிரி முன்புறமிருந்து தாக்கியுள்ளாரா அல்லது பின்புறமிருந்து தாக்கியுள்ளரா? வலதுபுறமா அல்லது இடதுபுறமா?

(எ) அந்த காயம் அவராகவே உண்டாக்கிக்கொண்டாரா?

(ஏ) எதிரி காயமடைந்து இருப்பாரா, இல்லையாயென்பது.

(ஐ) இறந்து போனது ஆணா, பெண்ணா என்பது– உயரம், வயது மற்றவைகள் - பிணம் அழுகி மிகவும் கெட்டுப்போயிருக்கும் சமயங்களில் அதைப்பற்றிய விவரம்.

(ஒ) உடலுறவு சம்பந்தப்பட்ட வழக்குகளில் பாதிக்கப்பட்டவரின் வயது.

(ஓ) கற்பழித்ததாக புகார் செய்யப்பட்ட வழக்குகளில் பாதிக்கப்பட்டவர் உண்மையிலேயே பாதிக்கப்பட்டுள்ளாரா இல்லையா என்பது பற்றியும் அப்படி செய்யப்பட்டு இருந்தால் அது எவ்வாறு நிகழ்ந்து இருக்கும் என்பதையும் கூறுவார்.

(2) இரத்தப்பரிசோதனை நிபுணர், கறை இரத்தக்கறையா இல்லையா என்பதையும், இது மனிதர்களின் இரத்தமா அல்லது மிருகங்களின் ரத்தமா என்பதையும் மனிதரின் இரத்தமானால் அது எந்த குரூப்பை சேர்ந்தது என்றும் மிருகங்களின் இரத்தமானால் அது எந்தவகை மிருகத்தின் இரத்தமென்றும், மேலும் நிபுணர் விந்து, உமிழ்நீர் மற்றும் உடலின் திசுக்களைப் பற்றியும் எலும்புகள் பற்றியும் கூறுவார். மற்றும் இவர் அவசியப்பட்ட காலங்களில் குழந்தைகளின் பெற்றோர் யார் என்பதையும் கூறுவார்.

(3) கால்நடை மற்றும் தாவரக்கலை நிபுணர் இரத்த கறைகளைப்பற்றியும் மற்றும் இரத்தம், விந்து, உமிழ்நீர், சிறுநீர் இவைகளைப்பற்றியும் மற்றும் அவரே கால்நடை அல்லது தாவரங்கள், மரங்கள், மரத்தூள்கள், கால்நடை மற்றும் காய்கறிகள் சம்பந்தமாகவும், தலைமுடியைப்பற்றியும், துணிகளைப்பற்றியும் கூறுவார். மேலும் இவர் பற்களைப்பற்றியும், தாவர வகைகள் மற்றும் தாவர வகைகளில் சம்பந்தப்பட்ட திரவ பொருட்களைப்பற்றியும் கூறுவார். மனிதர்களின் அடையாளங்களைப் பற்றியும், இறந்த ஒருவரின் மண்டை ஓட்டை வைத்து அவருடைய புகைப்படங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து இறந்து போனது அவர்தான் என்று கூறுவார்.

(4) இராசாயன விஞ்ஞானி அல்லது இராசாயன நிபுணர் உலோகங்களைப் பற்றியும் அவைகள் எந்த சதவீதத்தில் என்னென்ன உலோகங்கள் கலந்துள்ளன என்பது பற்றியும் வர்ணங்களைப்பற்றியும், நஞ்சு வகைகளைப்பற்றியும் கூறுவார். மேலும், இவர் மது அருந்தி உள்ளவர்களை பரிசோதனை செய்து அவர்களின் இரத்தத்தில் மற்றும் சிறுநீரில் எந்த அளவு சாராயம் கலந்துள்ளது என்பது பற்றியும் கூறுவார். மேலும், இவர் மை (Ink) காகிதம், பூமியிலிருந்து கிடைக்கும் எண்ணெய்களைப் பற்றியும் கூறுவார்.

(5) பௌதீக சாஸ்திர நிபுணர் உலோகங்களைப்பற்றியும் மை, வர்ணங்களைப்பற்றியும், மண், கண்ணாடி, போன்றவைகளைப் பற்றியும் கூறுவார், மேலும் எந்தெந்த பொருட்கள் எந்தெந்த மூலப்பொருட்களால் செய்யப்பட்டு உள்ளன என்றும் கூறுவார். மேலும் இவர் பொருட்களைப்பற்றியும் அதன் அடையாளங்களையும் சக்கர அடையாளங்களையும் கிழிந்த துணிகள் அல்லது காகிதங்களைப் பற்றியும் அணிகலன்களைப்பற்றியும் கூறுவார். மேலும் இவர் ஏற்கனவே எழுதி அலைக்கப்பட்டுள்ள அடையாளங்களைப் பற்றியும் கூறுவார்.

(6) துப்பாக்கி மற்றும் துப்பாக்கி குண்டுகளைப்பற்றியும் பரிசோதனை செய்யும் நிபுணர் துப்பாக்கியால் சுடப்பட்ட வழக்குகளில் எந்த வகையான துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளது, அதன் அடையாளங்கள், தோட்டாக்களின் விவரங்கள், எந்த வகையான துப்பாக்கியால் எவ்வளவு தூரத்திலிருந்து சுடப்பட்டுள்ளது, அல்லது எத்தகைய வெடிப்பொருட்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் ஒருவரின் உடலில் துப்பாக்கி குண்டுகள் இருந்தால் அந்த குண்டுகளைப்பற்றியும் குற்றம் நடந்த இடத்தைப்பற்றியும் கூறுவார்.

(7) பதிவேடுகளின் நிபுணர் குற்றத்தில் சம்பந்தப்பட்ட பதிவேடு யாருடைய கையெழுத்து, டைப் செய்யப்பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட பதிவேடுகளைப்பற்றியும் கூறுவார். மேலும் இவர் ஒரு பதிவேடு எப்படி எழுதப்பட்டுள்ளது. எத்தகைய டைப்ரைட்டரில் டைப் செய்யப்பட்டுள்ளது. ஒரு பதிவேடு திருத்துவதற்கு முன்பு அதில் என்ன எழுதி இருந்தது? எப்படியாக அது மாற்றப்பட்டுள்ளது? எத்தகைய முறையில் அடித்து, திருத்தி எழுதப்பட்டுள்ளது. இதில் என்னென்ன கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன? மாற்றப்பட்டுள்ளன? எழுதிய பென்சிலின் அடையாளங்கள், பேனா, மை, அலைக்க முடியாத பென்சிலால் கலைக்கப்பட்டுள்ளது? மற்றும் இதைச் சார்ந்த மற்ற விவரங்களைப் பற்றியும் இவர் கூறுவார்.

(8) கைரேகை நிபுணர் குற்றம் நடந்த இடத்திலுள்ள கண்ணுக்குத்தெரியாத குற்றவாளிகளின் கைரேகைகளையும், காலடிகளையும் கண்டுபிடித்து விசாரணை செய்யும் அதிகாரிக்கு உதவுவார். சந்தேக நபர்களின் கைரேகைகளையும், குற்றம் நடந்த இடத்தில் காணப்பட்ட கைரேகைகளையும் ஒப்பிட்டு பார்த்து கூறுவார். மேலும் மாநில விஞ்ஞான அறிவியல் கூடமும், காலடிகளையும் குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த காலடி அல்லது ஷூவின் பதிவுகளையும் ஒப்பிட்டு பார்த்து அது யாருடைய காலடி அல்லது ஷூபிரிண்ட் என்று கூறுவார்.

(9) வெடிமருந்து ஆய்வாளர் வெடிமருந்து எந்தெந்த கூட்டுப்பொருட்களால் ஆனது என்பதை தெரிவிப்பார். இந்தியாவில் தென்மண்டலத்திற்காக ஒரு பிரிவு சென்னையில் உள்ளது. அதன் முகவரி வெடிமருந்து முதுநிலை ஆய்வாளர், தென்மண்டல பிரிவு, சாஸ்திரிபவன், 35 ஹாடோஸ் ரோடு, சென்னை.

(10) கள்ள நாணயங்கள் சம்மபந்தப்பட்ட வழக்குகளில் தன்னுடைய கருத்தைக்கூற கல்கத்தா, பம்பாய் மற்றும் ஹைதராபாத்தில் இதற்கென அலுவலகங்கள் இயங்குகின்றன.

(11) கள்ள நோட்டுகள், கள்ள அச்சு முத்திரைகள் வங்கி கள்ள நோட்டுகள் சம்பந்தப்பட்ட வழக்குளில் அதைப்பற்றி ஆராய்ந்து அறிவிக்க மகாராஷ்டிர மாகாணத்தில் நாசிக் என்ற ஊரில் பாதுகாப்பு அச்சகம் என்று ஒரு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. பொது மேலாளர் என்பவர் இதன் அதிகாரியாவார்.

(12) மண்டல பொறியியல் வல்லுநர், தந்தி அலுவலகத்தை சேர்ந்தவர், களவுபோன கம்பிகள் எந்த வகையைச் சேர்ந்தது எவ்வளவு மொத்தமானது என்ற விவரத்தைக் கூறுவார். மேலும் விஞ்ஞான ரீதியில் புலனாய்ந்து அறிவிக்கும் அலுவலகத்தில், உலோகப்பொருட்கள் எந்த வகையைச் சேர்ந்தது என்று ஆராய்ந்து அறிவிப்பார்.

# அத்தியாயம் - 2

# குற்றம் நடந்த இடம்

## குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த தடயங்கள்:

குற்றம் நடந்த இடத்தில் அந்த குற்றம் நடந்ததற்காக துப்புகள் அங்கேயே இருக்கும். குற்றம் நடந்த இடங்களில் வழக்குகள் வழக்கு வித்தியாசமான துப்புகள் கிடைக்கும். உதாரணமாக ஒரு கொலை வழக்கில் இறந்து போன பிரேதம் அங்கேயே இருக்கும். அப்போது அது ஒரு குற்றம் நடந்த இடமாகும். அவ்வாறு இல்லாமல் அந்த பிரேதம் வேறு எங்காவது காணப்பட்டால் பிரேதம் காணப்பட்ட இடம் கொலை குற்றம் நடந்த இடமாகாது. குற்றம் நடந்த இடம் ஒரு இடத்தில் உள்ளேயோ அல்லது வெளியேயோ, இருக்கலாம். உதாரணமாக ஒரு கள்ளக்களவானது ஒரு இடத்தின் உள்ளேதான் நடைபெறும். அதேசமயம் வழிப்பறி கொள்ளையானது சாதரணமாக ஒரு இடத்தின் வெளியேதான் நடைபெறும். சில வழக்குகள் அதாவது ஏமாற்றுதல் கையாளுதல் சதி ஆலோசனை செய்தல் போன்ற வழக்குகளில் குற்றம் நடந்த இடங்கள் என்று ஒன்றும் கிடையாது.

சதாரணமாக குற்றம் நடந்த இடங்களில் குற்றவாளி உள்ளே வந்து தான் குற்றத்தைச் செய்வான். அதனால் அவன் குற்றம் செய்த இடத்தில் எதாவது துணியையோ, கைரேகையையோ, காலடிகளையோ, இரத்தக்கறைகளையோ, உள்ளே வந்ததற்கான தடயங்களையோ அல்லது மற்றவைகளையோ விட்டுச் செல்வான். ஆகையால் குற்றம் நடந்த இடத்தை விசாரணை செய்யும் அதிகாரி மிகவும் நன்றாக பார்வையிடவேண்டியது அதிக முக்கியமாகிறது. குற்றம் நடந்த முறை குற்றத்தைப் பற்றி விசாரணை செய்யும் முறை அந்த குற்றத்தைப் பற்றியும் குற்றவாளிகளைப் பற்றியும் துப்புக்கிடைக்க பெரிதும் உதவுகிறது.

## எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்:

புதுச்சேரியிலுள்ள குற்றபுலனாராய்ந்து அறிவிக்கும் கூடம், குற்றவாளிகளைப் பற்றிய தகவல்களை சேகரித்து வைத்திருக்கும் ஒரு முக்கிய இடமாகும். இங்கு கைரேகை நிபுணர்களும், புகைப்பட

நிபுணர்களும் குற்றம் நடந்த இடத்தில் புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகின்றனர்.

குற்றம் நடந்ததாக தகவல் கிடைத்தவுடன் மேற்கண்ட குற்றத்தைப்பற்றி விசாரிக்கும் அதிகாரியுடன் குற்றம் நடந்த இடத்திற்குச் சென்று கைரேகை போன்ற நிபுணர்கள் வரும்வரை குற்றம் நடந்த இடத்தை கலைக்காமல் பாதுகாக்க வேண்டியது முக்கிய கடமையாகும். பலவழிகளில், விசாரணை செய்யும் அதிகாரி நிபுணர்களுக்கு வழிகாட்ட வேண்டும். உதாரணமாக குற்றம் நடந்த இடத்தை புகைப்படம் எடுக்க வேண்டியமுறை போன்றவைகள் விசாரணை செய்யும் அதிகாரி குற்றம் நடந்த இடத்திற்கு ஒரு வரைபடம் வரைய வேண்டியது மிக அவசியமாகும். துப்பு கண்டுபிடிக்கும் விசாரணை செய்யும் அதிகாரி குற்றம் நடந்த இடத்தில் எவைகளை எந்த நிலையில் பார்த்தாரோ அவைகளை அப்படியே எழுதவேண்டும். குற்றவாளி ஜன்னல் வழியாகவோ அல்லது கதவு வழியாகவோ உள்ளே வந்துள்ளதாக தெரிந்தால் ஒரு முனை முதல் மறுமுனைவரைக்கும் முழுவதுமாக நன்கு தேட வேண்டும், கவனிக்க வேண்டும். சுவர்கள், தரைகள், மேற்கூறைகள் அல்லது தளங்கள், தரையில் விரிக்கப்பட்டுள்ள விரிப்புகள், படுக்கையின் கீழேயும் பார்க்க வேண்டும். சிறிய இடமாக இருந்தாலும் நன்கு தேடவேண்டும். இதே முறையிலேயே குற்றம் ஒரு இடத்திற்கு வெளியே நடந்து இருந்தாலும் குற்றம் நடந்த இடத்தைப் பார்வையிட வேண்டும்.

குற்றம் நடந்த இடத்தை பார்வையிட்டு பின்பு மிகவும் கவனமாக அங்கு கிடைத்த பொருட்களை சேகரிக்க வேண்டும். உதாரணமாக துப்பாக்கியால் சுட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டு இருந்தால் அந்த குண்டு இறந்து போனவரின் உடலில்பட்டு வெளியே வந்து இருந்தால் அந்த குண்டை மிகவும் கவனமாக தேடி எடுக்க வேண்டும்.

பௌதீகம் சம்பந்தப்பட்ட, வெளிப்படையாக (Physical clues) துப்பு கொடுக்கும் பொருட்களான நூல்கள், முடிகள், இரத்தங்கள், விந்துக்கள், சிறுநீர், வர்ணங்கள், கண்ணாடி துண்டுகள், குடிக்கும் டம்ளர்கள், வாந்தி எடுத்த பொருட்கள். கைரேகைள், சக்கர தடயங்கள், முதலியனவைகளை கவனமாக சேகரிக்க வேண்டும். இந்த துப்பு கொடுக்கும் பொருட்கள் குற்றம் நடந்த இடத்திற்கு இடம் வேறுபடும். புலன் விசாரணை செய்யும் அதிகாரிக்கு ஒரு சின்ன சந்தேகம் வந்தாலும் அதை நிவர்த்தி செய்த பின்னரே புலன் விசாரணையை தொடரவேண்டும் - சரியான முடிவுக்கு வரவேண்டும்.

## குற்றம் நடந்த இடத்தைப் பாதுகாக்கும் முறை:

குற்றம் நடந்த இடத்திற்குப்போகும் விசாரணை செய்யும் அதிகாரி அந்த இடத்தை கலைக்காமல் பாதுகாக்கும் பொறுப்பு அதிக முக்கியமானதாகும். அவ்வாறு பாதுகாக்காவிடில் மிக முக்கியமான புலன்தரும் பொருட்கள் எல்லாம் அழிந்துபோவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றன. முடிந்தால் குற்றம் நடந்த இடத்தில் வேறுயாரும் நுழையாதபடி அந்த இடத்தைச் சுற்றி கயிற்றால் கட்டி பாதுகாக்கலாம், பொதுமக்கள் குற்றம் நடந்த இடத்தினுள் நுழையாதபடி சுற்றிலும் தேவைப்பட்ட காவலர்களை பாதுகாப்பாக நியமிக்கலாம். குற்றம் நடந்த இடத்திலுள்ள பிணத்தையோ அல்லது மற்ற பொருட்களையோ கலைத்துவிட்டால் அவைகளை ஏற்கனவே இருந்த நிலைக்கு கொண்டுவருவது முடியாத காரியமாகும். பொதுமக்களால் குற்றம் நடந்த இடத்தை கலைத்து கேடு உண்டாக்கினால் விசாரணை செய்யும் அதிகாரிக்கு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவோ துப்புதுலக்குவதோ மிகவும் கடினமான செயலாகிவிடும்

## குற்றம் நடந்த இடத்தை பரிசோதனை செய்தல் :

குற்றம் நடந்த இடத்தைப் பார்வையிடும் முன்பு குற்றம் நடந்த இடத்தில் வேறுஒருவரும் வராதவாறு காவலர்களை நியமித்துவிட்டு குற்றம் நடந்த இடத்தை பரிசோதனை செய்யவேண்டும். மிக முக்கியமான வழக்குகளில் ஓர் உயர் அதிகாரியின் தலைமையில் ஒரு குழு குற்றம் நடந்த இடத்தை நன்கு பார்வையிட வேண்டும்.

**குற்றம் நடந்த இடத்தை இரண்டு வகைகளாக பிரிக்கலாம் :**

(1) ஒரு கட்டடத்தின் உள்ளே நடந்த குற்றம் (Indoor)

(2) ஒரு கட்டடடத்தின் வெளியே நடந்த குற்றம் (Outdoor). ஒரு கட்டிடத்தின் உள்ளே நடந்தக் குற்றத்தைப் பார்வையிடும் போது கட்டடத்தின் உள்ளேயும் அதைச் சுற்றிலும் சோதனையிட வேண்டும். குற்றவாளி கட்டடத்தின் உள்ளே நுழைந்த வழி வெளியே சென்ற வழிகளை சோதனையிட வேண்டும். கட்டடத்தின் உள்ளே ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை கவனமாக சோதனையிட வேண்டும். குற்றம் நடந்த இடத்தை சோதனையிடத் துவங்கும் போது ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து துவக்க வேண்டும். உதாரணமாக ஒரு கதவு அல்லது ஜன்னல் இவற்றிலிருந்து துவக்க வேண்டும். ஓர் இடம்கூட விடாமல் சுவர், கூரை, தளம் இவற்றையும் பரிசோதிக்க வேண்டும்.

ஒரு கட்டடத்திற்கு வெளியில் குற்றம் நடந்து இருக்குமானால் ஒரு குழுவாகச் சென்று ஒருவரின் தலைமையில் விசாரனை செய்ய வேண்டும். பௌதிகம் சம்பந்தப்பட்ட துப்பு கிடைக்கக்கூடிய பொருட்கள் கிடைக்கின்றனவா என்று கவனமாக தேட வேண்டும். இக்குழுவின் தலைவர் அருகிலுள்ள அனைத்து இடங்களையும் கவனமாக தேடுவதற்கான முறைகளை அறிவித்து ஒரே சமயத்தில் அனைத்து இடங்களையும் தேட உத்தரவிட வேண்டும். ஒரு கட்டடத்தின் வெளியே (outdoor) ஒரு குற்றம் நடந்திருக்குமானால் பின்கண்ட முறையில் அங்கு சோதனையிட வேண்டும்.

## (அ) கோடுபோட்டவாறு தேடும் முறை (Strip method) :

குற்றம் நடந்த இடம் செவ்வக வடிவமாக இருக்கும்போது அந்த இடத்தை இந்த முறையில் சோதனையிட வேண்டும். குற்றம் நடந்த இடத்தை முழுவதுமாக ஒரே சமயத்தில் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரையும் துப்பு தரக்கூடிய பொருட்கள் கிடைக்கின்றனவா என்ற கவனமாக தேடவேண்டும். துப்பு தரக்கூடிய பொருட்கள் கிடைத்தால் உடனே குழு தலைவருக்கு இதை தேறிவிக்கவேண்டும். குழு தலைவர் துப்பு தரக்கூடிய பொருளைப் பெற்று அது அழியாமல் பத்திரமாக பாதுகாக்க வேண்டும். இது அந்த இடம் முழுவதுமாக தேடி முடியும்வரை கடைபிடிக்கப்பட வேண்டும்.

## (ஆ) சுற்றி சுற்றி தேடும் முறை (Spiral method):

குற்றம் நடந்த இடம் வட்ட வடிவமாக இருக்குமானால் அதை சுற்றிச்சுற்றி தேட வேண்டும். இந்த முறையில் தேடும்போது குற்றம் நடந்த இடத்தை பார்வை செய்யும் அதிகாரி குற்றம் நடந்த இடத்திற்கு வெளியே இருந்து அந்த இடத்தை சுற்றிச்சுற்றி தேட வேண்டும்.

## (இ) சிறு பிரிவுகளாக பிரித்துப் பரிசோதனை செய்யும் முறை (Zonal method):

குற்றம் நடந்த இடம் ஒரு சதுர வடிவில் இருக்குமானால் அதை இவ்வாறு சோதனை செய்ய வேண்டும். குற்றம் நடந்த இடத்தை சிறிய சதுரங்களாகப் பிரித்து ஒவ்வொரு சதுரத்தையும் ஒவ்வொரு நபருக்கு பிரித்துக் கொடுத்து அதை கவனமாக முழு இடத்தையும் பரிசோதனை செய்ய வேண்டும்.

### (ஈ) சக்கர வடிவத்தில் தேடும் முறை (Wheel method) :

குற்றம் நடந்த இடம் வட்ட வடிவத்தில் இருந்தால் அதை பரிசோதனை செய்ய அதிக எண்ணிக்கையில் காவலர்களை நியமிக்க வேண்டும். இந்த முறையில் குற்றம் நடந்த இடத்தை மையமாக வைத்து அந்த இடத்தை முற்றிலும் கவனமாக சோதனை செய்ய வேண்டும்.

### சோதனை செய்யும் அதிகாரிகள் எங்கே சோதனை செய்ய வேண்டும் என்பது

மேலே கூறியபடி ஒரு இடத்தை சோதனைசெய்யும் போது மிகவும் கவனமாக அனைத்து இடங்களையும் தேட வேண்டும். சோதனை செய்யும் அதிகாரி பின்கண்ட இடங்களில் சரியாக சோதனை போடாமல் விட்டுவிடக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

(1) திறந்து இருக்கும் கதவிற்கு பின்புறம்,

(2) தரையில் விரித்து இருக்கும் கம்பளம், பாய் அல்லது வேறு விரிப்புகளின் கீழே,

(3) பின்கண்ட பொருள்களுக்கு பின்புறமும், கீழேயும்; - டிரங்க் பெட்டிகள், சூட்கேஸ்கள், பெட்டிகள், மேஜை- நாற்காலி போன்ற பொருட்கள் அலமாரி, சுவற்று அலமாரி, சோபா போன்ற பொருட்கள்

சோதனை செய்யும் அதிகாரி பின்கண்ட பொருட்களை சோதனையிடாமல் விடக்கூடாது. தீக்குச்சிகள், தரை, புதிய வர்ணங்கள் விளக்கு பொருத்தியிருக்கும் இடங்கள், படங்கள், புகைப்படங்கள், ஸ்விட்ச் போர்டுகள், சந்தேகத்திற்கு இடமான மற்ற பொருட்கள். சோதனை செய்யும் அதிகாரி திருட்டுப்போன பொருட்கள் வைத்திருந்த இடங்களையும் அது சாதரணமாக இருக்கும் விதத்தையும் கவனிக்க வேண்டும். குற்றம் நடந்த இடம் துப்பாக்கியால் சுட்ட இடமாக இருந்தால் வெடித்த காலி தோட்டாக்கள், வெடித்த குண்டின் ரவைகள், இரத்தக்கறைகளையும் கவனமாக கவனிக்க வேண்டும்.

### துப்பு துலக்கும் பொருட்கள்:

குற்றம் நடந்த இடத்தில் கிடைக்கும் பொருட்களைச் சேகரித்து வைக்க வேண்டும். இந்த பொருட்கள் குற்றத்திற்கு குற்றம் வேறுபட்டிருக்கும். அவைகள் பின்வருமாறு :

#### 1. இரத்தக்கறைகள் :

இரத்தக்கறை என்பது மனிதர்களுடையதோ அல்லது கால்நடைகளுடையதோ அல்லது மற்றவைகளினுடையதோ இருக்கலாம். மேலும் இரத்தக்கறை, விந்துக்கள், உமிழ்நீர், சிறுநீர் மற்றும் கெட்டபோன பொருட்கள், வியர்வைகள் என்பது சாதாரணமாக குற்றத்தில் சம்பந்தப்பட்ட பொருட்கள் விசாரணை செய்யும் அதிகாரிக்கு கிடைப்பனவாகும். இரத்தக்கறை என்பது மிகவும் முக்கியமான ஒரு சாட்சிப்பொருளாகும்.

கொலை, அடிதடி வழக்குகள், கற்பழிப்பு போன்ற வழக்குகளில் கலவர வழக்குகள், கொள்ளை வழக்குகள், திருட்டு மற்றும் கூட்டு கொள்ளை வழக்குகளிலும் பாதிக்கப்பட்டவர்களின் இரத்தம் மற்றும் துணிகள் அல்லது குற்றவாளிகளின் துணிகள் அல்லது அவர்கள் உபயோகப்படுத்திய ஆயுதங்களின் இரத்தக்கறைகள் கிடைக்கும்.

இரத்தக்கறை என்பது ஒரு முக்கியமான சாட்சிப் பொருளாகும். இது பாதிக்கப்பட்டவர்களையும் குற்றவாளிகளையும் நிரூபணம் செய்ய உதவுகிறது. இரத்தம் சிந்திய இடத்தைப் பார்வையிட்டால் பாதிக்கப்பட்டவர் இருந்தநிலை, இரத்தம் எவ்வளவு நேரத்திற்கு முன்பு சிந்தப்பட்டுள்ளது, என்பதும் எந்த திசையிலிருந்து, எவ்வளவு வேகமாக எந்த இடத்தில் இரத்தம் பீச்சி அடிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

துவைக்கப்பட்ட துணியில் உள்ள இரத்தக்கறை சாதாரணமாக நமது கண்ணுக்குப் புலப்படாது. ஆனால் பரிசோதனை செய்து இதைக்கண்டு பிடிக்கலாம். ஆதலால் விசாரணை செய்யும் அதிகாரி துணியை துவைத்துவிட்டார் என்றோ அல்லது இரத்தக்கறை கண்ணுக்குத் தெரியவில்லை என்றோ மேற்கண்ட துணியை கைப்பற்றாமல் விட்டு விடக்கூடாது. ஏனென்றால் இது ஒரு முக்கிய சாட்சி பொருளாகும். இதை பரிசோதனைக்கு அனுப்பி நாம் தெரிந்து கொள்ளலாம். அடிதடி சண்டை வழக்குகளில் இரத்தத்துளிகள் கை நகங்களிலோ அல்லது பாக்கெட்டின் உட்புறத்திலோ, பட்டன் துவாரங்களிலோ, கிழிந்த ஆடைகளிலோ, வாஷ்பேசினிலோ, சாக்கடைத் தொட்டிகளிலோ, சாக்கடைகளிலோ அல்லது சுவர்களிலோ காணப்படலாம். கைக்கழுவிய அல்லது ஆயுதங்களை கழுவிய இடங்களிலோ அல்லது ஆடைகளை கழுவிய இடங்களிலோ அல்லது படுக்கையின் கீழோ, மேஜை, நாற்காலி, தரை, வெடிப்புள்ள தரைகளிலோ கத்தியின் கைப்பிடியின் உள்ளேயோ கிடைக்கலாம். சூரிய வெளிச்சம் நேரடியாகப்படக்கூடிய இடங்களில் உள்ள இரத்தக்கறைகள் பெரும்பாலும் காய்ந்துவிடும். உலோக தகடுகளின் மேல் கிடைக்கும் இரத்தக்கறைகளை உடனேயே பரிசோதனைக்கு அனுப்பிவைக்கவேண்டும். இல்லையேல் அது பயனற்றதாகிவிடும். இரத்தக்கறைகளை சூட்டினால் சூரிய வெளிச்சம் படாமலும், பாக்டீரியா கிருமிகள் அதை சேதப்படுத்தாமலும், அந்த இரத்தம் அழுகி கெட்டுப்போகாமலும் நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் இந்த இரத்தம் பரிசோதனையில் மனிதர்களின் இரத்தமாக மற்றும் எந்த குரூப்பைச் சேர்ந்தது என்பது கண்டுபிடிக்க இயலும். குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த ரத்தக்கறைகளைப்பற்றி பின்வருமாறு அதன் நிபுணர்களை கேள்விகள் கேட்க வேண்டும்:-

(1) அனுப்பியுள்ள பொருள் இரத்தம்தானா அல்லது வேறா?

(2) இது மனித இரத்தமா? அல்லது கால்நடைகளின் இரத்தமா?

(3) இந்த இரத்தம் எந்த குரூப்பைச் சேர்ந்தது ?

(4) இந்த இரத்தம் சம்பந்தப்பட்டவரின் இரத்தமா ? அதே குரூப்பைச் சேர்ந்ததா?

விந்து கறைகளையும் அது யாருடையது என்று பரிசோதனை செய்யலாம். ஆனால் இது எந்த குரூப்பைச் சேர்ந்தது என்று அனைத்து வழக்குளிலும், கூறமுடிவதில்லை. விந்து கறைகள் தரை, நடைபாதைகள், மெத்தைபடிகள் இவ்விடங்களில் கிடைக்கக்கூடும். இவைகளை மிகவும் கவனமாக சுரண்டி எடுத்து அது கெட்டுப்போகாமல் ஒரு சிறப்பு உறையில் போட்டு பரிசோதனைச் சாலைக்கு பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கற்பழிப்பு வழக்குளில் கற்பழிக்கப்பட்டு 3 முதல் 7 நாட்கள் ஆகி இருந்தாலும் கூட பெண் குறியிலிருந்து எடுக்கப்படும் விந்துக்களை பரிசோதனை செய்து அது யாருடைய விந்து என கூற முடியும்.

மேலும் கைக்குட்டை, தலையணை, சிகரெட் இவைகளிலிருந்து கிடைக்கும் இரத்தக்கறை, உமிழ்நீர்கறை இவைகளை பரிசோதித்து கூறுவதின் மூலம் குற்றவாளிகளை மிகவும் சுலபமாக அடையாளம் கண்டுபிடிக்க ஏதுவாகும். வியர்வைப்பட்ட துணிகளிலிருந்தும் சிறுநீர் கறைகளிலிருந்தும்கூட அது யாருடையது என்பது பரிசோதனையின் மூலம் கண்டுபிடிக்க முடியும்.

சாதாரணமாக தலைமுடியும்கூட, அடிதடி சண்டை கற்பழித்தல், கொலை, சாலை விபத்துக்கள் போன்ற வழக்குளில் முக்கிய சாட்சிப்பொருளாக உபயோகப்படுகிறது. மேற்கண்ட வழக்குகளில் பலத்தை உபயோகிக்கும்போது தலையிலிருந்தோ அல்லது உடலின் மற்ற உறுப்புகளிலிருந்தோ ஒருவரிடமிருந்து மற்றவரிடம் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் மேற்கண்ட குற்றங்களில் உபயோகப்படுத்திய ஆயுதங்களிலும் காணப்படலாம். பரிசோதனைக்கு அனுப்பப்பட வேண்டிய முடியை குற்றம் நடந்த இடத்திலிருந்து கைப்பற்ற வேண்டும். அல்லது பாதிக்கப்பட்டவரிடமிருந்து கைப்பற்ற வேண்டும். மேலும் குற்றவாளியிடமிருந்தோ அல்லது வேறு வகையாகவோ கைப்பற்றப்பட்ட முடியையும், குற்றவாளியின் முடியையும் எடுத்து பரிசோதனைக்கு அனுப்பி இவைகள் யாருடைய முடிகள் என்று சோதனைச் செய்து கூறும்படி கேட்டுக்கொள்ளலாம். அவைகளை பரிசோதனை செய்தும், பூதக்கண்ணாடி மூலமும் பார்வையிட்டும் இந்த முடி யாருடைய முடி என்பதை நிபுணர் நமக்கு அறிவிப்பார். பலத்தை உபயோகப்படுத்திய வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரி குற்றம் நடந்த இடத்தை பார்வையிடும் போது இதை உடனடியாக பரிசோதனை செய்து குற்றவாளியின் முடியையோ அல்லது பாதிக்கப்பட்டவரின் முடியையோ அதை அகற்றும் முன்போ அல்லது அழிக்கும் முன்போ அதை கைப்பற்ற வேண்டும். கொலை அல்லது அடிதடி வழக்குகளில் மருத்துவமனையிலிருந்து இறந்து போனவரிடமிருந்தோ அல்லது பாதிக்கப்பட்டவரிடமிருந்தோ அவர் குற்றம் நடக்கும்போது அணிந்திருந்த துணிகளை கைப்பற்ற வேண்டும். இல்லையெனில் அதை அவர்கள் அழித்துவிட வாய்ப்பு உண்டு. மேலும் பாதிக்கப்பட்டவரிடமிருந்தோ முடியை தலையிலிருந்தோ அல்லது உடலின் பிற பகுதியிலிருந்தோ மாதிரிக்காக சுற்று முடியை எடுத்து கைப்பற்ற வேண்டும்.

**தலைமுடியைச் சாட்சியாக உபயோகப்படுத்தும் பொழுது பின்கண்ட கேள்விகளை அதன் நிபுணரிடம் கேட்க வேண்டும் :**

(1) இந்த முடி மனிதர்களுடைய முடியா அல்லது மிருகங்களின் முடியா ? கால்நடைகளின் முடியானால் எந்த கால்நடைகளின் முடி ? இது மனிதர்களின் முடியானால் உடலின் எந்தப் பகுதியை சேர்ந்த முடி என்பது.

(2) இந்த முடி ஒரு ஆணின் முடியா அல்லது பெண்ணின் முடியா என்பது

(3) இந்த முடி குழந்தைகளின் முடியா ? பெரியவர்களின் முடியா? அல்லது வயதானவர்களின் முடியா?

(4) இந்த முடி சாயம் பூசப்பட்டுள்ளதா?

(5) இந்த முடி தானாகவே உதிர்ந்த முடியா? அல்லது பலத்தை உபயோகித்து எடுக்கப்பட்டுள்ளதா?

(6) இந்த முடியை வெட்டி எடுக்க எந்தவகையான ஆயுதம் உபயோகப்படுத்தபட்டுள்ளது ? கூர்மையான ஆயுதமா ? அல்லது கூர்மையற்ற ஆயுதமா?

(7) பரிசோதனைக்காக அனுப்பியுள்ள முடி எந்த தனிப்பட்டவரின் முடி?

இந்த கேள்விகளுக்கு பதில் கேட்கும் போது மாதிரிக்காக சந்தேகப்பட்டவரின் முடியையும், பாதிக்கப்பட்டவரின் முடியையும் அது எந்த பகுதியை சேர்ந்ததாக இருக்கும் என்று விசாரணை செய்யும் அதிகாரி சந்தேகப்படுகிறாரோ அந்த பகுதியிலிருந்து முடியையும் எடுத்து அனுப்பி வைக்க வேண்டும்.

**நார்கள், நூல், துணி:**

அனேகமாக மெல்லிய நார்களை எடுத்து ஆலையில் கயிறுகளாக திரிக்கப்படுகிறது. இந்த நார்கள் நான்கு வகைப்படும்.

(1) கால்நடைகளிலிருந்து எடுக்கப்படும், ரோமங்களான கம்பளி, சில்க், பசுவின் ரோமங்கள், குதிரைகள், ரோமங்கள் இவைகளிலிருந்து தயாரிக்கப்படும் கம்பளி துணிகள், படுக்கை விரிப்புகள் மற்றும் குல்லாக்கள்

(2) தாவரங்களிலிருந்து கிடைக்கும்படியான பருத்தி, சணல், சணல் நார் முதலியன

(3) செயற்கை முறையில் தயார் செய்யப்பட்ட கயிறுகள், செயற்கை பட்டுகள், மரக்கூழிலிருந்து செய்யப்பட்ட நார்கள், நைலான் கயிறுகள் டெரிலின் கயிறுகள்

(4) சுரங்கத்திலிருந்து கிடைத்த மூலப்பொருட்களிலிருந்து செய்யப்பட்ட கல்நார், கண்ணாடி போன்ற பொருட்கள்

ஒரு நூல் என்பது அனேக மெல்லிய இழைகளால் சேர்த்து உருவாக்கப்பட்டது. அல்லது அனேக மெல்லிய இழைகளால் முறுக்கி நெய்யப்பட்டதாகும். இவைகளை பொதுவாக நூல் என்று அழைக்கிறோம். துணி என்பது நெய்யப்பட்ட அல்லது பிணைக்கப்பட்ட நூல்களால் செய்யப்பட்டதாகும்.

பரிசோதனைக்கும் ஒப்பிட்டு பார்ப்பதற்கும் கால்நடைகளின் உரோமங்கள், நூல்கள், துணிகள் இவைகள் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு எதிரியின் மீது குற்றத்தை நிருபிக்க கொலை, கற்பழிப்பு, கொள்ளை மற்றும் சாலை விபத்து வழக்குகளில் பெரிதும் உதவுகின்றன. இவைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கும் எதிரிக்கும் நடந்த மோதலில் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அவருக்கு தெரியாமலே சென்று பூதக் கண்ணாடியின் உதவியால் கண்டுபிடிக்கப்பட்டு இந்த ரோமம் அல்லது நூல் யாருடையது என்று கூறுவதற்கு ஏதுவாகிறது.

பாதிக்கப்பட்டவருக்கும் எதிரிக்கும் நடந்த மோதலில் சில ரோமங்கள் அல்லது நூல்கள் பாதிக்கப்பட்டவரின் உடையிலிருந்து கிடைக்கும்போது பின் கண்ட செயல்களை நிபுணரின் உதவியினால் உறுதி செய்ய வேண்டும்.

(1) வாதியிடமிருந்து கிடைத்த உரோமங்கள் அல்லது நூல்கள் எதிரி உடுத்தியிருந்த உடுப்புகளிலிருந்து தான் கிடைத்துள்ளதா என்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

(2) அந்த உரோமங்கள் அல்லது நூல்கள் வர்ணமுடையதாக இருந்தால் எதிரி உடுத்தியிருந்த உடையில் உள்ள துணிகளில் உள்ள வர்ணமும் பாதிக்கப்பட்டவரின் உடையிலிருந்து

கிடைத்த நூல்களில் உள்ள வர்ணமும் ஒன்றாயிருக்கின்றனவா என்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

**கற்பழிப்பு வழக்காக இருந்தால் பின்கண்ட விஷயங்கள் நிபுணரின் உதவியால் உறுதி செய்ய வேண்டும் :**

(1) எதிரிக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் ஏற்பட்ட மோதலின் போது எதிரி உடுத்தியிருந்த துணியால் நூல்கள் பாதிக்கப்பட்டவரின் உடலிலோ அல்லது உடுப்பிலோ காணப்படுகின்றனவா ?

(2) குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த நூல்கள் குற்றவாளி அப்போது உடுத்தியிருந்த துணியிலிருந்துதான் உதிர்ந்துள்ளதா ?

(3) குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த துணி அல்லது நூல்கள் பாதிக்கப்பட்டவரின் அல்லது குற்றவாளியை சேர்ந்ததா அல்லது தனிதன்மை வாய்ந்ததா? கற்பழிப்பு செய்யப்பட்டது ஒரு பொது பூங்காவாகவோ அல்லது ஒரு நிலமாகவோ இருக்கும்பட்சத்தில் அங்கு கிடைத்த ரோமங்கள் மிருகங்களின் ரோமமாகவோ அல்லது பறவைகளின் சிறகுகளாகவோ இருக்கலாம். உதாரணமாக அணில், பறவைகள் அல்லது அங்கு அடிக்கடி வந்து போகும் வேறுவகையான கால்நடைகள். அந்த இடம் ஓர் அறையாக இருந்தால் அந்த ரோமம் படுக்கையிலிருந்தோ, கம்பளியிலிருந்தோ, போர்வையிலிருந்தோ, கயிறுகளிலிருந்தோ விழுந்து இருக்கலாம். சில வழக்குகளில் எதிரி தன் துணியால் பாதிக்கப்பட்டவரின் வாயினுள் திணித்து இருந்தாலோ அல்லது வன்முறையில் கழுத்தை இறுக்கி இருந்தாலோ பாதிக்கப்பட்டவரை அந்த துணியுடனே அல்லது நூலுடனே நிபுணரிடம் அனுப்பி அந்த நூல் அல்லது அந்த துணி எதிரியுடையதுதானா என்று உறுதி செய்ய வேண்டும்.

## கயிறு மற்றும் நூல்கள்:

கயிறுகளும் நூல்களும் களவு வழக்குகளிலும் தூக்குப்போட்டுக்கொள்ளும் வழக்குகளிலும் மற்றும் கயிறினால் தொண்டையை நெறிக்கும் வழக்குகளிலும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட கயிறுகளின் ஒரு பகுதி எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்படும்பொழுது குற்றம் நடந்த வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட கயிறும் இதுவும் ஒன்றாயிருக்கும்போது குற்றவாளி இவன்தான் என்று கண்டுபிடிக்க உதவுகிறது. குற்றம் நடந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட கயிறையும், எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட கயிறையும் மைக்கிராஸ்கோப்பு கண்ணாடியின் மூலம் பார்க்கும்போது இரண்டு கயிறுகளும் ஒன்று என்றும் இவைகள் ஒரு கயிற்றிலிருந்து வெட்டப்பட்டவை என்று தெரியவரும்.

## கண்ணாடி:

குற்றம் நடந்த இடத்தில் கிடைக்கும் கண்ணாடி ஒரு முக்கிய சாட்சிப்பொருளாகும். ஒரு குற்றவாளி கண்ணாடியை உடைக்கும்போது அனேக சிறிய கண்ணாடி துண்டுகள் அவனுடைய உடையில் குறிப்பாக சட்டை பாக்கட்டில் கால் மடிப்பில் தங்கிவிட ஏதுவாகும் . குற்றம் நடந்த இடத்தில் கைப்பற்றப்பட்ட கண்ணாடியும் எதிரியின் ஆடையிலிருந்து கைப்பற்றப்பட்ட கண்ணாடி துண்டுகளும் பரிசோதனைக்காக அனுப்பி இரண்டும் ஒரே கண்ணாடி என்று தெரியும்போது குற்றவாளிதான் அந்த

குற்றத்தை செய்தான் என்று கூறமுடியும். உடைந்த கண்ணாடி துண்டுகளின் முனைகளைப் பரிசோதிக்கும்போது அந்த கண்ணாடி ரூமின் உள்ளேயிருந்து உடைக்கப்பட்டதா அல்லது ரூமுக்கு வெளியே இருந்து உடைக்கப்பட்டதா என்று தெரியவரும். ஒரு கண்ணாடி அருகிலிருந்த ஒரு அடியில் உடைக்கப்பட்டிருந்தால் உடைந்த கண்ணாடி துண்டுகள் குறைந்த அளவு தூரமே சிதறி இருக்கும். ஆனால் தூரத்திலிருந்து பலத்த வீச்சினால் உடைக்கப்பட்டு இருந்தால் கண்ணாடிகள் பெரிய அளவில் உடைந்து சிதறி இருக்கும்.

உடைந்து நீட்டிக்கொண்டு இருக்கும் கண்ணாடி துண்டுகள் ஒரு முக்கிய சாட்சிப் பொருளாகும். ஆகையால் சாட்சி பொருள்களை நிபுணரிடம் பரிசோதனைக்கு அனுப்பும்போது அதன் முனை பகுதி உடையாமல் பஞ்சு அல்லது துணிகளில் வைத்து பாதுகாப்பாக கட்டி அனுப்பவேண்டும்.

**கண்ணாடி உடைந்த வழக்குகளில் அதன் நிபுணரிடம் பின்கண்ட கேள்விகளை கேட்க வேண்டும் :**

(1) பரிசோதனை அனுப்பியுள்ள உடைந்த கண்ணாடி துண்டு ஒரு குறிப்பிட்ட கண்ணாடியில் உடைந்த துண்டுகள்தானா?

(2) உடைந்த கண்ணாடி துண்டு உடைவதற்குமுன் பொருத்தப்பட்டு இருந்த கண்ணாடியின் எந்த பகுதியை சேர்ந்ததாகும்.

(3). உடைந்த கண்ணாடி துண்டுகள் ஒரு குறிப்பிட்ட கண்ணாடி வகையைச் சேர்ந்ததா? உதாரணமாக ஒரு வாகனத்தின் முன்விளக்கு கண்ணாடி, ஒரு மூக்கு கண்ணாடி லென்ஸா அல்லது ஜன்னல்களில் பொருத்தியுள்ள கண்ணாடி வகையைச் சேர்ந்ததா?

(4). உடைந்த கண்ணாடியாக இருந்தால் இது எதனுடைய கண்ணாடி? கண்ணாடி உடைந்த திசை மற்றும் எந்த திசையிலிருந்து பலத்தை உபயோகித்து கண்ணாடி உடைக்கப்பட்டுள்ளது என்ற விவரம்.

(5) உடைந்த ஜன்னல் கண்ணாடியோ அல்லது ஒரு வாகனத்தின் விளக்கின் முன்பு பொருத்தப்பட்டு கண்ணாடியோ உடைந்து இருக்கும் போது அது கல்லினால் அடித்து உடைக்கப்பட்டதா அல்லது துப்பாக்கியால் சுட்டு உடைக்கப்பட்டுள்ளதா என்று

(6). கண்ணாடி ஜன்னல் துப்பாக்கி குண்டுபட்டு உடைந்து இருந்தால் எந்த திசையிலிருந்து துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளது? எத்தனை முறை சுடப்பட்டுள்ளது ?

(7). அதிக வெப்பத்தால் ஜன்னல் கண்ணாடி உடைக்கப்பட்டு அதன் துண்டுகள் அறையினுள்ளேயே இருந்தால் அது உண்மையிலேயே அதிக சூட்டினால் தான் உடைந்ததா? அல்லது வெளியிலிருந்து யாரோ ஒரு பொருளை வீசி உடைந்ததா என்று கேட்க வேண்டும்.

**மண்:**

வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளி அல்லது பாதிக்கப்பட்டவரின் செருப்பிலோ, அல்லது அவர் அணிந்து இருந்த பேண்ட மடிப்பிலோ அல்லது துணியிலோ மண் காணப்படும். குற்றவாளியிடமிருந்து காணப்பட்ட மண்ணைக் கைப்பற்றி குற்றம் நடந்த இடத்திலிருந்தும் மண்ணை மாதிரிக்காக அனுப்பி நிபுணர் மூலமாக சோதனைச் செய்து இரண்டு மண்ணும் ஒரே மண் என்றால் குற்றவாளியை நிருபிக்க

இது உதவுகிறது. இரண்டு வகையான மண்ணும் ஒன்று தான் என்று பின்வரும் காரணங்களால் முடிவு செய்யப்படும்.

(1) மண்ணின் அடர்த்தி மற்றும் பிரிவு

(2) மைக்கிராஸ் கோப்பினால் பார்வையிடும்போது தெரியக்கூடியவைகள், தாதுப்பொருட்கள், தொழிற்சாலையின் கழிவுப் பொருள்கள்

(3) குறிப்பிட்ட அளவே உள்ளவைகள்

(4) நிறங்கள், தீயினால் ஏற்பட்ட சாம்பல்கள்

(5) மண்ணைப்பற்றி ஆராய்ச்சி செய்தல்

**மண்ணைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்போது பின்கண்ட கேள்விகளை அந்த நிபுணரிடம் கேட்க வேண்டும் :**

(1) குற்றவாளி அல்லது சந்தேக நபர் அணிந்து இருந்த ஆடையில் ஒட்டியிருந்து எடுத்த மண்ணும் பாதிக்கப்பட்டவரின் ஆடையிலிருந்து எடுத்த மண்ணும் குற்றம் நடந்த இடத்திலிருந்து மாதிரிக்காக எடுத்த மண்ணும் ஒரே வகை மண்தானா ?

(2) கன்னக்களவு வழக்காக இருந்தால் குற்றவாளி அணிந்து இருந்த ஆடையிலிருந்து எடுத்த மண்ணும் குற்றம் நடந்த இடத்தில் கள்ளமிட்ட இடத்திலிருந்து எடுத்த மண்ணும் ஒன்றுதானா ?

(3) சில திருட்டு வழக்குகளில் நிலத்தில் விளைந்த கிழங்கு போன்ற பொருட்களுடன் சேர்ந்து இருக்கும் மண்ணும் எந்த நிலத்தில் களவு நடந்ததாக கூறப்படுகிறதோ இந்த மண்ணும் ஒரே மண்தானா ?

(4) மோட்டார் வாகன விபத்து வழக்குகளில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் கீழ் பகுதியில் கிடைத்த மண்ணும் குற்றம் நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட மண்ணும் ஒரே மண்தானா?

## பெயிண்ட — வர்ணங்கள் :

கள்ளக்களவு வழக்குகளிலோ அல்லது பாதுகாப்பாக வைத்திருக்கும் வர்ணம் பூசப்பட்ட அலமாரி அல்லது மற்ற ஷெல்ப்புகள் உடைக்கப்பட்டு இருக்கும் போதோ அல்லது மோட்டார் வாகன விபத்து வழக்குகளிலோ, எதிரியின் மீதோ அல்லது எதிரி உடுத்தியிருந்த ஆடையின் மீதோ, அல்லது எதிரி கன்னக்களவு செய்ய உபயோகப்படுத்திய கருவிகளின் மீதோ பெயிண்டின் சிதறல்களோ அல்லது வர்ண சாயங்களோ பட ஏதுவாகும். ஆகவே குற்றவாளி உடுத்தியிருந்த ஆடையில் காணப்படும் பெயிண்டின் தூள்கள் அல்லது கறைகள் மற்றும் குற்றம் நடந்த இடத்தில் காணப்படும் பெயிண்டையும் சோதித்து இரண்டும் ஒன்று என்று தெரிந்த பட்சத்தில் குற்றவாளி அவர்தான் என்றும், குற்றம் நடந்த இடத்தில்தான் இந்த பெயிண்ட் கறை அவருக்கு ஏற்பட்டு இருக்கிறது என்று தீர்மானிக்க இயலும்.

**தூசிகள் :**

ஒரு நபர் தான் வேலை செய்யும்போதோ அல்லது வியாபாரம் செய்யும்போதோ அவர் அதை செய்யும்படியான சமயத்தில் அவர் கைகளின் நகங்களிலும், காதுகளிலும், உடலின் தோல் மடிப்புகளிலும் துணிகளிலும் ஏதாவது பொருட்கள் ஒட்டிச்கொள்கின்றன. இவைகள் அந்த நபர் எந்த தொழில் செய்கிறார் என்று அடையாளம் காட்ட உதவுகின்றன. தச்சர், புத்தகத்தை பைண்டு செய்பவர், முடிவெட்டுவோர்,வர்ணம் பூசுபவர்கள், தட்டான், சுரங்கத்தில் வேலை செய்பவர்கள் செருப்பு தைப்பவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் இது நமக்கு தெரியவருகிறது. சிகரெட், பீடி இவற்றின் சாம்பல்கள், ஒரு அறையில் கிடைத்தால் குற்றவாளியின் பழக்கங்களை அறிய இது ஒரு சிறந்த துப்பு பொருளாக மாறுகின்றன. தங்கம், வெள்ளி போன்ற அதிக மதிப்புடைய பொருட்களை ஒரு வாகனத்தில் கண்டுபிடிக்கும் பொழுது அது எவ்வாறு கொண்டு செல்லப்பட்டு உள்ளது அல்லது அது எவ்வாறு பார்சல் செய்யப்பட்டுள்ளது அல்லது அது எந்த பொருளின் உள்ளே வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது.

**உலோகத் துணுக்குகள்:**

உலோகங்களின் சிறிய பகுதிகள் அல்லது துணுக்குகளை பெருக்கும்போதும் மற்றும் உடைந்த பொருட்களை சேர்ந்த குப்பைகளை எடுக்கும்போது அடிக்கடி காணலாம். ஒரு ஆயுதம் இருந்தால் அந்த ஆயுத்திலிருந்து உடைந்து போன உலோகத் துணுக்குகளை எடுக்கலாம். அதன்மூலம் அந்தப்பொருள் சிதைக்கும் முன்பு எந்தவிதமான தோற்றத்தில் இருந்தது என்று நாம் தெரிந்து கொள்ளமுடியும். ஒரு உலோகத்தை நாம் வெட்டும் பொழுது வெட்டுவதற்கு பயன்படுத்திய கடைசல் பிடிக்கும் இயந்திரம், துளை போட பயன்படுத்திய இயந்திரம், குறடு, இடுக்கி போன்ற பொருட்கள், உளி, கடப்பாரை திருப்புளி இவைகளில் ஒட்டிக்கொள்கின்றன. இந்த பொருட்களின் ஒட்டியுள்ள துணுக்குகள் குற்றவாளிகளை குற்றத்தோடு சம்பந்தப்படுத்த உதவுகின்றன.

**மரக்கறி சம்பந்தப்பட்ட பொருட்கள்:**

தாவரங்கள் சம்பந்தப்பட்ட சாட்சியங்கள் - பின்கண்ட பொருட்களின் பாகங்கள் - உதாரணமாக மரத்தின் ஒரு பகுதி பாசிகள், உயிர் அணுக்கள், கிருமிகள், மரங்கள், மரத்தூள்கள், புகையிலை மற்றும் பலவகை தாவரங்கள், விதைகள், சிறிய இலைத்துணுக்குகள், மரப்பட்டைகள், கொழுந்து இலைகள், காய்கனியின் சாம்பல்கள் இவைகளை குற்றம் நடந்த இடத்தில் காணலாம்.

## அத்தியாயம் - 3

# மோட்டார் வாகன விபத்துகள்

மோட்டார் வாகன விபத்து வழக்குகளில் விசாரணை செய்யும் போது பின்கண்டவைகளை விசாரிக்க வேண்டும்

(1) விபத்து நடந்த இடம்

(2) காயமடைந்தவர்கள் மற்றும் இறந்து போனவர்களின் சடலங்கள்

(3) சந்தேகப்படும்படியான வாகனங்கள்

(4) விபத்து வழக்கில் சம்பந்தப்பட்ட ஓட்டுனர்கள்

**விபத்து நடந்த இடம் :**

விபத்து நடந்த இடத்திற்கு சென்றதும் விசாரணை செய்யும் அதிகாரி உடனடியாக விபத்து நடந்த இடத்தை பாதுகாக்க வேண்டும். விபத்து நடந்த இடத்தில் விபத்தில் இறந்து போனவரின் சடலத்தை எடுக்கும் முன்போ அல்லது காயமடைந்தவரை மருத்துவமனைக்கு அனுப்பும் முன்போ அல்லது வாகனத்தை அப்புறப்படுத்தும் முன்போ அவைகள் இருந்த நிலையையும், வாகனங்கள் இருந்த நிலையையும் பல கோணங்களில் புகைப்படம் எடுக்க வேண்டும். ஒரு மாதிரி வரைபடம் குற்றம் நடந்த இடத்தில் வரைய வேண்டும். குற்றம் நடந்த இடத்தில் காயமுற்றவர்கள் இருந்தால் உடனடியாக ஒரு காவலரின் மூலமாக அவரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி சிகிச்சை அளிப்பதோடு மருத்துவ சான்றிதழும் பெறவேண்டும். குற்றம் நடந்த இடத்தை பின் கூறியபடி கவனமாக பார்வையிட வேண்டும்.

(1) சக்கரம் தேய்ந்த அடையாளங்கள் அவற்றின் அகலம், நீளம் முதலியன அதற்கு ஒரு வரைபடமும் வரையவேண்டும்.

(2) சக்கரம் பதிந்துள்ளதின் அளவு அது செய்யப்பட்ட கம்பெனி சக்கரத்தின் நிலைமை, அதன் அளவு, அது ஓடியுள்ள முறை இவைகளை குறித்துக்கொள்ள வேண்டும். மேலும் வரைபடமும், புகைப்படமும் எடுக்க வேண்டும்.

(3). அழுக்கு, இடிந்த பொருட்கள் சேர்ந்த குப்பை, எண்ணெய், கிரீஸ் போன்ற பொருட்கள் விபத்து நடந்த இடத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திலிருந்து கொட்டப்பட்டு இருந்தால் அவைகளை கைப்பற்ற வேண்டும். இவைகளை விபத்தில் சம்பந்தப்பட்டதாக சந்தேகப்பட்ட வாகனங்களில் கீழேயுள்ள பகுதியிலிருந்து கொஞ்சம் குப்பை, அழுக்கு போன்ற பொருள்களை எடுத்து இரண்டையும் ஒப்பிட்டுப்பார்க்க குற்றத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை கண்டுபிடிக்கலாம்.

(4) உடைந்துபோன சிறிய பொருட்கள் மற்றும் வர்ணங்களை விபத்தில் சம்பந்தப்பட்டதாக சந்தேகப்படும் வாகனங்களோடு ஒப்பிட்டு பார்க்க குற்றத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை கண்டுபிடிக்கலாம்.

(5) விபத்து நடந்த இடங்களில் கிடைத்த முன்விளக்கின் உடைந்த கண்ணாடி துண்டுகள், முன் கண்ணாடியின் துண்டுகள் மற்றும் ஜன்னல் கண்ணாடிகளின் துண்டுகளை கைப்பற்றி சந்தேகப்பட்ட வாகனங்களிலிருந்து மாதிரி கண்ணாடி துண்டுகளை கைப்பற்றி இரண்டையும் பரிசோதனைக்கு அனுப்பி விபத்தில் சம்பந்தப்பட்ட உண்மையான வாகனத்தை கண்டுபிடிக்கலாம்.

(6) உடைந்த பொருட்கள் அதாவது பம்பர் போன்ற உலோக பொருட்களிலிருந்து உடைந்துபோன சிறிய பாகங்கள், கதவின் கைப்பிடிகள், ரேடியட்டரின் பகுதிகள் இவைகள் மூலமாகவும் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை கண்டு பிடிக்கலாம்.

(7) விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திலிருந்து எடுக்கப்பட்ட சிறிய துணிகளுடன் விபத்தில் பாதிக்கப்பட்டவர் அல்லது இறந்துபோனவர் அணிந்து இருந்த துணியிலிருந்து மாதிரிக்கு

துணிகளை எடுத்து பரிசோதனைக்கு அனுப்பி விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை கண்டுபிடிக்கலாம்.

(8) விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திலிருந்து எடுக்கப்பட்ட ரத்தம், முடி இவைகளை பாதிக்கப்பட்டவரின் உடலிலிருந்து மாதிரிக்காக ரத்தம், முடியை எடுத்து அனுப்பி விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை கண்டுபிடிக்கலாம்.

## இறந்து போனவரைப்பற்றி விசாரித்தல்

விசாரணை செய்யும் அதிகாரி காயமடைந்தவரையோ அல்லது இறந்து போனவரைப்பற்றியோ பின்கண்ட விவரங்களை விசாரிக்க வேண்டும்.

(1) நேரடியாக மோதியதால் காயமேற்பட்டதா ? அல்லது இலேசாக பக்கவாட்டில் மோதியதால் ஏற்பட்டதா ?

(2) வாகனம் ஏறியதால் அதன் பளுவினால் காயம் ஏற்பட்டதா ?

(3) இறந்துபோனவரின் சடலத்தை வாகனம் இழுத்துச் சென்றுள்ளதா?

(4) வாகனம் மோதியதால் அந்த நபர் ரோட்டில் தள்ளப்பட்டுள்ளாரா?

(5) வாகனத்திலிருந்து அவர் தவறி விழுந்து விட்டாரா?

(6) வாகனத்தின் கீழே உள்ள அச்சுப்போன்ற பொருட்களால் மோதி காயம் ஏற்பட்டுள்ளதா?

(7) விபத்து ஏற்படும்பொழுது அந்த வாகனம் சென்ற வேகம்

(8) இறந்து போனவர் அல்லது காயமுற்றவருக்கு இரத்த அழுத்த நோய், கண் தெரியாமல் இருப்பது, மாலை கண் நோய், செவிடு, காக்காய் வலிப்பு போன்ற நோய்கள் உள்ளதா ?

(9) ஏதாவது சம்பந்தம் இல்லாத காயங்கள் அவருக்கு ஏற்பட்டுள்ளதா? அங்கு கண்ணாடி தூள்கள் வர்ணங்கள் போன்றவைகள் காணப்படுகின்றதா ? உதாரணமாக கண்ணாடித்தூள்கள் வர்ணங்கள் போன்றவைகள் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தில் உள்ள மாதிரியை எடுத்து ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்

மாதிரிக்காக சிறிது இரத்தமும், சிறுநீரும் மற்றும் காயமடைந்தவரின் தலையிலிருந்து முடியும் கைப்பற்ற வேண்டும். காயமடைந்தவர் அல்லது இறந்து போனவரின் ஆடைகளை பாதுகாக்க வேண்டும். உடையில் ஏற்பட்டுள்ள கிழிசல்கள் முதலியவைகளை மகஜரில் குறிப்பிட வேண்டும். மேலும் இறந்துபோனவர் மீது வாகனம் ஏறி உள்ளதா? இறந்து போனவரை வாகனம் இழுத்துக்கொண்டு போயுள்ளதா? வாகனம் நேரடியாக மோதியுள்ளதா? அல்லது பக்கவாட்டில் லேசாக மோதியுள்ளதா? ஆடைகள் கண்ணாடிகளால் அல்லது வாகனத்தில் உள்ள தகடுகளால் கிழிக்கப்பட்டுள்ளதா? அந்த ஆடையில் இரத்தம், மண், எண்ணெய், கிரீஸ், அழுக்கு, உடைந்த துண்டுகள், ஆடை வெட்டப்பட்டுள்ளதா? பட்டன்கள் அறுந்துப்போய் உள்ளனவா என்பதை நன்கு சோதனை செய்துவிட்டு பின்பு அதை நன்கு காய வைத்துவிட்டு முறையாக (பார்சல்) செய்ய வேண்டும்.

## சந்தேகப்பட்ட வாகனங்களை பரிசோதித்தல்

சந்தேகப்பட்ட வாகனங்களைப் பற்றி பின்கண்டவாறு பரிசோதனை செய்ய வேண்டும்.

(1) கைரேகைப் பதிவுகள்

(2) உடைந்த கண்ணாடி துண்டுகள் எடுத்து விபத்து நடந்த இடத்தில் கிடைத்த கண்ணாடி துண்டுகளுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

(3) சந்தேகப்பட்ட வாகனத்திலிருந்து பெயிண்டோ அல்லது எனாமல் பெயிண்டோ சொட்டப்பட்டு இருப்பதை புகைப்படம் எடுத்துக் கொண்டு பின்பு அதை புதிய பிளேடினாலோ அல்லது சுத்தமான ஒரு ஆயுதத்தினாலோ கொஞ்சம் மாதிரிக்காக சுரண்டி எடுத்து குற்றம் நடந்த இடத்தில் பெயிண்டுடனோ அல்லது எனாமல் பெயிண்டுடனோ ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

(4) இரத்தத்துளிகள், முடிகள், துணி அல்லது நூல்கள் வாகனத்தில் ஒட்டிக்கொண்டிருந்தால் அதை புகைப்படம் எடுக்க வேண்டும். பின்பு அதைக் கைப்பற்ற வேண்டும். அதன்பின்பு சரியாக அது வாகனத்தில் எந்த பகுதியிலிருந்தது என்றும் அந்த பகுதி எவ்வளவு உயரத்தில் இருந்தது என்றும் கணக்கிட வேண்டும்.

(5) வாகனத்தில் விபத்துக்களால் ஏற்பட்ட உடைசல் அல்லது ஒடுக்குகளை புகைப்படம் எடுக்க வேண்டும். அது வாகனத்தில் எந்த பகுதியில் உள்ளது ? அதன் உயரம் என்ன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

(6) வாகனத்தின் உடைந்த துண்டுகளை விபத்து நடந்த இடத்திலிருந்து கைப்பற்ற வேண்டும். பின்பு அதை விபத்துக்குள்ளான வாகனத்துடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

(7) விபத்துக்குள்ளான வாகனத்தின் உள்ளேயும் நன்கு சோதனையிட வேண்டும். அங்கு காணப்படும் விபத்துக்கு சம்பந்தப்பட்ட பொருட்களையும் கைப்பற்ற வேண்டும்.

(8) வாகனத்தின் கீழ் பகுதியையும் நன்கு சோதனைபோட வேண்டும். வாகனத்தின் அடிப்பட்டவரால் வாகனத்தின்கீழ் உள்ள பகுதிகளில் ஏதேனும் அடையாளம் அல்லது மாற்றம் இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும்.

(9) வாகனத்தின் உள்ளேயும் வெளியேயும் சிந்தி இருக்கும் எண்ணெய் போன்ற பொருட்களை கைப்பற்ற வேண்டும்.

(10) விபத்துக்குள்ளான வாகனத்தை அதன் தன்மையைக் குறித்து மோட்டார் வாகன இன்ஸ்பெக்டர் அவர்களால் பரிசோதனை செய்யப்பட்டு அதற்கான சான்றிதழையும் பெறவேண்டும்.

## சந்தேகப்பட்ட ஓட்டுநரை பரிசோதனை செய்தல் :

(1) விபத்து நடந்த சமயத்தில் அவர் வாகனம் ஓட்ட தகுதியான நிலைமையில் இருந்தாரா என்று பரிசோதனை செய்ய வேண்டும்.

(2) விபத்துக்குள்ளானவர் கூறியபடி வாகனத்தை ஓட்டி வந்தவரின உடை, காலணி போன்றவைகள் அணிந்துள்ளாரா என்று கவனிக்க வேண்டும்.

(3) விபத்து நடந்தபோது வாகனம் ஓட்டி வந்தவர் மது அருந்தியிருந்தாரா என்று சோதனை செய்ய வேண்டும்.

## அத்தியாயம் - 4

## ஒரு நபருக்கு எதிராக செய்யப்படும் குற்றங்கள்

ஒரு நபர் தாக்கப்படும் போது பின்கண்ட அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(1) குற்றம் நடந்த இடத்திற்கு சென்ற உடனே தாக்கப்பட்டவர் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டாரா என்று விசாரணை செய்யும் அதிகாரி பார்க்க வேண்டும். அவர் உயிருடன் இருந்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை ஏற்பாடு செய்ய வேண்டும்.

(2) அவர் தாக்கப்பட்டு தரையில் கிடந்தால் அவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு முன்பு அவர் இருந்த நிலை அவைகளைப் பற்றி குறிப்பு எடுத்து அனுப்ப வேண்டும். அவர் இருந்த நிலையை கேஸ் டைரியில் எழுத வேண்டும்.

(3) குற்றம் நடந்த இடத்தில் வேறு யாரும் வராதவாறு அதை பாதுகாக்க வேண்டும்.

(4) குற்றம் நடந்த இடத்தை ஒரு முனையிலிருந்து மறு முனை வரை கவனமாக பார்வையிட வேண்டும். குற்றத்தில் சம்பந்தப்பட்ட பொருட்கள் கிடைத்தால் அதை கைப்பற்ற வேண்டும்.

(5) குற்றம் நடந்த இடத்தை குறிப்பிட ஒரு வரைபடம் தயாரிக்க வேண்டும்.

(6) குற்றம் நடந்த இடத்தை பல கோணங்களில் புகைப்படம் எடுக்க வேண்டும். இறந்தவரின் பிணமோ அல்லது காயம்பட்டவரோ விழுந்து கிடந்தால் அதையும் புகைப்படம் எடுக்க வேண்டும்.

(7) குற்றம் நடந்த இடத்தில் காணப்படும் தரை, சுவர்கள், தளம், மேசை, நாற்காலி போன்ற பொருட்களையும் நன்கு பார்வையிட வேண்டும்.

(8) பிரேதத்தின் முழு விபரம், ஆணா, பெண்ணா என்பது பிரேதத்தின் தோற்றம் வயது, உடுத்தியிருக்கும் உடைகள், பிரேதத்தின் தன்மை இவைகளை குறிப்பிட வேண்டும்.

(9) உடலில் காயங்கள் இருக்கும்படியான இடம், காயத்தின் அளவு, நீளம், அகலம், ஆழம் முதலியன குறிப்பிட வேண்டும்.

(10) இரத்தத்துளிகள், விந்துத்துளிகள், நூல்கள், முடிகள் இவைகளை தேடி அவைகளை கைப்பற்ற வேண்டும்.

(11) இறந்து போனவரின் தலையிலிருந்தோ அல்லது தாக்கப்பட்டவரின் தலையிலிருந்த முடிகளை வெட்டி மாதிரிக்காக கைப்பற்ற வேண்டும்.

(12) குற்றம் நடந்த இடத்தில் கிடைக்கும் தாக்கப்பட்டவர் அல்லது குற்றவாளியின் கைரேகைப் பதிவுகளையும் காலடிப்பதிவுகளையும் எடுத்து பரிசோதனை செய்து குற்றவாளியின் கைரேகைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

(13) தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்ட வழக்குகளில் வாதியின் கையை சுத்தமான காகிதப்பைகளால் கட்டி பாதுகாத்து பரிசோதனை செய்யும் அதிகாரியிடம் அனுப்ப வேண்டும்.

(14) பிரேத பரிசோதனை சமயத்தில் மாதிரிக்காக சிறிய இரத்தம் எடுத்து வைக்க வேண்டும்.

(15) கற்பழிப்பு மற்றும் பாலுணர்வு வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர்களால் பரிசோதனை செய்யப்பட வேண்டும். மேற்படி நபர் கற்பழிக்கப்பட்டவரா என்றும் ஆணின் விந்து காணப்படுகிறதா என்றும் மேலும் உடலில் காயங்கள் காணப்படுகிறதா என்றும் பரிசோதனை செய்யப்பட வேண்டும். மாதிரிக்காக அவருடைய கையிலிருந்து உடலிலிருந்தும் அவளின் மறைவான பகுதியிலிருந்தும் முடிகளை வெட்டி எடுக்க வேண்டும்.

(16) பாதிக்கப்பட்ட பெண் உடுத்தியிருந்த உடுப்புகளை நன்கு பரிசோதனை செய்ய வேண்டும். சம்பவத்தின் போது உடுப்புகள் கிழிந்திருந்தால் அல்லது வேறு துப்புகள் கிடைக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும்.

(17) குற்றம் நடந்த இடத்தில் ஆயுதங்கள் இருந்தால் அவற்றை கவனமாக கைப்பற்ற வேண்டும். அதிலுள்ள கைரேகைப் பதிவுகள், இரத்தக்கறைகள், அழுக்குகள், நூல்கள் இவை மிகவும் முக்கியமான சாட்சிப்பொருட்களாகும்.

(18) துப்பாக்கியால் சுட்ட வழக்காக இருந்தால் சுடப்படாத தோட்டாக்கள், சுடப்பட்ட குண்டின் ரவைகள், சுடப்பட்ட குண்டின் காலி தோட்டாக்கள் மற்றும் தோட்டாக்களின் உள்ளே வைத்திருக்கும்படியான பொருட்கள் இவைகளை குற்றம் நடந்த இடத்தில் தேடி அவைகளை கைப்பற்ற வேண்டும்.

(19) நஞ்சு சம்பந்தப்பட்ட வழக்கானால் சந்தேகப்பட்ட நஞ்சு அது வைத்திருந்த பாட்டில், ஊற்றிக்குடித்த டம்ளர் அல்லது பாத்திரம் ஆகியவற்றின் மீது காணப்படும் கைரேகைகள் கலையாமல் கைப்பற்ற வேண்டும். மேலும் நஞ்சு சாப்பிட்டவர் வாந்தி எடுத்திருந்தால் மேற்படி வாந்தியை பாதுகாத்து பரிசோதனைக்கு அனுப்பி இது எந்தவகையை சார்ந்த நஞ்சு என்று கண்டுபிடிக்க வேண்டும்.

(20) குற்றம் நடந்த இடத்தில் குற்றவாளியால் ஏதாவது பொருட்கள் விட்டுச்சென்றிருந்தால் அதையும் கைப்பற்ற வேண்டும் இதை காவல் துறையின் துப்பறியும் நாய்களால் மோப்பம் பிடிக்கச் செய்து உண்மை குற்றவாளிகளை கண்டுபிடிக்க உதவும்

(21) குற்றம் நடந்த இடத்தில் எதிரிக்கும் மற்றவருக்கும் நடந்த மோதலில் நாற்காலி, மேசை போன்ற பொருட்கள் தலைகீழாக மாறியிருந்தாலோ அல்லது உடைந்து இருந்தாலோ அல்லது ஆடைகள் கிழிந்திருந்தாலோ அதையும் கைப்பற்ற வேண்டும்

(22) கற்பழிப்பு வழக்குகளில் பாதிக்கப்பட்டவர் மற்றும் எதிரி உடுத்தியிருந்த உடுப்புகள், படுக்கைகள் அப்போது உபயோகிக்கப்பட்ட டவல்கள் கிழிந்த ஆடைகள், கைக்குட்டைகள், காகிதத்துண்டுகள், சம்பந்தப்பட்ட கறைகள், முடிகள் இவைகளை தேடி கண்டுபிடித்து அவைகளை கைப்பற்ற வேண்டும்.

(23) கதவு உடைத்து உள்ளே சென்றிருந்தாலோ அல்லது வெளியே வந்திருந்தாலோ எதிரியின் கைரேகைகள் கிடைக்கிறதா என்று அங்கு சோதனை செய்ய வேண்டும். எந்த வகை ஆயுதத்தை உபயோகித்து கதவை உடைத்து உள்ளே சென்று இருக்கிறான் என்பதனையும் கவனிக்க வேண்டும்.

(24) குற்றவாளி வந்த வழி, திரும்பி சென்ற வழி இவைகளை சோதனையிட வேண்டும். குற்றவாளியின் கைரேகைகள் அல்லது காலடிகள் அல்லது அவன் அணிந்திருந்த ஷுவின் காலடிகள், சக்கரத்தின் பதிவுகளை எடுத்து அவைகளை புகைப்படம் எடுக்க வேண்டும்.

(25) சக்கரத்தின் அடையாளங்களையும், ஆயுதங்கள் உபயோகித்த இடங்களையும் காலடி ரேகைகளையும், ஷுவின் காலடிகளையும் புகைப்படம் எடுத்தப்பின் அவைகளை கைப்பற்ற வேண்டும்.

(26) சந்தேகப்படும் நபரின் உடலை நன்றாக பரிசோதனை செய்ய வேண்டும். மேற்படி நபரின் மீது ஏதாவது அன்னியப் பொருட்கள் (Foreign goods) இருந்தால் அவைகளை கைப்பற்றி பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அது புலன்விசாரணைக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

(27) இறந்து போனவரின் கைரேகைகளை எடுக்க வேண்டும். அது அவரை யார் என்று அடையாளம் காட்ட உதவியாக இருக்கும்.

## அத்தியாயம் - 5

## துப்பாக்கி சூடு சம்பந்தப்பட்ட வழக்குகள்

துப்பாக்கியால் சுடப்பட்ட வழக்குகளில் துப்பாக்கியால் சுடப்பட்டதை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து தெரிவிக்கும் (Ballistics expert) நிபுணரிடம் உதவியை இந்த வழக்குப்பற்றி விசாரணை செய்யும் அதிகாரி நாட வேண்டும். பின்கண்டவைகள் இந்த வழக்கில் ஆராயப்பட வேண்டிய அடிப்படை செய்திகள் ஆகும்.

(1) குற்றம் நடந்த இடத்தை புகைப்படம் எடுக்க வேண்டும்.

(2) குற்றம் நடந்த இடத்தை ஒரு வரைபடம் வரைய வேண்டும். அதில் பொருட்கள் இருந்த இடமும் அதைச் சுற்றியிருந்த நிலையையும் குறிப்பிட வேண்டும்.

(3) பாதிக்கப்பட்டவரின் கையில் ஏதேனும் துப்பாக்கி போன்ற பொருட்கள் இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். அப்படியிருந்தால் அதை அவர் இறுக்கி பிடித்திருக்கிறாரா இல்லையேல் சாதாரணமாக வைத்திருக்கிறாரா என்று குறிப்பிட வேண்டும்.

(4) துப்பாக்கி குண்டு வெளிப்படையாக சுடப்பட்டுள்ளதா அல்லது எங்கு சுடப்பட்டுள்ளது? காயத்தின் தன்மை, காயத்தின் நீளம், அகலம், ஆழம் முதலியன எந்த திசையிலிருந்து சுடப்பட்டுள்ளது என்பன. சுடப்பட்டுள்ள காயத்தையும் அதே அளவில் புகைப்படம் எடுக்க வேண்டும்.

(5) இறந்து போனவரைப் பற்றி பிரேத பரிசோதனை செய்ய வேண்டும். இறந்து போனவரின் உடலில் இருக்கும் துப்பாக்கி குண்டுகளை கைப்பற்ற வேண்டும். துப்பாக்கி குண்டின் மேல் இருக்கும் பேரல் அடையாளங்களை கவனமாக பாதுகாக்க வேண்டும்.

(6) பிரேத பரிசோதனை செய்யும் மருத்துவ நிபுணரை இந்த இறப்பு எவ்வாறு ஏற்பட்டது? எப்போது ஏற்பட்டது? காயம் அடைந்தபின்பு இறந்து போனவர் எந்த திசையில் எவ்வாறு சென்று இருப்பார், எவ்வளவு தூரத்திலிருந்து அல்லது எந்த திசையிலிருந்து சுடப்பட்டு இருக்கலாம் என்பதை கேட்டு அறிய வேண்டும்.

(7) முடியுமானால் துப்பாக்கி குண்டுகளைப் பற்றிய நிபுணரை வரவழைத்து பிரேதப்பரிசோதனை செய்யும் மருத்துவருடன் சேர்ந்து பிரேதப் பரிசோதனை நடத்தலாம்.

(8) குற்றம் நடந்த இடத்தில் சுடுவதற்கு உபயோகிக்கப்பட்ட துப்பாக்கி கிடைத்தால் அதனுடைய பேரலை துடைக்கக்கூடாது. அதை அப்படியே பாதுகாத்து துப்பாக்கி குண்டுகளைப் பற்றி ஆராய்ந்து கூறும் நிபுணரிடம் அனுப்பி அதை பரிசோதனை செய்து துப்பாக்கியால் சுடப்பட்டது எப்போது என்று உறுதி செய்துகொள்ளலாம்.

(9) சுடப்பட்ட துப்பாக்கி அங்கு இருந்தால் உடனே கைரேகை நிபுணரை வரவழைத்து அதிலுள்ள கைரேகையை எடுக்க வேண்டும்.

(10) குற்றம் நடந்த இடத்தில் சுடப்பட்ட குண்டுகள், சுவற்றிலோ மரத்திலோ, கதவிலோ இருந்தால், அந்த குண்டை மிகவும் கவனமாக அதைச் சுற்றியிருக்கும் பொருட்களுடன் குண்டு விழாதவாறு கைப்பற்ற வேண்டும். மேலும் அந்த குண்டின் மீது எந்தவிதமான கீறல்களும் விழாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(11) துப்பாக்கியின் எண், பேரலின் அளவு, துப்பாக்கி செய்யப்பட்ட நாடு

(12) ஜன்னல் வழியாகவோ அல்லது கதவின் வழியாகவோ துப்பாக்கி சுடப்பட்டு இருந்தால் கதவு, ஜன்னல் அல்லது கண்ணாடிகள் உடைக்கப்பட்டு அங்கு கீழே விழுந்து சிதறி இருந்தால் அவைகளையும் கைப்பற்ற வேண்டும். மேற்படி சிதறல்கள் துப்பாக்கியானது எந்த திசையிலிருந்து உபயோகப்படுத்தப்பட்டது என்பதை தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும். சந்தேக நபர்களை கைது செய்யும் போது அவர்கள் குற்றம் செய்த நேரத்தில் உடுத்தியிருந்த உடுப்புகளை கைப்பற்றி அவைகளை பரிசோதனைக்கு அனுப்பி அவர்களுடைய உடையில் உடைந்த கண்ணாடியின் சிறிய துண்டுகள் இருந்தால் அவைகளை கைப்பற்ற வேண்டும்.

(13) துப்பாக்கியால் சுட்ட நபர் கையும் களவுமாய் பிடிக்கப்பட்டால் உடனடியாக அவரை அருகில் உள்ள (Forensic Science Laboratory) விஞ்ஞான முறையில் புலன் ஆராய்ந்து

அறிவிக்கும் கூடத்திற்கு அனுப்பி அவரை நிபுணரின் உதவியால் சோதனை செய்யப்பட வேண்டும்.

**துப்பாக்கி குண்டைப் பற்றி ஆராய்ந்து அறிவிக்கும் நிபுணரிடம் பின்கண்ட கேள்விகளை வழக்கு விசாரணை செய்யும் அதிகாரி கேட்கலாம்.**

(1) இந்த துப்பாக்கி இந்திய துப்பாக்கி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதா? அப்படியென்றால் இதன் மாடல், செய்யப்பட்ட இடம், பேரலின் அளவ. அது தாக்கக்கூடிய தூரம் என்ன?

(2) இதில் சமீபத்தில் சுடப்பட்டதற்கான அடையாளங்கள் உள்ளனவா?

(3) துப்பாக்கியும் , சுடப்பட்ட குண்டுகளும் சுடப்படாத குண்டுகளும் துப்பாக்கி குண்டு நிபுணரிடம் அனுப்பப்பட்டால் சுடப்பட்ட குண்டு இந்த துப்பாக்கியால் தான் சுடப்பட்டுள்ளதா என்று கேட்க வேண்டும்.

(4) குண்டால் தாக்கப்பட்டவரின் உடையை பரிசோதனைக்கு அனுப்பி இருந்தால் அந்த நிபுணரிடம் இந்த துப்பாக்கி சூடு எவ்வளவு தூரத்திலிருந்து சுடப்பட்டது.

(5) துப்பாக்கியால் சுடப்பட்ட தூரம் ஒரு கண்ணாடி ஜன்னலில் இருந்தால் அந்த நிபுணரை வரவழைத்து அந்த குண்டு எவ்வளவு தூரத்திலிருந்து எந்த திசையிலிருந்து சுடப்பட்டுள்ளது என்று கேட்க வேண்டும்.

(8) சந்தேக நபரை பரிசோதனைக்கு அனுப்பினால் சந்தேக நபரின் கையில் துப்பாக்கி குண்டின் தூள்கள் மற்றும் புகைகள் அவர் கையில் உள்ளனவா என்று பரிசோதித்து அவர்தான் குற்றவாளி என்று கூற முடியும்.

## அத்தியாயம் - 6

## தீவிபத்து சம்பந்தப்பட்ட வழக்குகள்

தீ சம்பந்தப்பட்ட வழக்குகளில் பின்கண்ட முக்கியமான செய்திகளை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(1) முதலில் தீ எங்கு பிடித்தது ?

(2) தீ பிடிக்கும் போது மணி என்ன ?

(3) தீ விபத்துக்குள்ளான காரணம் என்ன ? தீ முதலில் எப்படி பிடித்தது ?

சில வழக்குகளில் தீயை அணைக்கும் அதிகாரிகள் முதலில் சென்று விடுவார்கள். விசாரணை செய்யும் அதிகாரி அந்த தீ விபத்தை பற்றி அதிக அளவில் தகவல்களை சேகரிக்க வேண்டும். சாதாரணமாக தீ ஏற்படாது அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு உண்மையில் தீ எவ்வாறு முதலில் பிடித்தது என்று கண்டுபிடிக்க வேண்டும். அல்லது தீ வைப்பதற்கு ஏதாவது காரணம் உள்ளதா என்று

கண்டுபிடிக்க வேண்டும். முதலில் சரியாக அந்த தீ எங்கு பிடித்தது என்பதை சரியாக கண்டுபிடிக்க வேண்டும்.

(1) தீ பிடிப்பதை முதலாவது யார் பார்த்தது என்பதை கண்டுபிடித்து அவரை விசாரித்து அவர் கூறுவதை கவனிக்க வேண்டும்.

(2) தீ உள்ளே எரிந்ததா அல்லது வெளிப்படையாக எரிந்ததா?

(3) தீ விபத்தின் போது அந்த இடத்தின் உள்ளே விரைவில் தீப்பிடிக்கக்கூடிய பொருட்கள் இருந்ததா? என்று விசாரணை செய்ய வேண்டும்.

(4) கட்டிடத்தின் எவ்வளவு பகுதி தீயினால் சேதம் அடைந்துள்ளது?

(5) தீயினால் சேதமடைந்த குப்பைகளை அகற்றும்போது அங்கு அந்த இடத்திற்கு சம்பந்தப்படாத பொருட்கள் இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும்.

(6) தீ பிடிப்பதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்களை கண்டறிய வேண்டும். தீ வேண்டுமென்றே வைக்கப்பட்டதா என்று விசாரிக்க வேண்டும்.

**பின்கண்ட காரணங்களால் தீ விபத்து எப்போது ஏற்பட்டது என்று முடிவு செய்ய வேண்டும் :**

(1) தீ விபத்து ஏற்பட்ட இடத்திலிருந்து அதைவிட்டு கடைசியாக வெளியேறிய நேரம் அல்லது தீ விபத்து ஏற்படுவதற்கு முன்பு நல்ல முறையில் பார்த்த நேரம்.

(2) மின்சார விளக்குகள் நின்ற நேரம், சுவர் கடிகாரங்கள் நின்ற நேரம்.

(3) முதலில் தீ பிடித்து எரிந்த நேரம்.

(4) ஏதாவது வெடி சப்தம் கேட்ட நேரம் அதை அருகிலுள்ள வீட்டிலிருப்பவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்..

**பின்கண்ட பொதுவான இயற்கையான காரணங்களால் தீ விபத்து ஏற்படுவதுண்டு:**

(1) எளிதில் தீ பிடிக்கும் தன்மையுள்ள பொருட்களின் மீது சூரிய கதிர்கள்பட்டு சூட்டினால் ஏற்படும்பொழுது.

(2) மின்சார கோளாறு காரணமாகவும், சமையல் கேஸ் காரணமாகவும்.

(3) சில பொருட்கள் உராய்வதால் ஏற்படும் நெருப்பிலிருந்து.

(4) சிகரெட் , பீடி துண்டுகள் , தீக்குச்சிகள்.

(5) எளிதில் தீப்பிடிக்கக்கூடியதும் எரிபொருளான இராசாயன பொருட்களான நைட்ரிக் ஆசிட், பாஸ்பரம் , உரப்பொருட்கள் போன்றவைகளால்.

(6) சாணக்குவியல் மற்றும் வைக்வோல்போரில் உள்ள பாக்டீரியா கிருமிகளால் ஏற்படும் அதிக சூட்டினால்.

(7) வெடி மருந்துகளான எந்த பொருளாலும்.

தீ விபத்தானது வேண்டுமென்றே ஏற்படச் செய்திருந்தால் கீழ்கண்ட காரணங்களால் அவை ஏற்படக்கூடும். பின்கண்ட முக்கியமான செய்திகள் தீ பிடித்ததற்கான காரணங்களை அறிந்து முடிவு செய்ய ஏதுவாகும்-

(1) திடீரென்று ஒன்றுக்கொன்று உராய்ந்து அதனால் ஏற்படக்கூடிய அபாயத்தின் போதும், தீ பிடிப்பதற்கு இலேசில் சாத்தியக்கூறுகள் இல்லாதபோதும்.

(2) தீயுள்ள இடத்தில் எளிதில் தீ பிடிக்கக்கூடிய பொருட்களை வழக்கத்திற்கு மாறாக வைத்து இருக்கும்போது.

(3) எளிதில் தீ பிடிக்கக்கூடிய மெழுகு , பெட்ரோல் , மண்ணெண்ணை , புகைப்பட சுருள் , மரம் அறுத்த தூள்கள் மேற்படி இடத்தில் காணப்படுவது.

(4) எந்த விதமான காரணமும் இன்றி ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தீ பிடிக்கும்போது.

(5) வழக்கத்திற்கு மாறான கடுமையான கருப்புப்புகை , வெள்ளைப்புகை அல்லது மஞ்சள்புகை காணப்படும்போது.

(6) மேற்படி இடத்திற்குவர அமைதியில்லாத நபர் புலன் விசாரணையில் அதிகம் ஆர்வம் காட்டுவதும், ஒன்றுக்கு மேற்பட்ட தீ பிடிக்கும் இடங்களில் அவர் தீ பிடிப்பதாக எச்சரிக்கை அளிப்பதும்.

(7) எரிந்துபோன இடத்தில் மொத்தம் வைக்கப்பட்டு இருந்த பொருட்களில் எரிந்து போனவைகள் எவ்வளவு எரிந்து போகாதவைகள் எவ்வளவு?

(8) தீ விபத்து ஏற்படும் முன்பு அங்குள்ள பொருள்கள் நியாயமான காரணங்களுக்காக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதா? அல்லது முன்னேற்பாடாக மாற்றப்பட்டுள்ளதா?

(9) தீ விபத்து ஏற்பட்டபோது அங்குள்ள விலை உயர்ந்த நாற்காலி போன்ற மரச்சாமான்கள் மற்ற பொருட்கள் வேறு இடத்திற்கு மாற்றி வைக்கபட்டுள்ளதா? அப்போது அந்த இடத்தில் அந்த இடத்தின் உரிமையாளர் இருந்தாரா? அல்லது அவரது குடும்பத்தினர் இருந்தார்களா? இல்லையா?

(10) தீ விபத்தில் இரகசிய மற்றும் முக்கியமான பதிவேடுகள் எரிந்துபோய் உள்ளனவா ? அல்லது கணக்காளருக்கு தேவையான கணக்கு புத்தகங்கள் எரிந்துபோய் விட்டனவா என்பது.

(11) மற்றவரால் தவறான முறையில் வழிகாட்டப்பட்டு உள்ளரா? அல்லது வழிநடத்தப்பட்டு உள்ளரா என்பதையும் விசாரிக்க வேண்டும்.

**விசாரணை செய்யும்போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:**

(1) குற்றம் நடந்த இடத்தை பல கோணங்களில் புகைப்படம் எடுக்க வேண்டும்.

(2) தீ விபத்து ஏற்பட்ட இடத்திற்கு ஒரு மாதிரி வரைபடம் தயாரிக்க வேண்டும்.

(3) தீ பிடித்த இடத்திற்கான ஒரு (பார்வை மகஜர்) இருக்கும்படியாக தயாரிக்கப்பட வேண்டும். எத்தகையான பொருட்கள் உள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டும். சுவர் மற்றும் மெத்தைப்படிகள் எவ்வளவு தூரம் தீயினால் கறுப்படைந்து உள்ளது. அங்கு காணப்படும் சம்பந்தமில்லாத பொருட்கள்

(4) எதிரி அந்த வீட்டின் உள்ளே வந்துள்ளது தெரிந்தால் அவரின் கைரேகை மற்றும் காலடி ரேகையை எடுக்க வேண்டும். சக்கரத்தின் டயர் அடையாளங்களையும் எடுக்க வேண்டும். உள்ளே நுழைவதற்கு உபயோகப்படுத்திய கருவிகளையும் கைப்பற்ற வேண்டும். பௌதிக சாட்சிப் பொருட்களான தலைமுடி, இரத்தக்கறை, உடைந்த கண்ணாடி துண்டுகள் போன்றவற்றை கைப்பற்ற வேண்டும்.

(5) சந்தேகப்பட்ட நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துணிகள், காலணிகள் போன்றவற்றை நிபுணரிடம் அனுப்பி பரிசோதனை செய்யவேண்டும். அவரிடம் பெயிண்ட், மரத்தூள்கள், உடைந்த கண்ணாடித் துண்டுகள், எண்ணெய் கறைகள், எளிதில் தீப்பிடிக்கக்கூடிய திரவங்கள், மெழுகுவர்த்தி உள்ளதா என்று கவனிக்க வேண்டும்.

(6) தீயை உண்டுபண்ணுவதற்கு உபயோகிக்கப்பட்ட எரிந்து போன தீக்குச்சி, கம்பிகள், திரிகள், எரிந்து போன காகிதங்கள் அல்லது வேறு பொருட்கள் மற்றும் தீக்கொளுத்த ஏதுவான பொருட்களை தேடி கண்டுபிடித்து சேகரிக்க வேண்டும்.

(7) சாம்பல் மற்றும் குப்பைகளை தீப்பிடித்த இடத்திலிருந்து கைப்பற்ற வேண்டும். அதை நிபுணரிடம் அனுப்பி அதில் எளிதில் தீப்பிடிக்கக் கூடிய பொருட்கள் ஏதாவது இருக்கிறதா என்று பரிசோதனை செய்ய வேண்டும்.

(8) எரிந்து போன கடிதங்கள் அல்லது கருகிப்போன பதிவேடுகள் சேகரிக்க வேண்டும். ஏனெனில் இந்த பொருட்கள் சில சமயங்களில் துப்பு கண்டு பிடிக்க உதவும்.

(9) எளிதில் தீப்பிடிக்கக் கூடிய திரவங்களான பெட்ரோல், மண்ணெண்ணெய் போன்றவைகள் எரியாத பொருட்களின் மீது ஊற்றப்பட்டுள்ளனவா என்பதை சோதனை செய்து கைப்பற்ற வேண்டும். இவைகளை பாதுகாப்பான பெட்டியில் வைத்து இரசாயன ஆய்வுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## அத்தியாயம் - 7

## வீட்டை உடைத்துக்கொண்டு உட்புகும் குற்றங்கள்

இந்த அத்தியாயத்தின்கீழ் வரும் வழக்குகளின் விசாரணையின் பொழுது கீழேயுள்ள சாட்சியங்கள் சேகரிக்க வேண்டும்.

(1) கண்ணாடிச் சாமான்கள், ஜன்னல் அல்லது கதவு அல்லது அலமாரி கண்ணாடிகள், வர்ணம் பூசப்பட்ட நாற்காலி, மேசை மற்றும் கட்டில், முகம் பார்க்கும் கண்ணாடி, டிரங்க் பெட்டிகள்,

சூட்கேஸ்கள், காகிதம் முதலியவைகளில் குற்றவாளி விட்டுச்சென்ற கைரேகைகளை ஆராய்ந்து எடுக்கவேண்டும்.

(2) சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் பாதம் மற்றும் காலணிகளின் அடையாளங்கள் கண்டுபிடிக்கவேண்டும். அழுந்தியுள்ள கால் ரேகைகள் இருக்கும் பட்சத்தில், அதனுடைய அச்சை பிளாஸ்டர் ஆப் பாரிஸினால் எடுக்கவேண்டும்.

(3) சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் கருவிகளின் அடையாளங்களை, சந்தேகப்படும் நபரிடம் அல்லது அவருடைய சுற்றுப்புறங்களிலிருந்து கைப்பற்றப்பட்ட கருவிகளுடன் ஒப்பிட்டு பார்க்கவேண்டும். சம்பவம் நடந்த இடத்திலுள்ள பொருள்களுக்கும் மற்றும் கருவிகளுக்கும் இடையே ஒன்றுக்கொன்று பொருள்கள் மாறியவைகளை அதாவது ஒவ்வொன்றினுடைய உடைந்த மிக நுண்ணிய பகுதிகளையும், வர்ணம் முதலியவைகளையும் சேகரித்து ஒப்பிட்டு பார்க்கவேண்டும்.

(4) சந்தேக நபரால் விட்டுச்சென்ற அவருடைய காயங்களில் இருந்து வழிந்த இரத்தத்திலுள்ள அடையாளங்களையும் இரத்தத்தையும் இரத்தக் கறைகளையும் சேகரித்து அவற்றை சந்தேகப்பட்ட நபரை கைது செய்தவுடன் அவருடைய உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட இரத்தத்துடன் ஒப்பிட்டு பார்ப்பதற்கு பாதுகாத்துவைக்க வேண்டும்.

(5) சம்பவம் நடந்த இடத்திலிருந்து சிகரெட்டுகள் அல்லது பீடி துண்டுகளை உமிழ்நீரினுடைய சாட்சியத்திற்காக சேகரிக்கவேண்டும்.

(6) சம்பவம் நடந்த இடத்தில் சந்தேகப்படும் நபரால் விட்டுச்சென்ற துணி அல்லது கைக்குட்டை அல்லது வேறு ஏதாவது துண்டு அல்லது காலணி அல்லது துணி ஆகியவற்றை சேகரித்து அவற்றில் ஏதாவது வெளிப்படையான தடயங்கள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து அவற்றை விசாரணையின் பொழுது எடுக்கப்பட்ட கண்ட்ரோல் மாதிரிகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்.

(7) சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் வண்டியினுடைய டயரின் அடையாளங்களை புகைப்படம் எடுக்கவேண்டும். பிற்காலத்தில் டயர் அடையாளங்களை ஒப்பிட்டு பார்ப்பதற்கு அவற்றை பிளாஸ்ட் ஆப் பாரிஸினால் அச்சாக எடுக்கவேண்டும்.

# அத்தியாயம் - 8

## கள்ள நோட்டு, கள்ள நாணயங்கள்

## COUNTERFEITING CURRENCY

கள்ள நாணயம் ரூபாய் என்பது அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட நாணயம், ரூபாய் போலவே சட்ட விரோதமாக தயாரிக்கப்படுவதாகும். கள்ள ரூபாய் கீழ்கண்ட முறை மூலம் தயாரிக்கப்படுகிறது..

(1) சரித்திரம் -

அ. கையால் வரைதல்

ஆ.பிரதி எடுத்து ஏமாற்றுதல்

இ. அச்சுமுறை

ஈ. அசல் ரூபாய் நோட்டையே திருத்துவது அல்லது மதிப்பை கூடுதலாக்குவது.

(2) மரம் அல்லது உலோகப் பலகை (பித்தளை, துத்தநாகம், இரும்பு முதலியவை) களினால் செதுக்குவது

(3) இயந்திரம் மூலம் உலோகப்பட்டைகளில் செதுக்குவது

(4) இரசாயனப் பூச்சு மூலம் உலோகப் பலகைகளில் படியச்செய்வது

(5) Intaglio Process

(6) புகைப்பட முறையைப் பயன்படுத்துதல்

(7) இரசாயன மாற்று

(8) புகைப்பட அச்சுமுறை

(9) மின்னியல் புகைப்படமுறை மற்றும் பல முறைகள்

**கள்ள நோட்டு அச்சடிக்க பொதுவாகப் பயன்படும் இயந்திரங்களாவன:**

(1) வீட்டிலேயே தயாரிக்கப்படும் இயந்திரங்கள், சிறிய அச்சுப்பொறிகள் மற்றும் நகல் எடுக்கும் பொறிகள்.

(2) அன்றாடம் பயன்படுத்தப்படும் அச்சுப்பொறிகளான, எழுத்து அச்சுப்பொறி, புகைப்பட மின்னச்சுப்பொறி முதலியன.

(3) சாதாரண வண்ணங்கள், வண்ண மைகள் மற்றும் அன்றாடம் அச்சடிக்கப்பயன்படும் மை வகைகள்.

(4) சாதாரண தாள்கள், அச்சுத்தாள்கள், பத்திரம் பதிவு செய்யப்பயன்படும் தாள்கள் மற்றும் ரூபாய் நோட்டைப் போன்ற தரமான தாள்கள்.

**நீர்க்குறி மற்றும் பாதுகாப்பு நூலைப் பயன்படுத்தி உண்மையானதாக தோன்ற செய்யும் முறைகள்:**

நீர்க்குறி (அ) பாதுகாப்பு நூல், தயாரிக்கப்படும்போதே தாளில் சேர்க்கப்பட்டு விடுகிறது. கள்ள நோட்டு தயாரிப்பாளர்கள் பொதுவாக கீழ்க்கண்ட முறைகள் மூலம் நீர்க்குறியை ஏற்படுத்துகிறார்கள்:

(1) மெழுகு, எண்ணெய் வகைகள், கிரிஸ் போன்றவை பயன்படுத்திய, செதுக்கப்பட்ட அச்சுகள் மூலம் அச்சிடுதல்.

(2) நீர்க்குறியை போன்றே கோடிட்டு பதியச்செய்தல்.

(3) நீரோட்டக்குறி மீது கள்ள நோட்டைவைத்து, உப்புத்தாள் மூலம் தேய்த்து உருவாக்குதல்.

(4) ஒரு மடிப்பை ஏற்படுத்தியோ ஒரு கோடு வரைவதின் மூலமோ பாதுகாப்பு நூலை உருவாக்குதல்.

## அச்சு ரூபாய் நோட்டின் விசேஷ தன்மைகள்:

(1) அச்சு மென்மையாகவும், கோடு விடுபடாமலும் தோற்றத்தில் எந்தப் பழுதும் இராது.

(2) வண்ணங்கள் முறை மிகத்தரமான முறையில் இருக்கும்

(3) தொடர்ச்சியாக தரப்பட்டுள்ள எண்கள் குறிப்பிட்ட வடிவிலும் ஒரு குறிப்பிட்ட வரையறையுடனும் இருக்கும்.

(4) தாளின் தரம் நன்றாகவும் கையினால் உரசிப்பார்க்கும்போது சத்தம் எழுப்பக்கூடியதாகவும் இருக்கும்.

(5) நீரோட்டக்குறியும் பாதுகாப்பு நூலும் தாளாக தயாரிக்கப்படும்போது இணைந்து உருவாக்கப்படுகிறது.

## சேகரிக்கப்பட வேண்டிய ருசு தடயங்கள்:

கள்ள ரூபாய் நோட்டு தயாரிக்கப்பட்ட இடத்தில் கீழ்க்கண்ட தடயங்கள் விசேஷமாக சேகரிக்கப்பட வேண்டும்.

(1) சந்தேகப்படும் நபர்கள் பயன்படுத்திய பொருட்களின் மீதுள்ள கைரேகை தடயங்கள்.

(2) அச்சடிக்க பயன்பட்ட வண்ணங்கள், மைகள் மற்றும் இராசாயனங்கள்.

(3) கள்ளக்கரன்சி தயாரிக்கப்பட்ட தாள்கள்.

(4) கள்ள நோட்டு தயாரிக்கப்பயன்பட்ட மரம் மற்றும் உலோகத்தினாலான அச்சுகள்.

(5) அச்சு செதுக்கப் பயன்படுத்தப்பட்ட மரம், உலோகப்பொருள்கள்.

(6) முழுவதும் உருவான (அ) அரை குறையாக தயாரிக்காப்பட்ட கள்ள நோட்டுகள்.

(7) அரசு முத்திரை மற்றும் நீரோட்டக்குறிக்குப் பயன்படுத்தப்பட்ட அச்சுககள்.

(8) எழுத்துக்கள் மற்றும் உருவங்கள் பொறிக்கப் பயன்பட்ட எண்கள், வரிசைகள் அல்லது எண் பொறிக்கும் இயந்திரம்.

(9) எழுத, வரையப்பயன்பட்ட பேனாக்கள், பென்சில்கள், தூரிகைகள் முதலியன.

(10) பல்வேறு செதுக்கு கருவிகள்.

(11) பல்வேறு வகை அச்சுகள் மற்றும் கருவிகள்

(12) புகைப்பட அச்சுமுறை மூலமோ, மின்னச்சு புகைப்பட முறை மூலமோ உருவாக்கப்பட்ட அச்சுகள்.

(13) உதிரிப் பொருள்களான ரப்பர் ஷீட்டுகள், உருவமாற்று தாள்கள், மெழுகு, எண்ணெய், கத்தரிக்கோல், தாள் வெட்டும் கருவி முதலியவை.

## சந்தேகப்படும் நபர்களிடமிருந்து கீழ்க்கண்ட தடயங்களைப் பெறலாம்:

(1) பல்வேறு வண்ணங்கள் (அ) மை சந்தேகப்படும் நபர் அணிந்துள்ள உடைகளின் மீது காணப்படுதல் குறிப்பாக விரல் நகங்களில் இவைகளை சம்பவம் நடந்த இடத்திலுள்ள பொருள்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

(2) சந்தேகப்படும் நபரின் மீதோ (அ) அணிந்துள்ள உடைகளின் மீதோ செம்பு, துத்தநாகம் போன்ற உபயோகங்களின் படிவு இருந்தால்.

(3) சந்தேகப்படும் நபரிடம் முழுமையான அரைகுறையான கள்ள நோட்டுகளோ அல்லது ரூபாய் நோட்டு அளவில் வெட்டப்பட்ட தாள்களோ இருத்தல்.

(4) கைக்கு அடக்கமான கருவிகள் சந்தேகப்படும் நபரிடம் இருத்தல்

## வல்லுனரின் அபிப்பிராயம் :

சந்தேகப்படும் நோட்டை நாசிக்கிலுள்ள அரசு அச்சகத்தில் உள்ள வல்லுனரின் கருத்தினைக் கேட்டறியலாம். அதே கள்ள நோட்டை நல்ல நோட்டுடன் ஒப்பிடுவதன் மூலமோ அல்லது விஞ்ஞான சோதனைக் கூடத்திற்கு அனுப்பியோ அறியலாம்..

## கள்ள நாணயங்கள்:

நாணயத்தின் இரு புறமும் அச்சடிப்பதன் மூலமோ அல்லது உருக்கப்படுத்துவதின் மூலமோ அல்லது இரண்டு முறைகளின் மூலமோ கள்ள நாணயம் தயாரிக்கப்படுகிறது. நாணயத்தை உருக்கி சிமெண்டு, செங்கல்தூள் அல்லது கட்டுப்போடப் பயன்படும் மாவு ஆகியவைகளினால் உருவான அச்சு தேவைப்படுகிறது. உண்மையான நாணயம் இதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. உருவாக்கப்பட்ட உலோகம் அச்சு வழியே ஊத்தப்படுகிறது. உருக்கிய உலோகம் ஊற்றப்பட்டதும், அதன் படிவு கைகளினால் வெட்டி எடுக்கப்படுகிறது.

கள்ள நாணயங்கள் தயாரிக்க அச்சு நல்ல நாணயங்களில் இருந்தே தயாரிக்கப்படுகிறது. உலோகத் தகடுகளை அழுத்தியோ அச்சுகளில் பொருத்தியோ தயாரிக்கப்படுகிறது. இவைகள் காணப்பட்டால், கள்ள நாணயம் தயாரிப்பதற்கு தேவையான சாட்சியம் ஆகும்.

கள்ள நோட்டுகளுடன் ஒப்பிடுகையில், கள்ள நாணயம் தயாரிப்பது மிக எளிது. ஒரு பொற்பொல்லர் கள்ள நாணயம் தயாரிக்கும் அளவிற்கு அறிவும், திறனும், கருவிகளும் உடையவராக இருக்கிறார்.

தோற்றப்பொலிவு, எடை, கையினால் உணர்தல் போன்றவைகளில் கள்ள நாணயம், நல்ல நாணயத்தைவிட வேறுப்பட்டிருக்கிறது. கள்ள நாணயத்தை “வளைய சோதனை” மூலம் கண்டுணர முடியும். உதாரணமாக கட்டை விரலால் சுண்டிவிட்டு, நாணயத்தின் நாதத்தை சோதிப்பதின் மூலம் ஒரு நாணயம் கள்ள நாணயமா நல்ல நாணயமா என்று அறியலாம். இருப்பினும் தற்போது தயாரிக்கப்படும் சில அரசு நாணயங்களில் இந்த நாதம் வருவதில்லை.

## துப்பு திரட்ட உதவும் பொருள்கள்:

கள்ள நாணயம் தயாரிக்கப்பட்ட இடத்தில் இருந்து கீழ்க்காணும் பொருள்களை திரட்டினால் அது வழக்கிற்கு தகுந்த ருசுவாகும்

(1) கைவிரல், காலடி தடயங்கள் படிந்த பல்வகைப் பொருட்கள் முதலியன

(2) உலோகம், தகரம் போன்ற கச்சாப்பொருட்கள்

(3) அச்சு தயாரிக்கப்பயன்படும் பொருள்கள்

(4) அச்சு இயந்திர உபகரணங்கள் வகையது.

(5) முழுமையாக்கப்பட்ட அல்லது அரைகுறை நிலையில் உள்ள கள்ள நாணயங்கள்.

(6) உலோகத்தை உருவாக்கப் பயன்பட்ட குடுவைகள்.

(7) கள்ள நாணயத்தை அடித்து உருவாக்கப் பயன்பட்ட பொருள்கள்.

(8) மெழுகு போன்ற மசகு பொருள்கள்

(9) கள்ள நாணய அச்சு உருவாக்கப் பயன்பட்ட நல்ல நாணயங்கள் (கோடுகள், புள்ளிகள் முதலியன நல்ல நாணயத்தில் உள்ளவாறே கள்ள நாணயத்திலும் காணப்படும்).

(10) கத்திகள், உளிகள், திருப்புளி போன்ற கருவிகள்.

**சந்தேகப்படும் நபரிடமிருந்து திரட்டக்கூடிய ருசுக்கள் :**

(1) அச்சு எடுக்க உதவக்கூடிய பொருள்கள் சந்தேகப்படும் நபரின் உடையிலும், நபரின் மீதும் படிந்து இருந்தால், அதை சம்பவ இடத்திலுள்ள பொருட்களுடன் ஒப்பிட்டு அறியலாம்.

(2) உலோகத் துணுக்கள் சந்தேகப்படும் நபரின் மீதும், அவர்தம் உடை மீதும் படிந்திருத்தல்.

(3) முழுமையான அல்லது அரை குறையான கள்ள நாணயங்களை வைத்திருத்தல்.

(4) சம்பவம் நடந்த இடத்திலுள்ள வேறு ஏதேனும் துப்பு சந்தேகப்படும் நபர் மீது அல்லது குற்றம் காட்டும் வகையில் அமைந்திருப்பது.

## அத்தியாயம் - 9

## மனிதர்கள் நஞ்சு அருந்தியதாக, அவர்களுக்கு நஞ்சு கொடுத்தாக சந்தேகப்படும் வழக்குகள்

## SUSPECTED HUMAN POISONING

நஞ்சால் ஏற்படுகிற ஒவ்வொரு இறப்பின்போதும் அதை விசாரணை செய்யும் அதிகாரி, இறப்பு எத்தகைய காரணத்தால் ஏற்பட்டது சான்றாக, அதிகமாக மதுவருந்தியதாலா போன்ற காரணங்களை ரசாயனப் பரிசோதனை மூலம் அறியவும், நன்கு சோதித்த உள்ளுறுப்புகளை பாதுகாக்கவும் மருத்துவ அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும். இறப்பு, அதிகமாக மது அருந்தியதால் நேர்ந்திருந்தால் மருத்துவ அதிகாரி, சடலத்தின் உள்ளுறுப்புகளை சாதாரண உப்பலான அடர் திரவத்தில் வைத்து பாதுகாக்க வேண்டும். மற்ற வழக்குகளில் உடல் உறுப்புகளை ஆல்கஹாலில் (எரி சாராயம்) வைத்து பாதுகாக்க வேண்டும். ஒரு வேளை மருத்துவ அதிகாரியிடம் அதிகமாக மதுவருந்தியதால் இறப்பு சம்பவித்தது என்று தெரிவிக்காவிட்டால், பொதுவாக செய்வதுபோல உடல் உறுப்புகளை எரி சாராயத்தில் பத்திரப்படுத்தி அதை மேற்குறிப்பிட்ட காரணத்திற்கு ஏற்றதல்ல என்று தந்து விடலாம். இது போலவே, அதிகமாக தூக்க மாத்திரைகளை சாப்பிடுவதன் மூலமும், காய்கறி நஞ்சின் மூலமும் ஏற்படுகிற

மரணத்திற்கு சோதிக்கத் தேவையான உடல் உறுப்புகளை சேகரித்து வைக்கவேண்டும். கார்பன் மோனாக்ஸைடு ஹைட்ஜைன் சல்பைடு போன்ற நச்சுக்காற்றினால் இறப்பு ஏற்படும்போது ரத்தம், நுரையீரல், திசுக்கள், தோல் போன்றவை இரசாயன சோதனைக்கு முக்கிய பொருள்களாகும். ஆதலின் பிரேத பரிசோதனை நடக்குமுன் மருத்துவ அதிகாரிக்கு மரணத்தைப் பற்றிய முழு விவரத்தை தெரிவிக்க வேண்டியது ஒரு போலீஸ் அதிகாரியின் கடமையாகும்.

நஞ்சால் ஏற்பட்ட இறப்பைப்பற்றி விசாரிக்கும்போது கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது விசாரணையை மேற்கொண்டுள்ள அதிகாரியின் கடமையாகும்.

(1) சுத்திகரிக்கப்பட்ட ஸ்பிரிட் சேர்த்து, வாந்தியெடுத்த பொருளும், சிறுநீரும் சேகரித்து வைக்கப்பட வேண்டும். வாந்தியோ, மலமோ வந்திருந்தால் சுத்திகரிக்கப்பட்ட ஸ்பிரிட் சேர்க்காமல் வேறு ஏதாவதொரு வசதியான வகையில் சேகரிக்கப்பட வேண்டும். மண்ணெண்ணெய், மது போன்ற நஞ்சு இறப்புகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட ஸ்பிரிட் பயன்படுத்தாமல், சாதாரண உப்பு கலந்த அடர் திரவத்தை கெட்டுப்போகாமல் பாதுகாக்கப் பயன்படுத்தலாம்.

(2) நஞ்சைத் தூளாக்க, கரைக்க அல்லது சேகரித்து வைக்கப்பயன்படுத்தியதாக சந்தேகப்படும் பொருள்கள் உதாரணமாக கண்ணாடிக் குடுவைகள், தம்ளர்கள், பொடியாக்கும் கருவி ஊசி மற்றும் அதன் உபகரணங்கள் போன்றவை பரிசோதனைக்காக பாதுகாக்கப்பட வேண்டும்.

(3) உணவின் மிகுதி, நஞ்சு மருந்துகள், மாத்திரைகள், பெட்டிகள், துண்டுத்தாள்கள் மருந்து அல்லது நஞ்சை மடித்துவைக்கவோ பயன்பட்டிருந்தால் அவற்றையும் சேகரிக்க வேண்டும்.

(4) சவப் பரிசோதனை செய்த மருத்துவ அதிகாரி மூலம் சேகரிக்கப்பட்ட பொருள்கள், உடல் உறுப்புகள் உள்பட இரசாயன சோதனைக்கு அனுப்பப்பட வேண்டும்.

(5) நஞ்சால் இறப்பு சம்பவிக்காத நிலையில் சம்பந்தப்பட்ட நபரின் வயிற்றை சுத்திகரித்து சேகரித்த பொருள்கள் சுத்திகரிக்கப்பட்ட எரி சாராயத்திலோ அல்லது சாதாரண உப்பு திரவத்திலோ வைக்கப்பட வேண்டும். ஆனால், கண்டிப்பாக இரசாயன பாசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

## அத்தியாயம் - 10

## கால்நடைகளுக்கு நஞ்சு கொடுத்ததாக சந்தேகப்பட்ட வழக்குகள்

## CATTLE POISONING

**கால்நடைகளைக் கொல்லும் நஞ்சுகள் பின்வருமாறு:**

1. ஆர்ஸனிக், 2. ஒலியந்தர் (மஞ்சள் நிறம்), 3. Nux Vomica 4. Aconite, 5. பாம்புநஞ்சு 6. பூச்சிக்கொல்லி மருந்துகள் 7. Abrus precatosions 8. Madar 9. அலங்கார செடி விதை, 10. பாதரச கலவை, 11. ஹைட்ரோசயானிக் அமிலம்.

**ஒரு விசாரண அதிகாரியானவர் நஞ்சு பற்றி சந்தேகித்து விசாரிக்கையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் :**

கால்நடையின் உடலை கவனமாக சோதிக்க வேண்டும். முக்கியமாக பிறப்புறுப்பு, தொடையின் மெல்லிய தோல், கழுத்து (ஏதேனும் கடி உள்ளதா என்று சோதிக்க) போன்றவைகளைப் பரிசோதிக்க வேண்டும்.

கால்நடையின் வாயைப் பரிசோதிக்க, ஏதேனும் தென்பட்டால் பரிசோதனைக்குப் பாதுக்காக்கபட வேண்டும்.

ஒரு கால்நடை ஆஸ்பத்திரிக்கு சவப்பரிசோதனை செய்ய, இறந்த கால்நடையின் உடலை அனுப்ப வேண்டும்.

இரைப்பையின் ஒரு துண்டு சுமார் ஒரு ராத்தல் எடையும், ஈரலின் ஒரு பாகம் சுமார் இரண்டு ராத்தல் எடையும் சுத்தமான கண்ணாடிக் குடுவையில் போட்டு சுத்திகரிக்கப்பட்ட எரிசாராயம் மூலம் சோதனைக்கு பாதுகாக்கப்பட வேண்டும். இரைப்பையின் மிகுதியுள்ள பகுதிகள் ஆர்ஸனிக் அமிலம் மற்றும் தண்ணீரால் சுத்தம் செய்யப்பட்டு ஏதேனும் வெள்ளை அல்லது மஞ்சள் நிற துணுக்குகள் இருப்பின் பத்திரமாக சேகரிக்கப்பட்டு, சோதனைக்கு வைக்கப்பட வேண்டும். ஒரு வேளை நஞ்சு ஊசி மூலம் கால்நடைக்கு இறப்பு சம்பவித்திருந்தால், ஊசி குத்திய துளையருகே சதை வீங்கியிருந்தால், அந்த சதையின் ஒரு பகுதியை வெட்டி பரிசோதனைக்கு சேகரிக்க வேண்டும். ஊசிகள் ஏதேனும் காணப்பட்டாலும் சோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இரசாயன பரிசோதனைக்கு அனுப்பபடும் பொருள்கள் கீழ்க்கண்ட விவரங்களுடன் அனுப்பபட வேண்டும்

(1) கால்நடை குதிரையா, எருமையா என்ற விவரம்.

(2) சுமார் வயது, நஞ்சால் பாதிக்கப்படுமுன் இருந்த நிலைமை.

(3) நஞ்சால் பாதிக்கப்பட்ட அறிகுறிகள் குறிப்பாக இறப்புக்கு முன்பு.

(4) உணவு உட்கொள்ளும்போது எவ்வளவு நேரம் கழித்து நச்சுத்தன்மை கவனிக்கப்பட்டது?

(5) நஞ்சின் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்து எவ்வளவு நேரம் கழித்து கால்நடை உயிருடன் இருந்தது?

(6) எத்தகைய நஞ்சு பயன்படுத்தப்பட்டிருக்கலாம்?

(7) இறப்பிற்குப்பின் நஞ்சின் அறிகுறிகள் தென்பட்டனவா?

(8) வேறு ஏதேனும் பயனுள்ள விவரங்கள்?

# அத்தியாயம் - 11

# கரு சிதைத்தல்
# CRIMINAL ABORTION

**கருக்கலைப்புக் குற்றங்கள் பின்வரும் வகையாவன:-**

(1) மயக்க நிலையைத்தரக்கூடிய, உடலுக்கு ஒவ்வாத மருந்தை தயாரித்து பிரயோகித்து, உடலுக்கு ஏற்றுக்கொள்ளாது போதல்.

(2) கருவிகளினால் ஏற்படும் இடையூறு

**கருக்கலைப்புக்கு பயன்படும் மருந்துகளாவன:**

(1) கடுமையான பேதி மருந்துகள்.

(2) உலோகத் தன்மையுள்ள ஒவ்வாப் பொருள்கள் உதாரணமாக ஆர்ஸனிக் உப்பு, பாதரசம், ஈயம் போன்றவை.

(3) காய்கறி மூலம் ஏற்படும் ஒவ்வாமை.

## Methods of Mechanical Intervention:

(1) ஒலி மற்றும் பிற பொருள்களினால் கருப்கையில் ஏற்படும் பாதிப்பு

(2) பொட்டாசியம் பர்மாங்கனேட். ஐசோல் போன்ற திரவங்களினால் ஏற்படும் பாதிப்பு.

(3) சிறிய மூங்கில் அல்லது மரக்குச்சிகளினால் கருக்கலைப்பு செய்வது.

ஒரு கருக்கலைப்புக் குற்றத்தை விசாரணை செய்கையில் ஒரு விசாரணை அதிகாரியானவர் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை கையாளவேண்டும்.

(1) பாதிக்கப்பட்ட பெண்ணை ஒரு மருத்துவ அதிகாரி மூலம் சோதிக்கச் செய்ய வேண்டும்.

(2) குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களை சேகரிக்க வேண்டும்.

(3) கருப்பையிலிருந்து வெளியேற்றப்பட்ட எல்லாப்பொருள்களையும் சோதனைச் சாலையில் சோதிக்க சேகரிக்க வேண்டும்.

(4) பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டை தடயங்களுக்காக சோதிக்க வேண்டும்.

(5) கருக்கலைப்பு செய்ததாக சந்தேகப்படும் நபரின் அறை அல்லது இடத்தை சோதனை செய்யவேண்டும்.

(6) பொருட்களை கழித்துக்கட்டும் இடங்களான குப்பைத் தொட்டி, இருண்ட சந்துகள், வயல் வரப்புகள், ஆற்றுப்படுகைகள், சாக்கடைகள் போன்றவற்றில் தடயங்கள் தேடி சோதிக்கப்பட வேண்டும்.

(7) ஊசி, குழாய்கள் போன்ற கருவிகள், கூர்மையான மரத்துண்டுகள், தைக்கும் ஊசிகள், பஞ்சு போன்றவைகளும் ஆதாரத்திற்காக சோதிக்கப்பட வேண்டும்.

(8) பெண்களுக்கான மாத்திரைகள், சோப்புத் திரவம், நாட்டு நஞ்சுகள், அத்திப்பழம் போன்றவற்றையும் தேடவேண்டும்.

(9) படுக்கை விரிப்புகள், துணி வகைகள், நாற்காலி மற்றும் சோபா உறைகள், கழிப்பிடங்கள் போன்றவற்றையும் குற்றம் சம்பந்தப்பட்ட ஆதாரம் கிடைக்கிறதா என்று சோதிக்க வேண்டும்.

(10) கருக்கலைப்பினால் இறப்பு ஏற்பட்டிருந்தால், உடல், சம்பவம் நடந்த இடத்திற்குப் பதிலாக வேறு இடத்தில் இருக்கலாம். விசாரணை அதிகாரி உண்மையான சம்பவம் நடந்த இடத்தை முழுவதும் சோதனை செய்திட வேண்டும்.

# அத்தியாயம் - 12

# கற்பழிப்பு வழக்குகள்

**பாலியல் குற்றங்கள் நடந்த இடத்தில் குற்றத்திற்கான ஆதாரங்களைத் திரட்ட கீழ்க்கண்டவை தேவை:**

(1) சம்பந்தப்பட்ட நபர் மீது மற்றும் சந்தேகப்படும் நபரின் சூழ்நிலை

(2) பாதிக்கப்பட்ட நபரின் சூழ்நிலை

(3) குற்றம் நடந்த இடம்

**குற்றம் புரிந்ததாக சந்தேகப்படும் நபர், பாதிக்கப்பட்டவர் மற்றும் அவர்களின் சூழ்நிலை :**

(1) கற்பழிப்பு நடந்த வழக்கில், சந்தேகப்படும் நபரிடமிருந்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு விந்து, தலைமுடி, உடைகளின் இழைகள் போன்றவை மாறி உடைகள், கைக்குட்டை, துவாலை போன்றவற்றில் காணப்படலாம். அல்லது நபர் மாறியும் நிகழலாம். ஆகையால் விசாரணை அதிகாரி ஆனவர், நபர்களிடம் அணிந்த ஆடைகள், துவாலை போன்றவற்றை எவ்வளவு விரைவில் கைப்பற்ற இயலுமோ அவ்வளவு விரைவில் கைப்பற்ற வேண்டும்.

(2) தகாத முறையில் புணர்ச்சி (Sodomy) இவ்வழக்காக இருப்பின் பாதிக்கப்பட்ட பெண்ணின் கறைகள், சந்தேகப்பட்ட நபரின் உடையில் இருந்தால் அதை சேகரிக்க வேண்டும்.

(3) கால்நடையுடன் புணர்ச்சி (Bestiality) இவ்வழக்காக இருப்பின் சந்தேகப்பட்ட நபரின் உடைகளில் ஏதேனும் மிருக ரோமங்கள், கறைகள் இருப்பின் அவற்றை சேகரிக்க வேண்டும்.

(4) குற்றம் புரிந்ததாக சந்தேகப்படும் நபரையும் பாதிக்கப்பட்ட பெண்ணையும் ஒரு மருத்துவ அதிகாரி மூலம் மருத்துவ பரிசோதனைக்கு எவ்வளவு விரைவில் ஆஜர் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் செய்ய வேண்டும். சந்தேகப்படும் நபர் மற்றும் பாதிக்கப்பட்ட பெண் இருவரும் தங்கள் உடல் உறுப்புகளை கழுவாமல் இருக்குமாறு விசாரணை அதிகாரி பார்த்துக் கொள்ள வேண்டும். மருத்துவமனை சோதனை வரை இது கண்காணிக்கப்பட வேண்டும்

(5) சோதனைச்சாலைக்கு கீழ்கண்ட பொருட்கள் சேகரித்து அனுப்பப்பட வேண்டும்.

(i) பாதிக்கப்பட்ட பெண் மற்றும் சந்தேகப்படும் நபரின் துணிகள், உள்ளாடைகள்

(ii) இரகசிய உறுப்புகளின் முடிகள் (Cubic Hair)

(iii) நக இடுக்கில் சதை துணுக்குகள் இருந்தால் அவற்றையும்

(iv) (வன்முறை கற்பழிப்பில்) குற்றம் புரிவதற்கு முன் மதுவோ போதை வஸ்துவோ தந்திருந்தால் இரத்தம், சிறுநீர் ஆகியவை சோதிக்கப்பட வேண்டும். கற்பழிப்பால் இறப்பு நேர்ந்திருந்தால் உடலின் உள்ளுறுப்புகள் இரசாயன சோதனைக்கு அனுப்பப்பட வேண்டும்.

### குற்றம் நடந்த இடத்தில் :

கீழ்கண்ட ஆதாரங்களை குற்றம் நடந்த இடத்தில் தேட வேண்டும்.

அ) போராட்டத்திற்கான அறிகுறிகள்

ஆ) மண்ணிலோ மற்ற இடங்களிலோ முழங்கால், கைமடிப்பு அடையாளங்கள் காணல்

இ) ஆடை பித்தான்கள், ஆடையிலிருந்து பிரிந்த நூல்கள் முதலியன – குற்றம் புரிந்தவர், பாதிக்கப்பட்டவர் இருவரிடமிருந்தும் சம்பவ இடத்தில்

(1) சம்பவம் நடந்த இடத்தில் உள்ள அழுக்கு , மண் போன்றவை சேகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பெண் , சந்தேகப்படும் நபர் ஆகியோரின் உடைகள் , பொருட்களுடன் ஒப்பு நோக்க வேண்டும்.

(2) படுக்கை விரிப்புகள் தலையணை உறைகள் , சாக்கு பைகள் முதலியவை சம்பவம் நடந்த இடத்தில் காணப்பட்டால் அவையும் சோதனைக்கு அனுப்பப்பட வேண்டும். ஏனெனில் அவைகளின் மீது குற்றம் நடந்திருக்க வாய்ப்புண்டு

## அத்தியாயம் - 13

# தாமிர ஒயர் திருட்டு

தாமிர ஒயர் திருட்டு வழக்கில் விசாரணை அதிகாரி வழக்கினுடைய விசாரணையில் கீழே உள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(1) துண்டிக்கப்பட்டு பிரச்சனையில் உள்ள தாமிர ஒயரில் அடையாளம் இட்ட பிறகு மாதிரிக்காக விட்டுச்சென்ற தாமிர ஒயரிலிருந்து சுமாராக ஒரு அடி நீளமுள்ளதை சேகரிக்க வேண்டும். பிறகு பிரச்சனையில் உள்ள துண்டிக்கப்பட்ட முனைப்பகுதியை மற்றொரு முனைப்பகுதியிலிருந்து வேறுபடுத்தி காட்டுவதற்கும் மற்றும் துண்டிக்கப்பட்ட ஓரங்களை பாதுகாப்பதற்காகவும் பஞ்சினால் சுற்ற வேண்டும்.

(2) திருடிச்சென்ற தாமிர ஒயரையும் மற்றும் துண்டிப்பதற்கு உபயோகித்த கருவிகளையும் ஆராய வேண்டும். கைப்பற்றப்பட்ட பொருட்களை முறையாக அடையாளமிட்டு துணியினால் கட்டி சோதனைக்காக அனுப்ப வேண்டும். துண்டிப்பதற்கு பயன்படுத்திய கருவிகளை மிக பத்திரமாக கையாள வேண்டும். மற்றும் முனைப்பகுதியின் மாதிரியை எடுப்பதற்காகவும் அல்லது வேறு எந்த காரணத்திற்காகவும் அதை உபயோகிக்கக் கூடாது.

(3) அது தொலைபேசி ஒயராக இருக்கும்பட்சத்தில் கைப்பற்றப்பட்ட தாமிரஒயரை டிவிஷனல் இன்ஜியனருக்கும் அந்த பகுதி சம்பந்தப்பட்ட தொலைபேசி அலுவலகத்திற்கும்

ஒயரினுடைய விட்டத்தையும் மற்றும் உலோகத்தையும் கண்டுபிடிப்பதற்காக அனுப்பி வைக்க வேண்டும்.

(4) துண்டிக்கப்பட்ட முனையிலுள்ள கருவியினுடைய அடையாளத்தை ஆராய்வதற்காகவும் மற்றும் சந்தேகப்படும் கருவிகளுடன் ஒப்பிட்டு பார்ப்பதற்காகவும் மேலும் கைப்பற்றப்பட்ட ஒயரும் மாதிரிக்காக எடுக்கப்பட்டவைகளும் ஒரே மாதிரியான பகுதியை சேர்ந்தவையா என்று ஆராய்வதற்காக சம்பவம் நடந்த இடத்தில் சேகரிக்கப்பட்ட மாதிரி ஒயரையும் கைப்பற்றப்பட்ட ஒயரையும் மற்றும் கருவிகளையும் மருத்துவ விஞ்ஞான ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டும்.

(5) சம்பவம் நடந்த இடத்தின் டயர் அடையாளங்கள் மற்றும் அழுந்திய காலடிகள் ஏதாவது இருந்தால் கவனமாக கூர்ந்து கவனித்து அவற்றை பின்னால் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு அவற்றினுடைய அச்சுக்களை எடுக்க வேண்டும்.

(6) களவு போன தாமிர ஒயரைக் கண்டுபிடிப்பதற்கு திருட்டு பொருட்களை வாங்குபவருடைய கடைகளை சோதனையிட வேண்டும்.

## அத்தியாயம் - 14

## மோட்டார் வாகனத் திருட்டுகள்

**ஒரு கார் திருட்டு வழக்கை விசாரிக்கும் ஒரு விசாரணை அதிகாரி கீழேயுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் :**

(1) விசாரணை அதிகாரி ஒரு களவு போன காரினுடைய கீழே கொடுக்கப்பட்ட விவரங்களை பெற வேண்டும்.

(1) செய்யப்பட்ட இடம் மற்றும் மாடல்

(2) பதிவு எண்

(3) எஞ்சின் மற்றும் சேஸிஸ் எண்

(4) நிறம் (வர்ணம் திரும்பவும் அடிக்கப்பட்ட கார்களாக இருந்தால் அவற்றின் முன்னால் நிறங்கள்)

(5) சக்கரங்கள் மற்றும் டையர்களினுடைய விவரங்கள்

(6) வெளிப்பகுதிகள் ஏதாவது வீணாகி அவை பழுதுபார்க்கப்பட்டிருந்தால் அல்லது மாற்றியிருந்தால்

(7) கார் சொந்தக்காரருக்கு தெரிந்த காரினுடைய ஏதாவது விசேஷமான தன்மைகள்

(2) களவுபோன ஒரு காரை கைப்பற்றும்பொழுது கீழே உள்ள தடய பொருட்களை சேகரிக்க வேண்டும்.

(1) ஓட்டுநருடைய இருக்கைக்கு முன்னால் உள்ள, கதவிலுள்ள தூசுக்கள் மற்றும் துகள்கள்

(2) சிகரெட் மற்றும் பீடி துண்டுகள்

(3) ஏதாவது விட்டுச்சென்ற பொருட்கள்

(4) ஏதாவது உயிரியல் சம்பந்தப்பட்ட கறைகள்

(5) முடிகள் மற்றும் நூலிழைகள் ஏதாவது இருந்தால்

(6) கைரேகைகள், உள்ளங்கை ரேகைகள் மற்றும் காலடிகள் ஏதாவது இருந்தால்

(7) கார் இருக்கும் இடத்திலிருந்து அதை ஓட்டினால் அழியக்கூடிய வேறு ஏதாவது தடயப்பொருட்கள்

(3) காரை சங்கிலி அல்லது கயிற்றினால் கட்டி மருத்துவ விஞ்ஞான ஆய்வகத்திற்கு இழுத்துச் செல்ல வேண்டும். மற்றும் கிடைக்கக்கூடிய தடயப்பொருட்களை சோதிப்பதற்கும் மற்றும் கருத்தையும் பெறுவதற்கு ஆய்வகத்தில் கொடுக்க வேண்டும். ஆய்வகத்தில் வாகனத்தினுடைய சோதனையானது ஒரு விசாரணை அதிகாரிக்கு காரினுடைய அடையாளத்தை நிர்ணயிப்பதற்கும் மற்றும் குற்றவாளியை கண்டுபிடிப்பதற்கும் ஏதுவாகலாம்.

(4) சந்தேகப்படும் நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கருவிகளினுடைய அடையாளங்களை, வாகனத்தில் கண்ட கருவியினுடைய அடையாளங்களுடன் ஒப்பிட்டு பார்க்கலாம்.

(5) காரினுடைய எஞ்சின் எண்ணும் மற்றம் சேசிஸ் எண்ணும் அடித்து புரியாமல் அல்லது மாற்றப்பட்டுள்ளதா என்பதை சோதனையிட வேண்டும்.

(6) களவுபோன வாகனத்தினுடைய பதிவு எண் மாற்றப்பட்டு மற்றும் திரும்பவும் எழுதியிருந்தால், வாகனத்தை மருத்துவ விஞ்ஞான ஆய்வகத்திற்கு சோதனைக்கு அனுப்புவதன் மூலம் வாகனத்தில் இருக்கக்கூடிய உண்மையான பதிவு எண்ணை கண்டுபிடிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

(7) வாகனத்தை திருடிய பிறகு சந்தேகப்படும் நபர் அதனுடைய நிறத்தை மாற்றிவிட்டதாக சந்தேகப்பட்டால், மருத்துவ விஞ்ஞான ஆய்வகத்தில் வாகனத்தை சோதனையிடுவதன் மூலம் புதிய வர்ணத்தினுடைய கீழேயுள்ள வர்ணத்தினை ஆராய்ந்து அறிய வேண்டும்.

(8) எஞ்சினையும் மற்றும் முக்கிய பாகங்களையும் சோதனையிட்டு, அவையெல்லாம் அந்த காரினுடைய பாகங்கள்தானா என்று ஆராய்ந்து அறிய வேண்டும்.

(9) களவுபோன வாகனத்தை வாங்கியது சம்பந்தமாக மற்ற பதிவேடுகள் மற்றும் பதிவுச்சான்றிதழ் முதலியவைகளை சேகரித்து அவற்றில் ஏதாவது மாற்றியிருக்கிறார்களா என ஆராய்ந்து அறிய வேண்டும்.

(10) தனியாக அல்லது யாரும் உரிமை கொண்டாடாத கார் ஒன்று இருந்தால், அந்த இடத்தை முதலில் புகைப்படம் எடுக்க வேண்டும். மற்றும் எப்போதும்போல் வரைபடம் வரைய வேண்டும். வாகனம் ஓடிய கிலோமீட்டரையும் டேங்கிலுள்ள எரிபொருளின் அளவையும், ரேடியேட்டரில் உள்ள நீரினுடைய சூட்டையும் உஷ்ணத்தையும் மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள சூட்டையும் குறித்துக்கொள்ள வேண்டும்.

# அத்தியாயம் - 15

## சாட்சியங்களை சேகரித்தல், கட்டுதல் மற்றும் அனுப்புதல்

குற்றம் நடந்த இடத்திலிருந்தும், நபரிடமிருந்தும் மற்றும் பாதிக்கப்பட்டவருடைய சுற்றுப்புறத்திலிருந்தும், அத்துடன் விசாரணையின்பொழுது சந்தேகப்படுபவர்களிடமிருந்தும் முக்கியமான பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. விசாரணை அதிகாரி இவற்றைச் சேகரித்து பார்சல் செய்து அவற்றை நீதிமன்றத்திற்கோ அல்லது வல்லுநர்களுக்கோ கவனமாக அனுப்பினால்தான் இப்பொருள்களிலுள்ள சாட்சியங்கள் இம்மாதிரியான ஒவ்வொரு நிலைகளிலும் அழிந்துவிடாமல் இருக்கும். ஆகையால், விசாரணை அதிகாரி பொருள்களை சேகரிப்பதிலும், பார்சல் செய்வதிலும் மற்றும் அனுப்புவதிலும் திறமை பெறவேண்டும்.

### சாட்சியங்களை சேகரிப்பதற்கு முன் கடைப்பிடிக்க வேண்டிய முன் எச்சரிக்கைகள்:

(1) குற்றத்தைப்பற்றி தகவலைப் பெற்றபின் உடனடியாக குற்றம் நடந்த இடத்தை பாதுகாக்க வேண்டும். முக்கியமான பொருட்களை எடுக்கும்பொழுது மற்றும் கட்டும்பொழுதும் கவனமாக இருந்தால்தான், அவற்றை சோதனை செய்யும்பொழுது இடையூறு விளைவிக்கக்கூடிய தேவையில்லாத பொருட்களுடன் அசட்டையாக கலந்து அசுத்தம் ஆகாமல் இருக்கும்.

(2) குற்றத்தில் உபயோகப்படுத்திய கருவிகள் போன்ற அமைப்பையும் மற்றும் அவற்றினுடைய நிலைகளையும் தெரியுமாறு பல்வேறு கோணங்களில் குற்றம் நடந்த இடத்தையும் அத்துடன் முக்கியமான பொருட்களை சேகரிப்பதற்குமுன் இறந்தவருடைய உடலையும், குற்றம் நடந்த இடத்திலிருந்து பிரேதத்தையும் இரத்தக் கறைகளையும், டயர் அடையாளங்கள் முதலியவைகளையும் புகைப்படம் எடுக்கவேண்டும். நீண்ட நாட்கள் ஆனாலும்கூட இது விசாரணை அதிகாரிக்கு சம்பவம் நடந்த இடத்தைப்பற்றிய நினைவைத் திரும்பக்கொண்டு வரும்.

(3) குற்றம் நடந்த இடத்திலிருந்து முக்கியமான பொருட்களை சேகரிப்பதற்குமுன், குற்றம் நடந்த இடத்தை ஒரு வரைபடமாக வரைய வேண்டும்.

(4) குற்றம் நடந்த இடத்திலிருந்து ஒரு முக்கியமான பொருளை நகர்த்துவதற்கு முன், சந்தேகப்படும் நபர் அல்லது வேறு யாராவது அந்தப் பொருளை தொட்ட பகுதியை தொட்டு தடயத்தை அழிக்காதவாறு அந்தப் பொருளை எப்படிக் கையாள வேண்டும் என்ற விதத்தை விசாரணை அதிகாரி முடிவெடுக்க வேண்டும்.

(5) முடி, நூலிழை, காகிதம், துணி, கண்ணாடி, மரம், உலோகம் முதலியவைகளினுடைய துண்டுகள் போன்ற அந்த சுற்றுப்புறத்திற்கு ஒவ்வாத பொருட்கள் வழக்கத்துக்கு மாறாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். இரத்தம், உமிழ்நீர், ஆண்விந்து கறைகள் முதலிய பொருட்களை தொடாமல் அந்த தரையை பெருக்கி அதை சேகரிக்க வேண்டும்.

(6) சிறிய பொருட்களை எடுப்பதற்கு சாமணக்குகளை உபயோகிக்க வேண்டும்.

(7) கொலை அல்லது தற்கொலையாக இருக்கும் பட்சத்தில், முடிந்தவரை ஒரு மருத்துவ அதிகாரி காவல் துறையினருடன் குற்றம் நடந்த இடத்திற்கு வந்து, பிரேதத்தையும், சுற்றுப்புறத்தையும் அவற்றை தொட்டு தடயங்களை அழித்துவிடுவதற்கு முன்பு முறையாக கண்டுபிடிப்பதற்காக சோதனையிட வேண்டும்.

## கூட்டுதலும் மற்றும் சீட்டு ஒட்டுதலும் :-

(1) ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக கட்டவேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் வரிசையாக கொடுத்த வரிசை எண்ணை குறிப்பிட்டு சீட்டு ஒட்டவேண்டும். சீட்டில் அனுப்பும் அதிகாரியினுடைய கையெழுத்தும், எண்ணும், சம்பந்தப்பட்ட சோதனையாளருக்கு அவரால் எழுதப்பட்ட மேலே அனுப்பும் கடிதத்தினுடைய தேதியும் இருக்கவேண்டும்.

(2) முடிந்தவரை ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட இம்மாதிரியான எல்லா பொட்டலங்களையும் ஒரு பெட்டியில் அல்லது வெளி உறையில் வைத்து மூடி ஒரே பார்சலாக்க வேண்டும். பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட பொருட்களினுடைய பொட்டலங்களை ஒரே பார்சலில் வைத்து மூடக்கூடாது.

(3) பார்சலினுடைய வெளி உறையில் வழக்கு சம்பந்தமான குறிப்புகளை முறையாக குறிப்பிட வேண்டும்.

(4) சோதனையிட வேண்டிய பொருட்களை பொட்டலங்கள் அல்லது பார்சல் தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தக் கூடாது.

(5) கருவிகள், ஆயுதங்கள் முதலியவைகள் மேல் கறைகள் இருந்தாலும் அல்லது வேறு ஏதாவது கறைகள் இருக்கக்கூடும் என்று சந்தேகப்பட்டாலும் அல்லது சந்தேகிக்கக்கூடிய கறைகள் உள்ள எந்த பொருளின்மீதும் அதாவது துணி முதலியனவைகள் மீது சீட்டுகளை ஒட்டக்கூடாது.

(6) எல்லா கட்டுகளையும், அவற்றினுடைய முத்திரைகளை அழிக்காமல் திறக்க முடியாத வகையில் அனுப்பும் அதிகாரி கவனமாக முத்திரையிட வேண்டும். அதே முத்திரையே எல்லாவற்றிற்கு உபயோகப்படுத்த வேண்டும். உபயோகிக்கப்படும் முத்திரை தனியாக ஒரு முத்திரையாகவோ அல்லது ஒரு அலுவலக முத்திரையாகவோ இருக்கலாம். சாவிகள், நாணயங்கள் பட்டன்கள், உடைகள் முதலியவைகளினுடைய பதிவுகளை முத்திரைகளாக உபயோகிக்கக் கூடாது.

(7) ஒரு மேலே அனுப்பும் கடிதமானது சம்பந்தப்பட்ட சோதனையாளருக்கு தனியாக அனுப்பவேண்டும். மேலே அனுப்பும் கடிதத்தினுடைய நகலை கட்டுக்குள் தகுந்தவாறு இணைக்கவேண்டும். அப்பொழுதுதான் சாட்சியங்களுடன் சம்பந்தப்பட்ட வழக்குடன் பராமரிக்கப்படும்.

(8) மேலே அனுப்பும் கடிதமானது, கீழேயுள்ள விவரங்களை கொண்டிருக்க வேண்டும்.

(1) கடித எண்

(2) வழக்கு குறிப்பு

(3) வழக்கினுடைய சுருக்கமான வரலாறு

(4) ஒவ்வொரு பொட்டலத்திலுள்ள பொருட்களின் விவரம் (அமைப்பு)

(5) தேவைப்படும் சோதனையின் தன்மை

(6) பொருள்களை யார் மூலமாக அனுப்பப்பட்டதோ அந்த அதிகாரியினுடைய குறிப்பு

(7) விசாரணை அதிகாரியின் பெயர்

(8) கட்டுக்களின் மீது உபயோகித்த முத்திரையின் மாதிரி

(9) சோதனையிடுவதற்கு அதிகாரியினுடைய சான்றிதழ்

(9) சாட்சியங்கள் உருக்குலையாமல் பராமரிப்பதற்காக, அவைகள் தொடர்ந்து யாருடைய பொறுப்பில் இருக்கின்றன என்பதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். இதற்காக, அந்த சாட்சியங்கள் யார் யாரின் மூலமாக சென்றது என்பதை அவர்களுடைய பெயர்களும் மற்றும் அவையெல்லாவற்றையும் யார் ஒன்றாக கொடுத்தது என்பதையும் அதற்காக ரசீது, தேதி நேரத்துடனும் ஒரு பதிவேட்டில் இருக்கவேண்டும்.

(10) இரத்தக்கறை படிந்த இரும்பு உலோக பகுதிகளை, அவை துரு பிடிக்காமல் பாதுகாக்க வேண்டும். மற்றும் அவற்றை ஆய்வகத்திற்கு சோதனைக்காக விரைவில் அனுப்பவேண்டும்.

(11) பேனா கத்திகள், துப்பாக்கிகள், கருவிகள் மற்றும் மற்ற கருவிகள் முதலியவைகளை கம்பிகளால் ஆன ஒரு பலகையில் கைப்பற்ற வேண்டும். அதன்பிறகு அந்தப் பலகையை அதற்கு பொருத்தமான அளவுள்ள ஒரு பெட்டியில் வைத்து அதனை மூடவேண்டும்.

(12) பெரிய கண்ணாடி பொருட்கள், கல் பலகைகள், உலோகத்துண்டுகள் மற்றும் மற்ற கனமான பொருட்கள் முதலியவைகளை சிறிய குழிகளில் பாதுகாக்க வேண்டும்.

(13) முடிகள், நூலிழைகள் அல்லது மற்ற சிறிய பொருட்கள் சில பொருட்களில் இரத்தப் புள்ளியுடன் ஒட்டிக்கொண்டிருந்தால் முடி அல்லது நூலிழை முதலியவைகளுடன் அந்த பொருள் முழுவதையும் சேகரித்து சோதனைக்கு அனுப்புவதற்கு முன்பு அதை ஒழுங்காக பார்சல் செய்ய வேன்டும்.

(14) சம்பவம் நடந்த இடத்தில் இருக்கும் முடிகளை அல்லது நூலிழைகளை, வேறு எந்த அந்நியபொருட்களுடன் அவற்றில் ஒட்ட விடாமல் தடுப்பதற்காக இடுக்கிகளினால் எடுக்க வேண்டும், அவற்றை வடிகட்டும் அல்லது மை உறிஞ்சும் காகிதத்தில் வைத்து சாட்சியப்பொருளின் நீளவாக்கில் கவனமாக அதை ஒரு தகுந்த வெளிப்பாத்திரத்தில் வைத்துவிடவேண்டும். இதற்கு, கண்ணாடிபோல் பளபளப்பாக உள்ள தாளை அல்லது செலோபோன் தாளை உபயோகப்படுத்தலாம்.

(15) சீவுவதன் மூலம் நபர்களிடமிருந்தும் அல்லது கால்நடைகளிடமிருந்து முடியை எடுக்க வேண்டும். இம்முறையில் போதுமான அளவு கிடைக்காவிட்டால் பல்வேறு

இடங்களிலிருந்து தேவையான அளவு வெட்டவேண்டும். அல்லது தோலை ஒட்டி அவைகளிடமிருந்து வெட்டவேண்டும்.

(16) பாலுணர்வு வழக்குகளில் ஒரு மருத்துவ அதிகாரியின் உதவியுடன் சந்தேகப்படும் நபர் மற்றும் பாதிக்கப்பட்டவர் ஆகிய இவருடைய பிற உறுப்புகளிலிருந்து முடியை எடுக்க வேண்டும். இவற்றை தோலை ஒட்டி வெட்டி எடுக்க வேண்டும். சம்பவம் நடந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட முடிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இது உபயோகப்படும்.

(17) தூசு எரித்து மிஞ்சிய பொருள் அல்லது மண் ஆகியவற்றைச் சேகரித்து ஒரு தகுந்த வெளிப்பாத்திரத்தில் வைத்துமூட வேண்டும். தூசு, மரச்சாமான்கள் போன்ற எந்த பொருளிலிருந்தாலும் அதை மென்மையான பிரஸின் உதவியால் அல்லது ஒட்டக்கூடிய தன்மையுள்ள நாடாவில் நேரடியாக சேகரிக்கலாம். மண்ணை (இரண சிகிச்சையாளர்கள் உபயோகிக்கும்) ஒரு சிறிய கத்தி (வர்ணம் முதலியன கட்டும்) ஒரு தட்டையான கருவி அல்லது ஒரு கரண்டியால் எடுக்கலாம். வெகு எளிதில் ஆய்வகத்திற்கு அனுப்பக்கூடிய பொருள்களின் மேல் மண் அல்லது தூசு இருந்தால் அதாவது ஷூக்கள், துணிகள் முதலியவைகளில் அந்த பொருள் முழுவதையும் மண்ணையும் தூசுகளையும் பிரியாத மாதிரி வைத்து ஆய்வகத்திற்கு அனுப்பவேண்டும்.

(18) திரவங்கள் மற்றும் கிரிஸ் முதலியவைகளை கண்ணாடி வெளிப்பாத்திரங்களில் வைத்து ஒழுகாத கண்ணாடி மூடிகளை போட்டு அனுப்பவேண்டும்.

(19) துணிகள், ஏடுகள், போர்வைகள் முதலியவைகளில் புதிய ஈரமான இரத்தக்கறைகள் இருந்தால், அவற்றை அறையினுடைய சூட்டிலேயே காயவைத்துவிட்டு அதன்பிறகு அவற்றை ஆய்வகத்திற்கு அனுப்பவேண்டும். கட்டும் பொழுது சுத்தமான ஒரு வெள்ளைத்தாளை கரையிலுள்ள பகுதிகளில் வைப்பதன்மூலம் மற்றுமுள்ள பொருளிலிருந்தும், இடையூறிலிருந்தும் அந்தப் பகுதியை பாதுகாக்க முடியும்.

(20) இரத்தம் அதிக அளவில் இருந்தால், அதிகமான இரத்தத்தை ஒரு வடிகட்டும் தாளில் எடுத்து அதை முழுவதும் நிழலில் முடிந்த அளவு விரைவில் உலர்த்த வேண்டும். தேவைப்பட்டால் சூரிய வெளிச்சத்தில் வைத்துக்கூட உலர வைக்கலாம். ஆனால் செயற்கை முறையில் சூடுபடுத்துவதை தவிர்க்க வேண்டும், ஒரு ஊறாத வடிகட்டும் தாளினுடைய பகுதியையும் கண்ட்ரோலாக தனியாக அனுப்பவேண்டும்.

(21) திடப்பொருட்களான ஆய்தங்கள், மர பிளாஸ்டர், மோட்டார் வண்டிகள் முதலியவைகள் மீது புதிய ஈரமான இரத்தக் கறைகள் இருந்தால், இவற்றை வெகு எளிதாக எடுத்துச் செல்ல முடியாததால் ஒரு வடிகட்டும் தாளில் அதை நனைத்து முழுவதுமாக காயவிட்டு அதன்பிறகு அதை ஆய்வகத்திற்கு ஒரு உறையிலிட்டு கட்டப்பட்ட மாதிரியுடன் அனுப்பவேண்டும். எடுத்து செல்லக்கூடிய எல்லா பொருட்களையும் இரத்தக் கறைகள் உலர்ந்த பிறகு அனுப்பவேண்டும்

(22) எடுத்துக்செல்லக் கூடிய பொருட்களின் மேலுள்ள காய்ந்த கறைகளை, சுரண்டி ஒரு சுத்தமான சோதனைக் குழாயில் போட்டு ஆய்வகத்திற்கு அனுப்பலாம். இரத்தக்கறைகளை

ஒரு பொருளிலிருந்து சுரண்டும்போது கவனமாக இருக்கவேண்டும். அப்போதுதான் பொருளினுடைய பகுதிகள் சுரண்டும் பொழுது சேர்ந்து விடாமலிருக்கும்.

(23) ஒரு துணியில் ஆண் விந்துக்கறைகள் இருந்தால், அதை அறையினுடைய சூட்டின் நிலையில் உலரவிட வேண்டும். மற்றும் அந்தப்பொருள் முழுவதையும் ஆய்வகத்திற்கு அனுப்பவேண்டும். ஆடைகளை மடிக்கலாம். ஆனால் கறையிட்ட இடத்தின் மடிப்பு ஏற்படாதவாறு கவனமாக இருக்கவேண்டும். மடிப்புகளுக்கு இடையில் சுத்தமான வெள்ளை தாள்களினுடைய துண்டுகளை வைக்கவேண்டும்.

(24) எந்தப் பொருளிலாவது உமிழ்நீர் இருக்கும் என்று சந்தேகப்பட்டால் அந்தப் பொருள் முழுவதையும் அனுப்பவேண்டாம். சந்தேகப்படும் நபர்களினுடைய மற்றும் பாதிக்கப்பட்டவருடைய உமிழ்நீரை கண்ட்ரோல் மாதிரிக்காக அவர்களிடமிருந்து தனியான வடிகட்டும் தாள்கள் அல்லது துணியினுடைய சுத்தமான துண்டுகளில் சேகரித்து செயற்கை முறையில் சூடுபடுத்துவதை தவிர்த்து விரைவாக காயவைத்து அதை சுத்தமான பாட்டில்களில் அனுப்பவேண்டும். கண்ட்ரோல் மாதிரிகள் எடுப்பதற்கு முன்பு, பாதிக்கப்பட்டவரை அல்லது சந்தேகப்படுபவரை அவர்களுடைய வாய்களை புதிய நீரில் சுத்தம் செய்து வருமாறு கூறவேண்டும். நபர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய வாயை ஒற்றி எடுத்து அதை அனுப்பவேண்டும்.

(25) திசுக்களை அறையினுடைய சூடுநிலையில் காயவைத்து பாதுகாப்பதற்காக எதையும் சேர்க்காமல் அனுப்பவேண்டும்.

(26) தீயினால் ஏற்பட்ட வழக்கு சம்பந்தபட்டவைகளில் துணி மற்றும் மற்ற தடயங்களை அனுப்புவதில் எளிதில் எரியக்கூடிய திரவமுள்ள சந்தேகப்படும் பொருளை ஒரு பாட்டிலில் அல்லது வெளிபாத்திரத்தில் வைத்து காற்றுப்புகாத ஒரு மூடியினால் மூடுவதால் எளிதில் எரியக்கூடிய திரவம் ஆவியாகாமல் தடுக்கலாம்.

(27) எரிந்து கருகிய பதிவேடுகளை சேகரிக்க வேண்டும். அவற்றை தனித்தனியாக மிகவும் கவனமாகவும் பெட்டிகளில் வைத்து காற்று புகாத மூடிகளைப்போட்டு மூடி அனுப்ப வேண்டும் பாலித்தீன் அல்லது தாள் பைகளை இந்த பொருட்களை சேகரிப்பதற்கு உபயோகிக்கக்கூடாது.

(28) கருவினுடைய அடையாளங்களை ஒப்பிடும்போது அதனுடைய வேலை செய்யும் ஓரங்களை பஞ்சினால் பாதுகாத்து பிறகு, அந்த கருவி முழுவதையும் அனுப்பவேண்டும். இது நடைமுறையில் முடியாவிட்டால், அம்மாதிரியான பொருளில் பல பதிவுகளை குற்றத்திலுள்ள கருவிகளினுடைய அடையாளங்களை அடுத்தடுத்துள்ள பதிவுகளை உபயோகித்து, கருவினுடைய அடையாளமிட்ட இடம் முழுவதிலும் செய்யவேண்டும். இந்தக் கருவினுடைய அடையாளங்களின் கண்ட்ரோல் அமைப்பை திசு தாள் அல்லது மென்மையான பஞ்சினால் மூடி பாதுகாக்கவேண்டும். பிறகு அதை ஒரு பொட்டலமாக

கட்டுவதற்கு உறுதியான தாள்களினால் சுற்றிக்கட்ட வேண்டும். பிறகு அந்தப் பொட்டலத்தை ஒரு உறுதியான பெட்டியில் வைத்துக்கட்டி அனுப்பவேண்டும்.

(29) ஒரு துப்பாக்கியைக் கைப்பற்றிய உடனே துப்பாக்கி குழாயை மூடிவிடவேண்டும். ஆனால், அதை பிடுங்கி விடக்கூடாது. ரிவால்வர்களாக இருக்கும்போது அறையினுடைய முன் மற்றும் பின் பக்கம் ஆகிய இரண்டு பக்கங்களும் திறந்திருப்பதை சுத்தமான துணியினால் சுற்றிக்கட்ட வேண்டும். அதன் பிறகு ரிவால்வரை ஒரு தாளினால் சுற்றிக்கட்ட நூலினால் முடிபோட வேண்டும். பிறகு அதை ஒரு மரப்பெட்டியில் வைத்து வீணான பஞ்சு போன்ற கட்டும் பொருட்களை வைப்பதால் அவற்றை எடுத்துச் செல்லும்போது நகராமலிருக்கும். தோட்டாக்கள் போட்ட துப்பாக்கியை ஒருபொழுதும் அனுப்பக்கூடாது. முக்கியமான காரணங்களுக்காக அவசியமாக தேவைப்படும் பட்சத்தில் பெரிய எழுத்துக்களில் தெரியும்படியாக பொட்டலத்தில் மேல் சிவப்பு மையினால் தோட்டாக்கள் துப்பாக்கியில் உள்ளன என்று எழுதி அனுப்பவேண்டும்.

(30) துப்பாக்கியினுடைய சுட்ட தோட்டாக்களை அடையாளமிட்டு, தனித்தனியாக பஞ்சில் அல்லது சுத்தமான கிழிந்த துணியில் அழுத்திவைத்து, தாள்களை சுற்றிக் கட்டி, அவற்றினுடைய அறைகளினுடைய அடையாளங்களைப் பாதுகாப்பதற்காக ஒரு தனியான காட்போர்டு பெட்டியில் வைத்துக்கட்ட வேண்டும்.

(31) சுட்ட ரவைகளினுடைய அடிப்பகுதியில் அல்லது முனைப்பகுதியில் அடையாளம் போடலாம். அந்த ரவைகளை உறிஞ்சும் தன்மையுள்ள சுத்தமான பஞ்சினால் உருட்டிச் சுற்றி அதன் பிறகு அதை ஒரு காட்போர்டு பெட்டியில் அல்லது வேறு கடினமான வெளிப்பாத்திரத்தில் வைத்தக் கட்டவேண்டும். ஒரு ரவையைவிட அதிகமாக இருக்கும் பட்சத்தில், அவற்றைத் தனித்தனியாக கட்டலாம்.

(32) சிறு குண்டுகள் (Slugs wards) முதலியவைகளை காட்போர்டு பெட்டிகளில் போதுமான பஞ்சுவைத்து கட்டலாம். அடையாளங்களை வெளிப் பாத்திரங்களின்மேல் எழுதலாம்.

(33) உயிருள்ள தோட்டாக்களை மரத்திலான வெளிப்பாத்திரங்களில் பஞ்சுவைத்துக் கட்டவேண்டும். எடுத்துச் செல்லும் பொழுது தோட்டாக்கள் ஒன்றோடு ஒன்று சேர்வதைத் தவிர்ப்பதற்காக போதுமான பஞ்சை இரண்டு தோட்டாக்களுக்கும் இடையில் வைக்கவேண்டும் அல்லது அவற்றைத் தனித்தனியாக கட்டவேண்டும்.

(34) எவ்வளவு தூரத்திலிருந்து சுடப்பட்டது, எந்த திசையில் சுடப்பட்டது முதலியவைகளுக்குப் பதில்கொடுக்க வேண்டுமென்றால் பிரேத பரிசோதனை அறிக்கையை தகுந்தவாறு அனுப்பவேண்டும்.

## அத்தியாயம் - 16

## பதிவேடுகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணைச்

## செய்யவேண்டிய முறைகள்

போலி பத்திரங்களும், ஆவணங்களும் ஏமாற்றவும், மதிப்பை அதிகமாக்கவும், குற்றச் செயல் புரிவதற்காகவும் உருவாக்கப்படுகின்றன. ஒரு விசாரணை அதிகாரியானவர் பத்திரங்கள், ஆவணங்கள் சம்பந்தப்பட்ட விசாரணையின்போது கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(1) பத்திரங்கள், ஆவணங்கள் அதற்குரிய உருவத்தைவிட குறைவாக வெட்டப்படாமலும், கவனக்குறைவாக கையாளப்படாமலும், பிரதி எடுக்கப்படாமலும், ஈரம் அல்லது அதிக சூரிய ஒளியினால் பாதிக்கப்படாமலும், அனாவசியமாக மடித்து பிரிக்கப்படாமலும், அழிப்பானைப் பயன்படுத்தாமலும், துளையிடப்படாமலும், ஊசியினால் இணைக்கப்படாமலும் இருக்கவேண்டும்.

(2) குறிப்பிட்ட வரிகளுக்குக் கீழே அவை முக்கியமானது என்று கருதி கோடிடாமல் இருக்கவேண்டும். ஒரு பத்திரத்தை ஆவணத்தைக் கைப்பற்றியவுடன் கையெழுத்து, தேதியிட்ட அடையாளக்குறிகளுடன் பரிசோதனைச் சாலைக்கு அனுப்பவேண்டாம். அப்படி அனுப்பும்போது பத்திரம்/ஆவணத்திலுள்ள அசல் வாசகங்களுக்கு பாதகம் ஏற்படாமல் எழுதவேண்டும். ஒரு பத்திரம்/ஆவணத்தின் பின்புறம் கையெழுத்து தேதி குறியிட்ட சரியான இடமாகும். ஒரு பத்திரம்/ஆவணத்தில் சோதனை செய்யப்படவேண்டிய வண்ணப் பென்சில்களால் குறியிடவேண்டும். வண்ணமைகளைப் பயன்படுத்தக்கூடாது.

(3) ஒரு விசாரணை அதிகாரியானவர் பத்திரம்/ஆவணங்களை சோதனை செய்யும்போது, எல்லா தாள்களும் ஒரேவித மை, எழுதுகோலினால் எழுதப்பட்டுள்ளனவா, எல்லாத் தாள்களும் ஒரே ரகத்தைச் சார்ந்தவைதானா என்றெல்லாம் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

(4) ஒரு பத்திரம்/ஆவணத்தில் அடித்தல், திருத்தல், சேர்த்தல் அல்லது புதியவாக்கியம் இருக்குமானால், அவை அந்த பத்திரம்/ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளும்போது அதை எழுதியவரால்தான் செய்யப்பட்டது என்பதையோ அல்லது சாட்சி மூலமோ உறுதிசெய்து கொள்ளவேண்டும். அவருக்கு சாட்சிக்கு அந்தப் பத்திரம், ஆவணம் பற்றிய முழுவிவரமும் (அதைப்பதிவு செய்த வேறு) தெரிந்திருக்க வேண்டும்.

(5) பத்திரம்/ஆவணத்தின் பின்புறம் புகைப்படம் அச்சுகள் குறிகள் இருப்பின், அவை அசலுடன் ஒப்பிடப்பட வேண்டும்.

(6) வருவாய்தலைகள் (ரெவின்யு ஸ்டாம்ப்) மீதுள்ள கையொப்பம் முழுமையாக அதன்மேல் போடப்பட்டுள்ளதா? அத்தகைய கையொப்பம் கூடிய வருவாய்தலைகள் (ரெவின்யு ஸ்டாம்ப்) வேறு எங்கிருந்தாவது பெயர்க்கப்பட்டு இப்போதுள்ள இடத்தில் ஒட்டப்பட்டுள்ளதா?

(7) ஒரு பத்திரம்/ஆவணம் நகல் பிரதியாக இருக்குமானால் அதிலுள்ள வாக்கியங்கள் அதைபோலவே அமைந்துள்ளதா?

(8) ஒரு பத்திரம்/ஆவணத்திலுள்ள வாக்கியங்கள் கண்ணுக்குத் தெரியாத மையினால் எழுதப்பட்டுள்ளதா? அல்லது அப்படி ரகசிய வாக்கியங்களைக் கொண்டதாக சந்தேகத்தை எழுப்புகிறதா?

**சோதிக்கும் முறைகள்:-**

பத்திரம்/ஆவணம் சோதிப்பவரின் சோதனைச் சாலையில் கீழ்க்கண்ட சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன–

(1) தெரியாத உடைமையாளரை, உடைமையாளன் எழுத்துக்களுடன் சோதிப்பது.

(2) ஏமாற்று வேலையைக் கண்டுபிடிப்பது.

(3) ஏமாற்றுப் போர்வழியின் அடையாளத்தை, சந்தேகப்படும் நபரின் கையொப்பத்தைக் காணல்.

(4) தெரிந்தவைகளோடு தட்டச்சுக்களை ஒப்பிட்டுப்பார்த்து அதன்மூலம் அடையாளத்தைக் காணல்.

(5) ரப்பர் ஸ்டாம்ப் அழுத்தம், முத்திரை, அச்சிட்ட வாக்கியங்கள் மற்றும் பல்வேறு இயந்திர அழுத்தங்களைத் தெரியாத மூலங்களோடு ஒப்பு நோக்குவது, அவற்றைத் தெரிந்தவைகளோடு ஒப்புநோக்கி மூல அடையாளங்களைக் காணல்.

(6) வாக்கியங்களைக் கூட்டல், பதிலமைத்தல், திருத்தல் அடித்துத்திருத்தி எழுதுதல், அசல் கையொப்பம்போலவே எழுதுதல் போன்றவற்றைக் கண்டுபிடித்தல்.

(7) ரகசிய எழுத்துக்கள் அல்லது கண்ணுக்குத் தெரியாத மையைப் பயன்படுத்தி எழுதுதல் போன்றவற்றைக் கண்டுபிடித்தல்.

(8) கிழிந்த அல்லது சேதமான பத்திரம்/ஆவணத்தாளை, அதன் மற்றோரு பகுதியோடு ஒப்பிட்டு இரண்டு தாள்களும் ஒரே அசல்தானா என்று கண்டுபிடிப்பது.

(9) மை, தாள், எழுத்துக்களைக் கொண்டு சோதித்து, ஒரு பத்திரம்/ஆவணத்தின் காலத்தைக் கூறுதல்.

மேற்கண்ட சோதனைகள், சோதனையாளரால் கேள்விக்குரிய பத்திரம்/ஆவணத்தில் மேற்கொள்ளப்படும். நமது இந்திய அரசு பத்திரம்/ஆவண அரசு சோதனை மையங்களை சிம்லா, கல்கத்தா, ஹைதராபாத் போன்ற நகரங்களில் மேற்கண்ட சோதனைகளை மேற்கொள்வதற்காக அமைத்துள்ளது.

## மாதிரி கையெழுத்துக்களை பெறும்முறை :–

பிரச்சனைக்குரிய பத்திரம்/ஆவணத்திலுள்ள வாக்கியங்களை சந்தேகப்படும் நபரிடமிருந்து பெற்று எழுத்துக்களோடு ஒப்பிட்டு, இந்த பத்திரம்/ஆவணம் சந்தேகத்திற்குரிய நபரால் எழுதப்பட்டதா என்று அறியலாம். இருந்தாலும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகப் பெறப்பட்ட மாதிரி எழுத்துக்கள் சிதைந்தோ உருக்குலைந்தோ இருக்கலாம். ஆகவே பத்திரம்/ஆவணங்களை ஒப்பு நோக்கும்போது ‘‘இயற்கையானவை’’, ‘‘ஒப்புக் கொள்ளப்பட்டவை’’ அல்லது நடைமுறையிலுள்ளவை’’ என்று குறிப்பிடப்பட்டவைகளோடு ஒப்பிடுவது நலம்.

## சந்தேகப்படும் நபரிடமிருந்து கையெழுத்து மாதிரிகளைப்பெற கீழ்க்கண்ட முறைகள் கையாளப்படுகின்றன :-.

(1) சந்தேகப்படும் நபரை எழுதச்சொல்லுமுன், அவரை வசதியான இருக்கையில் அமரச்செய்து, அவருக்கு வசதியான வகையில் எழுதச்செய்யவும் இல்லையேல், எழுத்துக்கள் மாறு படலாம்.

(2) ஒப்பிட்டு நோக்க முக்கியமான வார்த்தைகள் எழுதுமுன் சந்தேகப்படும் நபரை சாதாரண வார்த்தைகளான அவரது பெயர், விலாசங்களை எழுதச் செய்து மாதிரிப்படிவங்களை அவரது சொந்த விருப்பத்தின் பேரிலேயே எழுதுவதாகக் குறிப்பிடச் சொல்ல வேண்டும்.

(3) பிறகு பிரச்சனைக்குரிய வார்த்தைகளை ஒரு குறிப்பிட்ட வேகத்தில் எழுதுமாறு சந்தேகப்பட்ட நபரைப் பணிக்க வேண்டும். நீங்கள் சொல்லச் சொல்ல அவர் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் எழுதிவர வேண்டும்.

(4) மேற்கண்டவற்றை தடையின்றி எழுதப் பயன்பட்ட நேரத்தைக் குறிக்க வேண்டும்.

(5) சந்தேகப்பட்ட நபருக்கு, பிரச்சனைக்குரிய பத்திரம் ஆவணத்தைப் போன்ற அளவிலுள்ள, அதே தரமான தாள் வழங்கப்படவேண்டும். நீண்டதாள் வழங்கக் கூடாது. பிரச்சனைக்குரிய பத்திரம்/ஆவணம் சிறியதாகவோ, கோடுகள் போட்டிருந்தாலோ, இல்லையயென்றாலோ அதைப் போலவே வழங்கபட வேண்டும். வங்கி காசோலை, பிரச்சனைக்குரிய ஆவணமாக இருப்பின், சந்தேகப்படும் நபருக்கும் வேற்று வங்கிக் காசோலைகளைத் தந்து அதைப் பூர்த்தி செய்யச் சொல்லவேண்டும். அதைச் சந்தேகப்பட்ட நபர் எவ்வாறு பூர்த்தி செய்கிறார் என்று பார்க்கவேண்டும். பிரச்சனைக்குரிய ஆவணம், உத்தியோக பூர்வமான படிவங்களாக இருப்பின், அதே போன்ற படிவங்களை சந்தேகப்பட்ட நபருக்கு வழங்கி பூர்த்தி செய்யச்சொல்ல வேண்டும். அவ்வாறு கிடைக்கவில்லை என்றால், அதே அளவு தாளைவைத்து தட்டச்சு இயந்திரத்தில் அடித்துத்தர வேண்டும்.

(6) சந்தேகப்படும் நபருக்கு, அவர் எந்த பொருள் பயன்படுத்தி எழுதினாரோ, அதே எழுதுபொருளைத் தரவேண்டும். ஊற்றுப் பேனாவை உபயோகித்திருந்தால் ஊற்றுப் பேனாவையும் பால்பையிண்ட் பேனா உபயோகித்திருந்தால் பால்பையிண்ட் பேனாவையும் இதேபோல எந்தப்பொருளை எழுத உபயோகித்தாரோ அதே பொருளைத்தரவேண்டும். மை ரகம் மாறி இருப்பின் பரவாயில்லை, ஏனெனில் கையெழுத்தில் அது பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது.

(7) எந்த வகையில் மாதிரி வார்த்தைகளை எழுத வேண்டும் என்பது சந்தேகப்படும் நபருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

(8) பிரச்சனைக்கு ஆவணங்களை, சந்தேகப்படும் நபருக்கு அவர் மாதிரியை எழுதும்போது காட்டலாம். அதே சமயத்தில் தவிர்க்க இயலாதபோது மூலவடிவத்தின் தட்டச்சுப் பிரதியையும் காட்டலாம்.

(9) முதல்முறை சொன்னதெல்லாம் எழுதி முடிந்தவுடன் எழுதிய மாதிரிப்படிவத்தைச் சந்தேகப்படும் நபரின் பார்வையிலிருந்து அகற்றிவிட வேண்டும். சற்று நேரத்திற்கு சந்தேகப்படும் நபருடன் இயல்பாகப் பேசி இரண்டாம்முறை சொல்லி எழுதிவைக்க வேண்டும். சந்தேகப்படும் நபர் எழுதும் வேகத்தில் சொல்ல வேண்டும். ஏனெனில் அவர் செய்த செயல்களை நினைவில் கொண்டுவர சிரமப்படக்கூடும்.

(10) ஒவ்வொரு மாதிரி தாள் எழுதிட ஏற்பட்ட நேரமும் எழுதியவரின் வயதும், அவருக்கு உடல்நிலையில் மாற்றம் ஏற்படுமானால் அதாவது உடல் நலமின்மை, கையில் காயம் ஏதேனும் ஏற்பட்டிருந்தால் அதுவும் விசாரணை அதிகாரியினால் ஒவ்வொரு தாளிலும் கையொப்பத்துடன் பதிவு செய்யப்பட வேண்டும்.

## தட்டச்சு மாதிரியை தயார்செய்யும் முறைகள்-

(1) சிறந்த தட்டச்சு மாதிரியை எடுப்பதற்கு சிறந்தமுறை, அதே வாக்கிய அமைப்புகளை, அதே ரகத் தாளில் அதே முறையில், அதே வகை நாடாவைக்கொண்டு தட்டச்சு செய்வதே.

(2) பிரச்சனைக்குரிய ஆவணம் நகல் பிரதியாக இருந்தால், மூன்று நகல் பிரதிகள் அதாவது ஒன்று அழுத்தமாகவும், இரண்டாவது நடுத்தரமாகவும், மூன்றாவது மென்மையாகவும் இருத்தல் வேண்டும்.

(3) தட்டச்சு மாதிரியைப் பிரதி எடுக்கும்போது, பின்னால் ஒரு தாளைப் பொதுவாகப் பயன்படுத்த வேண்டும்.

(4) தட்டச்சு செய்பவரின் பெயர், தேதி, எண் மற்றும் தட்டச்சு இயந்திரத்தின் பெயர், சுத்தம் செய்த அல்லது நாடாவை மாற்றிய விபரம் முதலியவை விசாரணை அதிகாரியினால் ஒவ்வொரு தாளிலும் பதிவு செய்யப்பட வேண்டும்.

## சோதனைக்கு ஆவணங்களை அனுப்பும் முறை :-

(1) சோதனைக்கு அனுப்பவேண்டிய ஆவணங்களை காப்பீடு செய்த தபால் மூலமோ அல்லது சிறப்புப் பணியாள் மூலமோ நன்கு அடைக்கப்பட்டு, துணி உறையிலிட்டு அரக்கு முத்திரையிடப்பட வேண்டும். செல்லும் வழியில் கடுமையாக கையாளப்படுவதைத் தாங்கும்படி இவை அமையவேண்டும்.

(2) சோதிக்கப்பட வேண்டிய பிரச்சனைக்குரிய ஆவணங்கள் பொதுவாக மாநில சோதனை அதிகாரி அல்லது இயக்குநர், குற்ற இயல் விஞ்ஞான சோதனை சாலைக்கு (அதாவது மாநில அதிகாரி, இந்த சோதனைச் சாலையுடன் இணைக்கப்பட்டிருந்தால்) அனுப்பப்பட வேண்டும். புதுச்சேரி மாநிலத்தில் அனுப்பப்படும் மாதிரிகள் அரசு ஆவண சோதனை அதிகாரி ஹைதராபாத் என்ற விலாசத்திற்கு விளக்கம் பெற அனுப்பப்பட வேண்டும்.

(3) பிரச்சனைக்குரிய ஆவணத்துடன் சோதனை அதிகாரிக்கு விண்ணப்பமும் ஒரு பிரதியுடன் அனுப்பப்பட வேண்டும். ஒரு பிரதியை சோதனை அதிகாரி அவரது சோப்பியில் வைத்துக்கொள்வார். மற்றதை அவர் நீதி மன்றத்தில் சாட்சி சொல்லும்போது சமர்பிப்பார்.

(4) விண்ணப்பத்தில் நான்கு முறைகள் கீழ்க்கண்டவாறு இருக்கவேண்டும்-

1. முறை - I - பிரச்சனைக்குரிய ஆவணம் இதில் பட்டியல் இடப்பட வேண்டும்.

2. முறை - II - மாதிரி வாக்கியங்கள் போன்றன இந்த முறைகள் குறிக்கப்பட வேண்டும்.

3. முறை -III - ஒப்புக்கொள்ளப்பட்ட வாக்கியங்கள் இதில் சேர்க்கப்பட வேண்டும்.

4. முறை -IV - சோதனைச்சாலை அதிகாரியிடமிருந்து பெற விரும்பும் விளக்கங்கள் இந்த முறைகள் இணைக்கப்பட வேண்டும்.

பிரச்சனைக்குரிய ஆவணங்களில் Q1, Q2, Q3, Q4 என வண்ண பென்சிலினால் குறியிட வேண்டும். மாதிரி அல்லது தரமான பொருள்கள் ஒப்பிட அனுப்பப்பட்டால் அவைகள் S1, S2, S3, S4 என்று வண்ண பென்சிலினால் குறிப்பிட வேண்டும்.

(1) ஆவணங்களைத் துளையிடவோ, குண்டூசியால் இணைக்கவோ கூடாது. இணைப்பான்களை Paper Clips பயன்படுத்த வேண்டும்.

(2) சேதமடைந்த ஆவணங்கள், மேலும் சேதமடையாத வகையிலும், பிரிக்கப்படாமலும் சோதனைச் சாலைக்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) தேவையில்லாமல் ஆவணங்கள் பிரிக்கப்படவோ, மடக்கப்படவோ கூடாது. புதிதாகவும் மடித்தல் கூடாது.

(4) ஆவணங்களை அழிக்க, வெட்ட, இழுக்க அல்லது சரிசெய்ய எந்த வகையிலும் முயற்சிக்கக் கூடாது.

(5) எழுதிய வாக்கியங்களை அடிக்கோடிடவோ அல்லது குறிப்பிட்ட பகுதிகளின் முக்கியத்துவத்தை உணர்த்த அம்புக் குறியிடவோ கூடாது.

(6) முக்கியமானவற்றை உடனே எவ்வளவு விரைவில் சோதனைக்கு அனுப்ப இயலுமோ அவ்வளவு விரைவில் அனுப்புவதின் மூலம் தேவையற்ற தாமதத்தையும், கடிதப் போக்குவரத்தையும் தவிர்க்க இயலும்.

## அத்தியாயம் - 17

## குற்றத்தையும் மற்றும் குற்றவாளிகளையும் கண்டு பிடிப்பதில் கைரேகைகளும், அவற்றின் உபயோகமும்

கைரேகைகள், குற்றவாளிகளை குற்றங்களுடன் சம்பந்தப்படுத்தும் நிலையான தடயங்களாக இருப்பதால், சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் கைரேகைகள் குற்றத்தையும் மற்றும் குற்றவாளிகளையும் கண்டுபிடிக்க உதவுகின்றன. இந்திய தண்டனை சட்டத்தின் அத்தியாயம் 12 மற்றும் 17-ன் கீழ் தண்டிக்கப்படும் எல்லா நபர்களினுடைய பத்து இலக்க பதிவுகளையும், கைரேகை ஏடுகளில் பதிவேட்டிற்காக பராமரிக்கும் அலுவலகங்கள் பத்து இலக்க கைரேகை அலுவலகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஓவ்வொரு மாநிலமும் அதனுடைய தலைநகரில் அதனுடைய பத்து இலக்க கைரேகை அலுவலகத்தை கொண்டுள்ளது. ஓவ்வொரு மாநிலத்தினுடைய மாவட்ட தலைமையகத்திலும் ஓரிலக்க கைரேகை அலுவலகங்கள் இருக்கின்றன. ஓரிலக்க கைரேகை அலுவலகத்தில், ஒரு குற்றவாளியினுடைய ஒவ்வொரு ரேகையின் பதிவும் தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றன.

### குற்றவாளியினுடைய கைரேகை பதிவுகளை எடுப்பதற்கு காவல் அதிகாரிகளுக்குள்ள அதிகாரம் :-

விசாரணை அதிகாரி, குற்றவாளிகளினுடைய கைரேகைகளை எடுப்பதற்கு சட்டத்திலுள்ள பிரிவுகளில், அவர்களுக்குள்ள அதிகாரத்தை நன்றாக அறிந்திருக்க வேண்டும். சாதாரணமாக எந்த நபருடைய கைரேகைகளையும் அவருடைய சம்மதத்தின் பேரில் எந்த நேரத்திலும் எடுக்கலாம். ஆனால் சட்டப்படி, இம்மாதிரியான பதிவுகளை குற்றவாளியிடமிருந்து ஒரு காவல் நிலையத்தினுடைய ஒரு காவல் நிலைய அதிகாரி மட்டும் அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1974-யினுடைய

அத்தியாயம் 14-ன் கீழ் விசாரணை செய்யும் ஒரு காவல் துறை அதிகாரி அல்லது கைதிகளை அடையாளம் காணும் சட்டம் 1920-ன் கீழுள்ள ஒரு தண்டிக்கப்படாத குற்றவாளியாக இருக்கும் பட்சத்தில் 4-வது பிரிவின்படியும், ஒரு தண்டிக்கப்பட்ட குற்றவாளியாக இருக்கும் பட்சத்தில் 3-வது பிரிவின் படியும், காவல் துறையிலுள்ள எந்த அதிகாரியாவது ஆனால் காவல்துறை உதவி ஆய்வாளர் பதவிக்குக் கீழ் இல்லாதவரால் எடுக்கப்பட வேண்டும். ஆனால் அதே நேரத்தில் அந்த நபர் ஒரு வருடம் அல்லது அதற்கு மேலான கடுங்காவல் தண்டனையில் தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றம் சம்மந்தமாக கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒரு நடுவர், இந்திய சாட்சிய சட்டபிரிவு 73-டன் 45-வது பிரிவு சேரும் ஒரு குற்ற விசாரணையின் பொழுது, ஒரு குற்றவாளியினுடைய கைரேகைகளை எடுப்பதற்குகூட உத்தரவிடலாம். மற்றும் அவற்றை ஒரு கைரேகை வல்லுநர் ஒப்பிட வேண்டும். ஏதாவது கைது செய்யப்பட்ட அல்லது விசாரணையின் கீழ் உள்ள கைதி அவருடைய கைரேகைகளை எடுப்பதற்கு தடுத்தாலும் அல்லது மறுத்தாலும் கைதிகளை அடையாளம் காணும் சட்டப்பிரிவு 6 ஆனது அவருடைய கைரேகைகளை எடுப்பதற்கு தேவையான எல்லா வகைகளையும் உபயோகிக்க அனுமதியளிக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் கைரேகைகளை எடுப்பதற்கு தடுத்தாலும் அல்லது கொடுக்க மறுத்தாலும் அவர் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 186-ன் கீழ் தண்டனை அடைவதற்கு பொறுப்பாளியாகிறார்.

### உயிருள்ள நபர்களிடமிருந்து எப்படி நல்ல ரேகைகளை எடுப்பது :—

கைரேகைகள் எடுப்பதற்கு உலோகம் அல்லது கண்ணாடியாலாகிய ஒரு வழவழப்பான பலகை, ஒரு ரப்பர் உருளை மற்றும் அச்சு மையின் ஒரு குழல் ஆகியவைகள் தேவைப்படுகின்றன.

## கைரேகைகள் எடுப்பதற்கு கீழேயுள்ள முன்னெச்சரிக்கைகள் எடுக்க வேண்டும் :

(1) பலகையும் மற்றும் உருளையும் சுத்தமாக இருக்க வேண்டும். மேலும் அவைகள் தூசுகளும் பழைய மை கரைகளும் இல்லாமலிருக்க வேண்டும்.

(2) விரல்களினுடைய முனைகள், கைரேகை ஏடுகளில் மேல் நோக்கியவாறு பதிவுகளை எடுக்க வேண்டும்.

(3) உருட்டிய பதிவுகள், விரல்களில் உருண்டையான பகுதியின் அமைப்பு முழுவதையும் காட்டவேண்டும்.

(4) ஒவ்வொரு விரலினுடைய உருட்டிய ரேகைகள் அந்த விரலுக்கென்று கொடுக்கப்பட்ட இடத்தில்தான் எடுக்க வேண்டும். மற்றும் விரல்களின் நுனியிலுள்ள கோடுகளினுடைய பதிவுகள் மட்டும்தான் தெரிய வேண்டும்.

(5) உருட்டிய பதிவுகளுடன்கூட, நான்கு விரல்களினுடைய சாதாரண பதிவுகளை ஒரே நேரத்திலும் மற்றும் கட்டை விரலைத் தனியாகவும், அதற்கென்று கொடுக்கப்பட்ட இடத்தில் உருட்டிய பதிவுகளைச் சரி பார்த்துத் திருத்துவதற்காக எடுக்க வேண்டும்.

(6) ஒரு விரல் இல்லாமலிருந்தாலும், உருக்குலைந்து இருந்தாலும், சிதைந்து இருந்தாலும், அதை கைரேகை ஏட்டில், அந்த விரலுக்கென்று விடப்பட்ட இடத்தில் விவரங்களுடன் அதாவது அந்தக் காயம் நிலையானதா அல்லது தற்காலிகமானதா என்று குறிப்பிட வேண்டும்.

இரண்டு விரல்களாக இருக்கும் பட்சத்தில் அவற்றினுடைய கைரேகைகளை அந்த விரலுக்கென்று கொடுக்கப்பட்ட இடத்தில் முடிந்தால் எடுக்கவேண்டும்.

## இறந்தவர்களுடைய கைரேகைகளை எடுத்தல் :-

இறந்தவர்களுடைய கைரேகைகளை எடுக்கும்பொழுது கீழேயுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

(1) இறப்பு வெகு சமீபத்தில் இருந்தாலும் மற்றும் மரண விறைப்பு ஏற்படாமலிருந்தாலும், உயிருள்ள நபருக்கு கைரேகை எடுக்க விவரித்த முறைகளை விசாரணை அதிகாரி பின்பற்ற வேண்டும்.

(2) இறப்பு விறைப்பு ஏற்பட்டிருக்கும் பொழுது விசாரணை அதிகாரி, இறந்தவருடைய கைகளை போதுமான சுடு நீரில் சில நிமிடங்கள் அழுத்தி வைத்து அதன் பிறகு விரைவாகவும் தொடர்ந்தும் மணிக்கட்டையும், விரல்களையும் ஆட்ட வேண்டும். இதனால் விரல்களும் மணிக்கட்டும் தளர்ச்சியடைந்து விசாரணை அதிகாரிக்கு இறந்தவருடைய கைரேகைகளை எடுப்பதற்கு உதவியாக இருக்கும். கைரேகைகள் எடுப்பதற்கு முன் விரல்களை நன்றாக உலர்த்த வேண்டும்.

(3) இறந்தவருடைய உடல் அழுகிய நிலையில் இருக்கும் பட்சத்தில், விசாரணை அதிகாரி, ஒரு மருத்துவ அதிகாரியின் உதவியுடன் விரல்களில் நெருக்கமான கோடுகள் உள்ள முதல் தோலை எடுக்கபெற வேண்டும். இவ்வாறு வெட்டி எடுக்கப்பட்ட தோலினுடைய துண்டுகளைக் கழுத்தகன்ற பாட்டில்களில் தனித்தனியாக பத்திரமாகப்போட்டு, அதை பினால் ஆல்கஹால் மற்றும் கிளிசரின் ஆகிய மூன்றும் ஒரே அளவில் கலந்த ஒரு கரைசலில் முழுவதுமாக அமிழ்ந்திருக்குமாறு வைக்கவேண்டும். எந்த விரலிலிருந்து தோல் வெட்டி எடுக்கப்பட்டது என்பதைக் காட்டுவதற்கு ஒவ்வொரு பாட்டிலிலும் லேபிள் ஒன்று இருக்கும்படி செய்யவேண்டும். மேலும் அவற்றை, கைரேகை பதிவுகள் எடுப்பதற்காகவும், ஆராய்வதற்காகவும், அடையாளம் கண்டுபிடிப்பதற்காகவும், கைரேகை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

## குற்றம் நடந்த இடத்தில் கைரேகைகளை ஆராய்தல் :-

ஒரு குற்றம் நடந்த இடத்தில், கைரேகைகளை ஆராயும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் ஒன்றும் இல்லை. இவையெல்லாம் பொது அறிவையும், விசாரணை, அதிகாரியின் விவேகத்தையும் பொறுத்து உள்ளது. இதற்கு விசாரணை அதிகாரி குற்றம் செய்யப்பட்ட விதத்தை கற்பனை செய்து மற்றும் சந்தேகப்படும் நபர் உள்ளே நுழைந்த வழியையும், பொருள்களை கையாண்டதையும், சம்பவம் நடந்த இடத்திலிருந்து தப்பிச் சென்ற வழியையும் ஆராயவேண்டும்.

புகாரைப் பெற்றவுடன் விசாரணை அதிகாரியின் முதன்மையான கடமை, வாதியிடம், சம்பவம் நடந்த இடத்திற்கு ஒருவரையும் வருவதற்கு விடவேண்டாம் என்றும் மேலும் அவர் குற்றம் நடந்த இடத்தை வந்தடையும் வரை யாரொருவரும் எந்தப்பொருளையும் தொடவிடக் கூடாது என்றும் அறிவுரை வழங்கவேண்டும். சம்பவம் நடந்த இடத்தை அடைந்ததும், முதல் நடவடிக்கையாக அதிகாரபூர்வமற்ற நபர்களின் தலையீடுகளிலிருந்தும் மற்றும் வெப்பம், தூசு, காற்று மழை

ஆகியவைகளினால் எவ்வித பாதிப்பும் சம்பவம் நடந்த இடத்திற்கு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். சம்பவம் நடந்த இடத்தைச் சோதனையிடுவதற்கு முன்பு சம்பவம் நடந்த இடம் முழுவதையும் உடனடியாக புகைப்படம் எடுக்கவேண்டும்.

விசாரணை அதிகாரி, கிடைக்கக்கூடிய கைரேகைகளை, உருபெருக்கும் கைகண்ணாடிகளை உபயோகித்து முறைப்படி ஆராய்ந்தால் எந்த ஓர் இடத்திலிருக்கும் பொருளும், அவருடைய கண் பார்வையிலிருந்து தப்ப முடியாது. வழவழப்பான வேலைபாடு முடிந்தவை உலோகம் அல்லது மரவேலை, மூடப்பட்ட பொருள்கள், வழவழப்பான திரைச்சீலைகள், காகிதம் மற்றும் மற்ற வழவழப்பான அல்லது மேலே கண்ணாடி போடப்பட்ட பொருள்கள் முதலியவைகளை கவனமின்றி விட்டுவிடக்கூடாது. அழகாக பூச்சு பூசப்பட்ட கதவுகள் மற்றும் ஜன்னகள்கூட கைரேகைளை கண்டுப்பிடிப்பதற்கான விவரங்களை கொடுக்கலாம். தரையில் சிதறிக் கிடக்கும் கண்ணாடி ஜன்னல்களினுடைய உடைந்ததுண்டுகள் மற்றும் மரச்சட்டங்களில் ஒட்டிக்கொண்டிருப்பவைகளையும், இவையெல்லாம் எந்தவித சப்தமும் ஏற்படாமல் தடுப்பதற்கு கைகளினால் எடுத்திருக்கலாம். ஆதலால் அவற்றில் கைரேகைகள் இருக்கின்றனவா என்று பார்ப்பதற்கு கவனமாக சோதனையிட வேண்டும். பூட்டுகள் உடைக்கப்பட்டிருந்தால் அவைகள்கூட கைரேகைகள் இருப்பதை வெளிப்படுத்தும். குற்றம் நடந்த இடத்தில் சந்தேகப்படுபவருடைய சொந்தப்பொருள்கள் போன்ற கருவிகள், டார்ச், லாந்தர் முதலியவைகள் குற்றம் நடந்த இடத்தில் விட்டுச் சென்றவைகளிலும், மேலும் பாதுகாப்பற்று கிடக்கும் வாகனங்களிலும் சந்தேகப்படுபவருடைய கைரேகைகள் இருக்கும். இது போலவே பாதிக்கப்பட்டவர் அணிந்த ஆடைகளிலும் கூட கைரேகை இருக்கின்றதா என்று கவனமாக ஆராய வேண்டும். சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் மது பாட்டில்கள், கண்ணாடி டம்பளர்கள், பாத்திரங்கள் முதலியவைகளிலும்கூட சந்தேகப்படுபவருடைய கைரேகைகள் இருக்கும். எந்த ஒரு சூழ்நிலையிலும் ஒரு சில ரேகைகள் கிடைத்தவுடன், கைரேகை தேடுவதை விட்டுவிடக்கூடாது.

## குற்றம் நடந்த இடத்திலுள்ள ரேகைகளினுடைய வகைகள் :-

குற்றம் நடந்த இடத்தில் காணப்படும் கைரேகைகள் குற்றம் நடந்த இடத்தினுடைய கைரேகைகள் என்று அழைப்பதுண்டு. இவைகளை தற்செயலான அல்லது சந்தர்ப்ப ரேகைகள் என்று கூறுவதுண்டு. கைரேகைகளின் பல்வேறு வகைகள் கீழே உள்ளன.

### (1) பிளாஸ்டிக் ரேகைகள் :-

சோப்பு, மண், குழி, மெழுகுவர்த்தி, உருகிய மெழுகு காய்ந்த வர்ணம், நெய், வெண்ணெய், கவர்களின் மேலுள்ள கோந்து, கிரீஸ் முதலியவைகளின் மேல் காணப்படும் ரேகைகள் பிளாஸ்டிக் ரேகைகள் என்று அழைப்பதுண்டு.

### (2) கண்ணுக்கு தெரியக்கூடிய ரேகைகள் :-

விரல்களினால் ரேகைகள் ஏற்படுத்தப்பட்டு, அவை வர்ணம், இரத்தம், மை, தார், தூசு முதலியவைப் போன்ற நிறமுள்ள பொருள்களினால் மூடப்பட்டிருந்தால் அவற்றை கண்ணுக்குத் தெரியக்கூடிய ரேகைகள் என்று அழைக்கின்றோம்.

(3) மறைந்துள்ள ரேகைகள் :-

எண்ணெய் பொருட்களாலும் மற்றும் விரல்கள், உள்ளங்கைகளிலுள்ள வியர்வைத் துளைகளிலிருந்து துளித்துளியாக வரும் வியர்வையினால் மட்டும் ஏற்படும் ரேகைகள் மறைந்துள்ள ரேகைகள் என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அவைகள் சாதாரணமாக கண்ணுக்கும் தெரிவதில்லை. மேலும், அவற்றை தகுந்த முறைகளால் மட்டுமே எடுக்கமுடியும்.

**கைரேகைகள் உடைய சாட்சியங்களை சேகரித்தல் கட்டுதல் மற்றும் கைரேகை அலுவலகத்திற்கு அனுப்புதல் :**

கைரேகைகள் உள்ள சாட்சியங்களை சேகரித்தலிலும், பாதுகாப்பதிலும் கட்டும்பொழுதும் மேலும் அவற்றை சோதனைக்காகவும் மற்றும் வல்லுநருடைய கருத்தைப் பெறுவதற்காக, கைரேகை அலுவலகத்திற்கு அனுப்பும்பொழுதும் அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கண்ணுக்குத் தெரியக்கூடிய ரேகைகள் இருக்கும் இடத்தை அறிவது எளிது. மறைந்துள்ள ரேகைகளை கீழேயுள்ள முறைகளினால் கண்டுபிடிக்கலாம்.

(1) ஒரு குறிப்பிட்ட (தகுந்த) தூரத்திலிருந்து சாய்வான ஒளியை உபயோகிப்பதாலும்.

(2) ஒளியைச் செலுத்தி உபயோகிப்பதாலும்.

(3) சுவாசிப்பதை ஏற்படுத்தலினாலும்.

(4) அந்தப் பொருளை பல்வேறு கோணங்களில் பிடிப்பதன் மூலமாகவும்.

(5) வழக்கத்திலுள்ள பவுடர்களை, அயோடின் புகை அல்லது மற்ற இரசாயன செய்முறைகளைப் பயன்படுத்தலாம்.

கண்ணாடி, தகட்டால் மூடிய மற்றும் வெள்ளி பொருட்கள் வர்ணம் பூசப்பட்ட மரம், பளப்பளப்பான பொருட்கள் மற்றும் இருண்ட நிறங்களுடைய பொருட்களை சாம்பல் நிற பவுடரை உபயோகித்து எடுக்கவேண்டும். பால் போன்ற வெள்ளை நிற பொருட்களான பீங்கான், தாள் முதலியவைகளிலுள்ள பதிவுகளை கருப்புநிற பவுடரை உபயோகித்து எடுக்கவேண்டும். மறைந்துள்ள ரேகைகளை பவுடர்களினால் ஒட்டக முடி பிரஸ் அல்லது இறகுகளில் பிரஸ்ஸை உபயோகித்து எடுக்கவேண்டும். புதைக்கப்பட்டிருக்கும் அல்லது ஈரமான சூழ்நிலையிலுள்ள அல்லது நீரில் உள்ள பொருட்களை பவுடரின் உதவியினால் எடுப்பதற்குமுன் உலரவைக்க வேண்டும். இதேபோல், பிரஸ் மற்றும் பவுடர் ஆகிய இரண்டையும் கைரேகை எடுப்பதில் அவைகளை உபயோகிப்பதற்கு உலர வைக்கவேண்டும். மறைந்துள்ள கைரேகைகளை ஓர் ஒட்டக முடி பிரஸ்ஸினால் தூசு தட்டி, பின்பு அதிகமாக உள்ள பவுடரை தட்டும்பொழுது ஆட்டேமைசர்களினுடைய மூக்குப்பகுதியை பொருளிலிருந்து 6'' தள்ளி வைப்பதன் உதவியினால் அவற்றை எடுக்கலாம்.

தகுந்த இரசாயன காரணிகளான அயோடின் புகை, சில்வர் சைட்ரேட் முதலியவைகளை உபயோகித்துகூட மறைந்துள்ள ரேகைகள் எடுக்கலாம். ஆனால் இதை கைரேகை வல்லுநர்களிடம் விட்டுவிட வேண்டும். மறைந்துள்ள கைரேகைகளை எடுத்த பிறகு அவற்றை காவல்துறை புகைப்படக்காரர் உதவியினால் அவற்றினுடைய புகைப்படத்தை தகுந்தவாறு எடுத்து அவற்றை கைரேகை அலுவலகத்திற்கு ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக அனுப்ப வேண்டும்.

குற்றம் நடந்த இடத்தில் மறைந்துள்ள கைரேகைகளை சில சாட்சிகள் ஆஜரில் இருக்கும் பொழுது எடுக்கவேண்டும். மற்றும் அவர்களுடைய கையெழுத்துகளுடன் எடுத்த தேதியும் அத்துடன் தற்செயலான ரேகைகளை எடுத்த அதிகாரியினுடைய கையெழுத்தும் பொருளின் மேல் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிடில் எதிர்காலத்தில் அந்த பதிவுகள் ஏற்படுத்தப்பட்டதாக எதிர்த்து வாதாடலாம். அந்த பொருட்களைக்கூட தேவைப்பட்டால், நீதி மன்றத்தில் சாட்சியங்களாக ஆஜர்படுத்தலாம். தற்செயலான ரேகைகளை எடுப்பதில் விசாரணை அதிகாரி தேர்ச்சியற்றவராக இருந்தால், ஒரு கைரேகை வல்லுநர் அல்லது மற்றவர்களுடைய சேவையைத் தேடலாம். பொருட்கள் எடுத்துச்செல்லக்கூடியவைகளாக இருந்தால் கைரேகைகளை சோதனை செய்வதற்காக அவற்றை கவனமாக கைரேகை அலுவலகத்திற்கு அனுப்பலாம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கக்கூடிய கைரேகையை ஒரு காமிராவினால் புகைப்படம் எடுக்க முடியாத பட்சத்தில் அதை ஒரு எடுக்கும் நாடாவினால் சாட்சிகள் ஆஜரில் இருக்கும்பொழுது எடுத்து அதன் பிறகு அதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக புகைப்படம் எடுக்கலாம். எப்போதும், கைரேகைகள் எடுப்பது தேவைப்படும் பொழுது இந்தக் காரணத்திற்காக ஒரு கைரேகை வல்லுநரைக் கட்டாய சேவைக்காக அழைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

குற்றம் நடந்த இடத்தில் தற்செயலான ரேகைகள் எதாவது இருந்தால் பொருட்களை கையாளக்கூடிய வீட்டிலுள்ளவர்களுடைய கைரேகைகளை எடுத்து அவற்றுடன் சந்தேகப்படுபவர்களுடைய கைரேகைகளையும் சம்பவம் நடந்த இடத்தில் எடுத்து தற்செயலான ரேகைகளுடன் ஒப்பிட்டு பார்ப்பதற்காக கைரேகை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

குற்றம் நடந்த இடத்தில் கைரேகைகளை எடுக்கும்பொழுது விசாரணை அதிகாரி, குற்றம் நடந்த இடத்தை ஆராயும்பொழுதும் மற்றும் மறைந்துள்ள கைரேகைகளை எடுக்கும்பொழுதும் எந்த பொருளிலும் அவருடைய கைரேகை இருக்காதவாறு நடந்துக்கொள்ள வேண்டும். கைரேகை அலுவலகத்திற்கு பொருட்களை அனுப்பும் பொழுது, விசாரணை அதிகாரி, ஒழுங்காக பொருட்களை கட்டி முத்திரையிட்டு அவற்றின்மேல் சீட்டு ஒட்டி அத்துடன் வழக்கினுடைய குறிப்பு, வழக்கினுடைய சுருக்கமான வரலாறு, தேவைப்படும் கருத்து முதலியவைகளை குறிப்பிட்டு ஒரு மேலே அனுப்பும் கடிதத்தை அனுப்ப வேண்டும். பொருட்களை கட்டும்பொழுது ரேகையினுடைய மேற்பகுதி, கட்டும் பொருட்களுடன் தொட்டுக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக பொருளை ஒரு பொருத்தமான வெளிப்பாத்திரத்தில் பாதுகாப்பாக கட்டினால்தான், அந்தப் பொருள் வெளிப்பாத்திரத்துடன் தொடாமல் நிலையாக இருக்கும். கைரேகை அலுவலகத்திலுள்ள ஒரு கைரேகை நிபுணருக்கு, ஒரு தனிப்பட்ட நபர் மூலம் பொருட்களை சோதனைக்காக அனுப்புவது எப்பொழுதும் பாதுகாப்பானது.

# அத்தியாயம் - 18

## காலடிகள் மற்றும் காலணி தடயங்கள்

சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் காலடிகள் மற்றும் காலணி தடயங்கள், வழக்கின் குற்றவாளிகளை விசாரிப்பதிலும், குற்றம் சுமத்துவதிலும் விஞ்ஞானப்பூர்வமான இணைப்பை ஏற்படுத்துவதற்கு உபயோகமாக இருக்கின்றன. காலணியின் மேல் வரம்பினுடைய சிறப்பியல்பு அல்லது மற்ற தனிப்பட்ட குணங்கள் சந்தேக நபரை அடையாளம் காணுவதற்கு நிச்சயமாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இதே போல் நன்றாக அணிந்த காலணிகளில் உள்ள பிளவுகள், ஒழுங்கற்றவைகள் மற்றும் உள்ளங்காலில் உள்ள டிசைனில் உள்ள சிறப்பியல்புகள், ஆணிகள் ஒட்டுப்போட்டு தைத்தவை அல்லது குதிகால்கள் தேய்ந்தவைகள் போன்றவைகளிலிருந்து

காலடிகளினுடைய ஒரு நிலையான அமைப்பைப் பெறலாம். மறுபக்கத்தில் காலணித்தடயங்கள் மற்றும் காலடிகளில் விட்டங்கள் மாதிரிகள் அல்லது பொதுவான அமைப்பு போன்ற தெரியக்கூடியவைகள் ஒரு சந்தேக நபரை அல்லது மற்ற சாட்சிகளுடன் மெய்ப்பிப்பதற்கு மட்டும் உபயோகப்படலாம்.

**காலடிகள்:**

**காலடிகள் இரண்டு வகைப்படும்** – குழிவான காலடிகள் மற்றும் மேலோட்டமான காலடிகள்.

மேல்மட்டம் மென்மையாகவோ அல்லது நெருக்கமின்றியோ இருந்தால் அதன் மேல் நடக்கும் ஒருவர் விட்டுச்செல்லும் அழுந்திய காலடிகள் குழிவான காலடிகள் என்று அழைக்கப்படும். மேல்மட்டம் கடினமாக இருந்தால் காலடிகள் ஏற்படலாம். மேல்மட்டமே பவுடர் அல்லது திரவப்பொருளால் தூசுகள் அல்லது புழுதிகளால் மூடப்படாமல் இருந்தால் அல்லது உள்ளங்கால் சில அந்நியப்பொருட்கள் உதாரணமாக தூசு, மாவு, முகப்பவுடர், எண்ணை, கிரீஸ், வர்ணம், மண், இரத்தம் முதலியவைகளினால் மூடப்பட்டிருந்தால் அம்மாதிரியான அடிகள் மேலோட்டமான காலடிகள் என்று அழைக்கப்படும். பொதுவாக மேலோட்டமான காலடிகள் ஒரு நபரினுடைய அடையாளத்தைக் கண்டுபிடிப்பதற்கும் மிகவும் உபயோகமாக இருக்கின்றன. ஏனெனில் அவைகள் குழிவான காலடிகளைவிட சிறப்பியல்புகளை நல்ல முறையில் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

காலடிகள் வெகு எளிதாக எடுக்கக்கூடிய பொருளில் இருந்தால் அதை எடுத்துக்கொண்டு அதன்மேல் வழக்கு எண், காவல்நிலையத்தின் பெயர், விசாரணை அதிகாரி மற்றும் சாட்சிகளினுடைய கையெழுத்துக்கள் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்.. காலடிகள் வேறுமாதிரியாக இருந்தால் அவற்றைப் பாதுகாத்து அதன்பிறகு மீண்டும் உண்டாக்க வேண்டும்.

**காலடிகளை மீண்டும் உண்டாக்குதல் :**

ஒரு காலடியை மீண்டும் உண்டாக்குவதற்கு மூன்று முறைகள் இருக்கின்றன. அவையாவன – புகைப்படம் எடுத்தல் , பிரதி எடுத்தல் மற்றும் அச்சு எடுத்தல்.

**புகைப்படம் எடுத்தல் :**

பொதுவாக மற்ற முறைகளை உபயோகப்படுத்துவதற்கு முன்பு (அந்த காலடிகள் எப்பொழுதும் அப்படியே இருக்கமுடியாததாலும், திடீரென சேதம் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதனாலும் ) எல்லா காலடிகளையும் புகைப்படம் எடுக்க வேண்டும். சென்டிமீட்டரில் குறிக்கப்பட்ட காகிதம் அல்லது ஒரு காட்போர்டு அளவுகோலை காலடியினுடைய பக்கத்தில் முடிந்த அளவு அதே மட்டத்திற்கு வைக்க வேண்டும். புகைப்படம் எடுக்கும் போது லென்ஸினுடைய மட்டம் பொருளுக்கு இணையாக இருக்க வேண்டும்.

**பிரதி எடுத்தல் :**

காலடிகளை பிரதி எடுப்பதற்கு ஒரு மெல்லிய உலர்ந்த மற்றும் சுத்தமான கண்ணாடி அல்லது செல்லூலாய்டு ஏடு மற்றும் நல்ல அழுத்தமான மையுள்ள கூர்மையான முனையினுடைய ஒரு பேனா ஆகியவைகள் தேவைப்படுகின்றன. கண்ணாடி அல்லது செல்லூலாய்டு ஏட்டை முடிந்த அளவு நெருக்கமாக பதிவுகளுக்கு மேல் வைக்க வேண்டும். ஆனால் அது பதிவைத் தொடாமல் இருப்பதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கைகளை எடுக்க வேண்டும். அதன்பிறகு காலடிகளை முடிந்த அளவு மெல்லியதாக பிரதி எடுக்கலாம். பிரதி எடுக்கும் போது முள்ளினுடைய முனை மற்றும் கண்கள் ஒரே

வரிசையில் பிரதி எடுக்கக்கூடிய பகுதிக்கு மேல் நீளவாட்டிலும் இணையாக இல்லாமலும் எப்பொழுதும் இருக்க வேண்டும். காலடிகளினுடைய பல்வேறு பகுதிகளினுடைய தெளிவான ஓரங்களை ஒரு மெல்லியதான தொடர்ந்த ஒரு வரியால் காட்ட வேண்டும். மங்கலான மேற்வரம்புகள் சந்தேகமாக இருக்கும்போது சந்தேகமான பதிவுகளை புள்ளியிட்ட வரிசையினால் காட்டலாம்.

## அச்சு எடுத்தல் :

பிளாஸ்டர் ஆப் பேரிஸனாலும், மெழுகு, ரெக்சின் மற்றும் மற்ற பொருள்களாலும் அச்சு எடுத்தல் செய்யப்படுகின்றன/ அல்லது தயாரிக்கப்படுகின்றன. இது கீழேயுள்ள முறைகளைக் கொண்டது.

### i) பதிவுகளை எண்ணெய்ப் பசையிடுதல் :

இதனால் அச்சு எடுப்பதற்கு உதவிப்புரிய முடிகிறது. இதற்கு தாவர எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் தகுந்ததாகும். இந்த எண்ணெய் தெளிப்பானால் தெளிக்கலாம்.

### ii) அச்சு எடுப்பதற்கு பொருள்களை கலத்தல் மற்றும் ஊற்றுதல் உபயோகிக்க வேண்டும்:

மரத்தாலாகிய, காட்போர்டு அல்லது உலோகச் சட்டத்தை காலடியைச் சுற்றி இருக்குமாறு வைக்க வேண்டும். விளிம்புள்ள ஒரு வாயகன்ற பாத்திரத்தில் ½ பாத்திரம் அளவிற்கு தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் தோராயமாக அதே கன அளவு உள்ள பிளாஸ்டரை கூடுதலாக போட வேண்டும். பிளாஸ்டர் கரைந்தவுடன், அதை வெகு விரைவான கலக்கி ஒரு வழவழப்பான கட்டிகள் இல்லாத கூழ் போன்று ஆக்கவேண்டும். அந்த அச்சு சுமாராக ½ இஞ்ச் கனத்திற்கு வரும்பொழுது சில மெல்லிய கம்பி வலையிலான சின்னப் பட்டைகள் அல்லது சில மெல்லிய குச்சிகளை அச்சு வலுவாக இருப்பதற்காக சிலுவை மாதிரி குறுக்கும் நெடுக்குமாக வைக்கலாம்.

இப்பொழுது சற்று அடர்த்தி அதிகமான கலவையை தயாரித்து முதலில் ஊற்றியதின் மேல் திரும்பவும் அந்த அச்சு சுமார் ஒரு இஞ்ச் கன அளவு வரும்வரை ஊற்ற வேண்டும். இந்த அச்சை தொடாமல் சுமார் பதினைந்து நிமிடங்கள் விட வேண்டும். அதன்பிறகு தொட்டுப்பார்த்தால் அது வெதுவெதுப்பாக இருந்தால் பிளாஸ்டர் இறுகி விட்டது. மேலும் அச்சை எடுப்பதற்கு தயாராக உள்ளது என்பதற்கான அடையாளமாகும்.

### iii) அச்சை எடுத்தல் :

சுற்றியுள்ள மண்ணை தோண்டி, மரத்தாலாகிய அல்லது உலோகத்தாலாகிய சட்டத்தை எடுத்துவிட்டு ஒரு பேனா கத்தியை பக்கவாட்டில் அடியில் வைத்து அதை மெதுவாக மேல் நோக்கி தூக்குவதன் மூலம் எடுக்க வேண்டும்.

### iv) அச்சை துரிதமான அல்லது மெதுவான முறையில் இறுக வைத்தல் :

ஒரு சிறிதளவு உப்பை கலவையில் சேர்த்தால் அச்சு வெகு விரைவில் இறுகிவிடும். மெதுவாக இறுக வேண்டுமென்றால் சிறிதளவு சர்க்கரையை சேர்க்க வேண்டும்.

### v) மிகவும் மென்மையான பொருளின் காலடிகளினுடைய அச்சுகளை செய்தல்:

மண், நுண்ணிய மணல் அல்லது மற்ற மென்மையான பொருளில் காலடிகளினுடைய அச்சுக்களில் செய்வதற்குமுன் அதனுடைய மேல்மட்டத்தின் மேல் செல்லாக் மற்றும் ஸ்பிரிட் கரைசலை மெல்லியதாக மூடியிருக்குமாறு தயார் செய்வது அவசியமானதாகும். ஸ்பிரிட்

ஆவியாகி செல்லாக் அந்த மென்மையான மேற்பகுதியை பிளாஸ்டரினுடைய எடையை தாங்கக்கூடிய அளவிற்கு கடினமாக்கி விடுகிறது. இதற்கு தெளிக்கும் துப்பாக்கி அல்லது இதே மாதிரி தெளிக்கும் கருவியை உபயோகிக்கலாம். பதிவு இருக்குமிடத்திலிருந்து சுமார் ஒரு கெஜ தூரத்தில் தெளிப்பானை வைக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் செல்லாக் கலவையை தெளிக்காமலேயே காற்றில் கலந்து மேல்மட்டத்தில் உள்ள காலடியில் ஒரு மென்மையான மேகம் போன்ற அமைப்பை ஏற்படுத்திவிடும். தாவர எண்ணெய்யை ஒரு மெல்லிய மட்டமாக உதாரணமாக தாவர எண்ணெய்யை கவனமாக உலர்ந்த செல்லாக்கின் மேல் மேலே 1-ல் கூறியபடி ஒரு தெளிப்பானால் தெளிக்க வேண்டும். பிளாஸ்டர் அச்சு உலர்வதற்கு ஏற்றவாறு மேல் மட்டம் தயாராக உள்ளது. இவ்வாறு செல்லாக் மற்றும் எண்ணெயினுடைய மட்டங்களை எளிதாக எடுப்பதற்கு வழக்கமாக முடிகிறது.

### vi) அச்சை அடையாளமிடுதல் :

அச்சு வெதுவெதுப்பான உடன் ஆனால் அது இறுகுவதற்கு முன்னால் ஒரு பிரதி எடுத்தும் பென்சிலினால் அதன் மேல் எடுக்கப்பட்ட தேதி, இடம், குற்றம் எண் மற்றும் காவல் நிலையம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். மேலும் விசாரணை அதிகாரி மற்றும் சாட்சிகளிலும் கையொப்பமும் அதில் போட வேண்டும்.

### சந்தேகப்படும் நபர்களினுடைய காலடிகளை ஒப்பிடுவதற்காக எடுத்தல் :

வெறும் பாதத்தினுடைய தடயத்தை எடுப்பதற்கு பாதத்தினுடைய உள்ளங்காலை மெல்லியதாக உள்ள அச்சுமையில் அழுத்தி கறுப்பாக்கி அதன் பிறகு அதை ஒரு சுத்தமான வெள்ளைத்தாளில் பதியவைக்க வேண்டும்.

உள்ளங்காலினுடைய உண்மையான அமைப்பு கிடைப்பதற்கு நான்கு வகையான காலடிகளை பல்வேறு விதங்களில் எடுக்க வேண்டும். 1) சாதரணமாக நிற்கும் நிலையில் 2) உள்பக்கத்திற்கு எதிராக அழுத்தினால் நிற்கும் நிலையில் 3) வெளி பக்கத்திற்கு எதிராக அழுத்தினாற்போல் நிற்கும் நிலையில் மற்றும் 4) நடக்கும்பொழுது.

### காலடிகளையும் மற்றும் காலணி தடங்களையும் அடையளாம் காணுதல் :

ஒரு காலணி அல்லது காலடிகளை அதனுடைய அளவு மற்ற அடிப்படையில் இரண்டு வகைகளாக அடையாளம் காணலாம். அவையாவன 1) ஒரு குழுவினுடைய எல்லா காலடிகளும் பொதுவாக உள்ள சிறப்பியல்புகளின் பிரிவை மற்றும் 2) தனிப்பட்ட சிறப்பியல்புகளை ஒரு நிலையான அடையாளம் காணுவதற்கு முன்னால் உள்ளது அவசியமானது. ஆனால் அது போதுமானது ஆகாது. இருந்தாலும் அவைகள் ஒரு சந்தேக நபரை வெளியேற்றுவதற்கு உதவும், ஒரு காலடி ரேகையினுடைய அடையாளத்தை நிருபிப்பதற்கு தனிப்பட்ட சிறப்பியல்புகளான மடிப்புக்கோடு குறைபவைகள் அல்லது கூடுதலான கால்விரல்கள், மேல்கோடுகளினுடைய தனித்தன்மை மற்றும் காலணி தடய வழக்கில் அணியும் அடையாளம் மற்றும் பழுதான அடையாளங்கள் ஆகியவற்றையும் கூட சோதனையிட வேண்டும். கைரேகைகளை சோதனையிட முறைப்படியே மேல்கோடுகளுடன் உள்ள ஒரு காலடியை சோதனையிட வேண்டும். காலணி தடயங்களில் இருக்கும் ஆணியினுடைய மற்றும் காணாமல் போனவையினுடைய எண்ணிக்கை ஒட்டுபோட்டு தைத்தவைகளின் எண்ணிக்கை, அதனுடைய அமைப்பு, அளவு போன்ற சிறப்பு இயல்புகளை அடையாளம் காணுவதற்காக கவனிக்க வேண்டும்.

அச்சை சுத்தமான வெள்ளை திசு அல்லது செலோபோன் தாளினால் சுற்றி கட்டி அதன் பிறகு அதை ஒரு பொருத்தமான மரப்பெட்டியில் வைத்து அதனுடைய எல்லாப் பக்கங்களிலும் பஞ்சு, பஞ்சு நூலிழை, மரத்தூள் , வைக்கோல் துண்டுகள் அல்லது தாள்கள் ஆகியவற்றை மெத்தென்று திணித்து வைக்க வேண்டும். ஒன்றுக்கு மேலான அச்சுகளை ஒரு பெட்டியில் அனுப்பக்கூடாது.

உடையக்கூடிய தன்மையுள்ள சாட்சியங்களான அச்சுகளை, பதிவுகள் எடுக்கப்பட்ட கண்ணாடிகள் முதலியவற்றை வல்லுநர்களுக்கு நேரடியாக ஒரு தனிப்பட்ட நபரின் மூலம் அனுப்புவது தான் எப்பொழுதும் நலமானதாகும்.

* * * *

# CONTENTS

## பொருளடக்கம்


| வ.எண் | அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கூிஞ்ஞாள முறையில் புலன் (பொது) விசாரணை (வெளிப்படையான சாட்சியங்கள் - குற்றம் நடந்த இடத்தைப் பார்வையிடுதல் - நிபுணர்களின் வருகை). | … | |
| 2. | குற்றம் நடந்த இடம், குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த தடயங்கள்: (குற்றம் நடந்த இடம் - குற்றம் நடந்த இடத்தை பாதுகாத்தல் - குற்றம் நடந்த இடத்தை பார்வையிடுதல் - வெளிப்படையான சாட்சியங்கள் - கறைகள் - முடி-கண்ணாடித் துண்டுகள், நூல்கள் - துணி — கயிறு போன்ற பொருட்கள் - மண் - வர்ணம், தூசி, உலோக பொருட்களின் துணுக்குகள் - உணவுப்பொருட்கள். | … | |

| | | | |
|---|---|---|---|
| 3. | மோட்டார் வாகன விபத்துக்கள்.<br>(விபத்து நடந்த இடம் - இறந்து போனவரைப் பற்றியோ அல்லது காயமடைந்தவரைப் பற்றியோ விசாரித்தல் - சந்தேகப்பட்ட வாகனத்தைப் பற்றி விசாரித்தல் - சந்தேகப்பட்ட டிரைவர்களைப் பற்றி விசாரித்தல்). | ... | |
| 4. | ஒரு நபருக்கு எதிராக செய்யப்படும் குற்றங்கள் | ... | |
| 5. | துப்பாக்கிச் சூடு சம்பந்தப்பட்ட வழக்குகள். | ... | |
| 6. | தீ விபத்து சம்பந்தப்பட்ட வழக்குகள்<br>(விசாரணைக் காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்). | ... | |
| 7. | வீட்டை உடைத்துக் கொண்டு உட்புகும் குற்றங்கள் | ... | |
| 8. | கள்ளநோட்டுகள் / கள்ள நாணயங்கள்<br>(தண்ணீர் முத்திரைகள் - நோட்டுகளில் காணப்படும் அடையாளங்கள் - பாதுகாப்பு கோடுகளை எவ்வாறு தயாரிப்பது, உண்மையான நோட்டுகளை எவ்வாறு அடையாளம் கண்டு பிடிப்பது மற்றும் இவைச் சம்பந்தமான நிபுணர்களின் கருத்து — கள்ள நாணயங்கள் - அதைச்செய்வதற்குண்டான பொருட்கள் - இவைகளைச் சேகரித்தல் முதலியன). | ... | |
| 9. | மனிதர்கள் விஷம் அருந்தியதாக, அவர்களுக்கு விஷம் கொடுத்ததாக சந்தேகப்படும் வழக்குகள். | ... | |
| 10. | கால்நடைகளுக்கு விஷம் கொடுத்ததாக சந்தேகப்பட்ட வழக்குகள்.<br>..2.. | ... | |
| 11. | கரு சிதைத்தல். | ... | |
| 12. | கற்பழிப்பு வழக்குகள் | ... | |
| 13. | தாமிர ஒயர் திருட்டு | ... | |
| 14. | மோட்டார் வாகன திருட்டுகள். | ... | |
| 15. | சாட்சியங்களைச் சேகரித்தல், கட்டுதல் மற்றும் அனுப்புதல்.<br>(குற்றத்தில் சம்பந்தப்பட்ட சாட்சி பொருள்களைச் சேகரிப்பதும் - வழக்கில் சம்பந்தப்பட்ட பொருட்களை சேகரிக்கும் முன்பாக | ... | |

| | | | |
|---|---|---|---|
| | வழக்குக்குத் தேவைப்பட்ட காரியங்களைச் செய்வது). | | |
| 16. | பதிவேடுகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணைச் செய்ய வேண்டிய முறைகள்.<br>(மாதிரி கையெழுத்து வாங்கவேண்டிய முறைகள் - மேற்கண்ட மாதிரி கையெழுத்துகளையும் மற்ற பதிவேடுகள் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டிய முறைகள்). | | |
| 17. | குற்றத்தையும் மற்றும் குற்றவாளிகளையும் கண்டு பிடிப்பதில் கைரேகைகளும் அவற்றின் உபயோகமும்.<br>(கைரேகை பதிவுகள் - குற்றத்தைக் கண்டுபிடிக்கவும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும் - உதவும் முறைகள் - காவலதிகாரிகள் குற்றவாளிகளின் கைரேகை எடுப்பதற்குண்டான அதிகாரங்கள் - குற்றவாளிகளின் கைரேகைகளை எடுக்க வேண்டிய விதம் - பிரேதத்தின் கைரேகை பதிவை எடுக்கவேண்டிய முறைகள் - குற்றம் நடந்த இடத்தில் குற்றவாளிகளின் கைரேகைகளைக் கண்டுபிடிக்க கைரேகைகளை தேடும்விதம், குற்றம் நடந்த இடத்தில் கிடைக்கும் கைரேகை பதிவுகளின் விதங்கள் (பொருட்களின் மீது கிடைக்கும் கைரேகை பதிவுகள், மறைந்து இருக்கும் கைரேகை பதிவுகள்) கைரேகை பதிவுகளை சேகரித்தல், அந்தக் கைரேகைகள் கலையாமல் அதைப் கட்டுதல் - அந்த பொருட்களை கைரேகை பதிவு கூடங்களுக்கு அனுப்பும் முறை.) | | |
| 18. | காலடிகள் மற்றும் காலணி தடயங்கள்<br>(காலடி பதிவுகள் மற்றும் காலணிகளின் பதிவுகள் - காலடி பதிவுகளை திரும்பவும் தயாரித்தல் (புகைப்படம், தேடுதல், மோல்டு எடுத்தல் (casting) சந்தேகப்படும் நபர்களின் காலடி பதிவுகளை ஒப்பிட்டுப் பார்க்க எடுத்தல்- காலடி பதிவுகள் மற்றும் காலணி பதிவுகளின் அடையாளங்கள்). | | |